www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
JUDE
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ரூபா 11/00
ஒக்.18–24,1998

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 279

## அமிர்தலிங்கத்தின் வாளும் பிரபாவின் ஹெலியும்



## சாண் ஏற முழம் சறுக்கும்



## இன்றும் நான் விளையாட்டுப்பிள்ளை



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கைதல்ல, கடத்தல்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

மட்டக்களப்பில்
30ற்கு மேற்பட்ட தமிழர்கள்
மர்மமான முறையில்
கடத்தப்பட்டனர்!

உரிய தருணத்தல்
உரத்துக் குரல் கொடுக்கப்பட்டதால்
வேறு வழியின்றி
அவர்கள் விடுதலையாகினர்!

விசாரணையின் பின்னர்
விடுவிக்கும் நோக்குடன்
கைது நடந்திருந்தால்,
தாமே கைது செய்தனர்
என்பதை படையினர்
ஏன் மறைக்க வேண்டும்?

எனவே, பிரச்சனை
பெரிதாகும் அறிகுறி
தெரிந்த காரணத்தால்தான்
கடத்தப்பட்டவர்கள்
உயிர்தப்பியுள்ளனர்!

கைது வேறு;
கடத்தல் வேறு!

கைது என்பது-
அதற்கு அதிகாரமுள்ளோரால்,
உரிய முறையில்-
சட்ட விதிகளுக்கு அமைய
மேற்கொள்ளப்படுவதாகும்!

யார் கைது செய்தனர்?
ஏன் கைது செய்தனர்?
எங்கு வைத்திருக்கின்றனர்?
போன்ற விபரங்கள்
கைதாவோரின் உறவுகளுக்கு
உடன் தெரிவிக்கப்படவேண்டும்!

அதுதான்
சட்டபூர்வமான கைது!

மட்டக்களப்பில்
நடைபெற்றது
கைது அல்ல;
கடத்தல்!

கடத்தப்படுபவர்கள்
விடுதலையாவது
அரிதிலும் அரிது!

1990களில்
மட்டக்களப்பிலும், அம்பாறையிலும்
கடத்தப்பட்ட பலநூறுபேர்
படுகொலையாகினர்!

மறுபடியும் ஓர்
ஆட்கடத்தல்...!
மனித வேட்டைக்கு
ஆயத்தம் நடக்கிறதா?
என்று அஞ்சுகின்றனர்
தமிழ் மக்கள்!

கடத்தப்பட்டவர்கள்
விடுதலையாகியுள்ளனர்.
கடத்தியது யாரென்பது
தெரிந்துவிட்டது!

கடத்திச் சென்றவர்கள்
அணிந்திருந்தது
சீருடையாக இருந்தாலும்-
நடந்துகொண்டமுறை
சட்டத்திற்கு புறம்பானது!

ஆகவே, கடத்தியவர்களுக்கு
வழங்கப்பட்ட
தண்டனை என்ன?
அதுதான் முக்கியம்!

தண்டனை மட்டுமல்ல;
வெறும் கண்டனம் கூட
சம்பந்தப்பட்டவர்கள் மேல்
பாய்ந்திருக்குமா?

தமிழ் மக்கள் மீதான
அத்துமீறல்களுக்கு,
இதுவரை எந்த அரசும்
தானாக முன்வந்து
நடவடிக்கை எடுத்ததில்லை!

அந்த மரபை
இன்றைய ஆட்சியாளரும்
பாதுகாத்து வருகின்றனர்!

தென்னிலங்கையில்
கடந்த ஆட்சிக்கால
மனித உரிமை மீறலுக்காக
பொலிஸ் அதிகாரிகள் சிலர்
பணி நீக்கம் செய்யப்பட்டனர்!

தமிழ் மக்கள் மீதான
கொடுமைகள் இழைத்தவர்களுக்கு
எந்த ஆட்சிக்காலத்திலும்
நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை!

அதனைத் தெரிந்துதான்
கடத்தல்கள் தொடர்கின்றன;
புதைகுழிகள் பெருகுகின்றன;
அத்துமீறல்கள் விரிகின்றன!

இதனைக் கூறுவதால்
இனவாதக் கண்ணோட்டம்
என்று அர்த்தமாகாது!
இதுதான் யதார்த்தம்!

அப்படியில்லை என்று
50 ஆண்டுகால வரலாற்றில்
எவராவது உதாரணம்
எடுத்துரைத்தால்
அதனை 'அதிசயச் செய்தி'யாக
வெளியிட ஆவல்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## புற இருளும் அக இருளும்

ஒளியை விரும்பாதவர் எவருளர்? ஒவ்வொருவரும் தம்மைச் சூழ்ந்துள்ள புற இருளையும் தம்முள்ளிருக்கும் அக இருளையும் நீக்கவே விரும்புகின்றனர். புற இருளை அகற்ற விளக்கேற்றுகிறோம். அக இருளை நீக்க இறையருள் என்னும் ஒளிச்சுடரை ஏற்ற வேண்டும்.

தீபாவளித் திருநாளும் ஒளி அருளும் நன்னாள்தான். அமாவாசைக்கு முன்னிரவு எங்கும் சூழ்ந்திருக்கும் இருளை அகற்ற வரிசை வரிசையாக ஒளிவிளக்குகளை ஏற்றுகிறோம். அதே போன்று எமது அகத்தில் நிறைந்திருக்கும் அஞ்ஞான இருளை அகற்றவும் அம்பாள்மீது பக்தி செலுத்தி ஒளியூட்டுவோம்.

அக இருளை அகற்ற அம்பிகையை நாடுவதுதான் சிறந்த வழி. அவளுடைய அருளை இலகுவாகப் பெற்று விடலாம். எமது இல்லங்களில் தந்தையிடம் எப்பொருளையும் கேட்டுப் பெறுவதில் சில வேளைகளில் சங்கடங்கள் இருக்கலாம். ஆனால் தாயிடம் விண்ணப்பித்தால் சுலபத்தில் காரியம் கைகூடிவிடும்.

நாம் செய்யும் குற்றங்களை அன்னை மன்னிப்பாள்; அதே வேளை குற்றங்களைப் பொறுக்காமல் தண்டனை கொடுப்பதிலும்-தந்தையைவிட தாய் கடுமையாக இருப்பாள். தீபாவளி பற்றிய கதை இதனைத்தான் நமக்கு உணர்த்துகிறது. தான் பெற்று வளர்த்து அன்பூட்டிய தாயே தனது மகன் புரிந்த கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுந்து அவனையே வதைக்கிறாள். அன்போடு அரவணைத்த அதே கைகள், அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட-அன்பை அகற்றி விட்டு அழிவுத் தொழிலில் ஈடுபடுகின்றன.

தீபாவளித் திருநாளில் தீமை இருளை அகற்றி, அகத்தில் தூய்மை ஒளி வீச அம்பிகையைப் பிரார்த்திப்போமாக.

சாந்தாதேவி அருணாசலம், வெள்ளவத்தை.

## ஆன்மீகம்



### உமரிப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் தீர்ப்பு

ஹஜ்ரத் உமரிப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஒரு மனிதரை ஓரிடத்திற்கு அதிகாரியாக நியமித்தார்கள். அந்த மனிதர் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் என்ற கொடுங்கோலனிடம் அதிகாரியாகப் பணியாற்றியவர் என அவரைப்பற்றிக் கூறினார்கள். உடனே உமரிப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் அந்த மனிதரை பதவி நீக்கம் செய்துவிட்டார்கள். உடனே அம்மனிதர்,

"நான் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃபிடம் கொஞ்சக்காலம்தான் வேலை பார்த்தேன்!" என்றார்.

"நீ கெட்டவனாக ஆவதற்கு அவனுடன் ஒரு நாளைக்கு அல்லது அதைவிட குறைவாக இருந்தாலே போதுமானது," எனக்கூறினார்கள்.

சகவாசத்தின் பலன் அவசியம் ஏற்படவே செய்யும். தக்வாவுடையவர்களுடன் சேர்ந்திருப்பவருக்கு அவரையறியாமலேயே அசாதாரண தக்கவா ஏற்பட்டுவிடும்.

பாவம் புரிபவர்களுடன் சேர்ந்திருப்பவருக்கு பாவத்தின் தன்மை ஏற்படவே செய்யும். இதனால்தான் தீயவர்களுடன் சேரக்கூடாது எனத் தடுக்கப்படுகிறது.

"நல்லோருடன் சேர்ந்திருப்பவா கஸ்தூரி வியாபாரியுடன் பழகுபவரைப் போன்றவராவார். கஸ்தூரி கிடைக்காவிட்டாலும் அதன் வாசனையினால் மூளைக்கு இன்பம் ஏற்படவே செய்யும். தீயோருடன் சேர்ந்திருப்பவர், நெருப்பு உலை வைத்திருக்கும் கொல்லனுடன் பழகுபவரைப் போலாவார். நெருப்பு பொறி படாவிட்டாலும் அதன் புகை அவர்மீது படியவே செய்யும்!" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

தொகுப்பு: பெளக்கியா மன்சூர், மருதமுனை-03.

## கவிதைப் போட்டி இல.276

### பரிசுக்குரிய கவிதை

### யார் வருவார்?

இரவிரவாய்ச் செம்மணியில்
இரகசியமாய் வெளிச்சம் போட்டு
வேலை செய்த ஆட்களை
ஒளித்திருந்து பார்க்கையிலே,
ஒரு குழியில் விழுந்து நான்
ஒரு கையை உடைத்துவிட்டேன்!
கண்டதைச் சொல்லக் காத்திருக்கேன்
யார் வருவார் இக் கதை கேட்க?

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



**வாழ்வே மாயம்**

அங்கங்கள் இழந்து அநாதைகளாகி
பொங்கும் இன்பங்களனைத்தும் புதைத்து
தங்கும் ஓரிடமும் தற்காலிக மென்றே
இங்கே வாழுகிறோம்; இனி என்ன உண்டு?

பசறையூர்- மல்லிகா பத்மநாதன்.

**நிவாரணம்**

கரத்துக்கு
கயிறு
வயிற்றுக்கு...?

செளஜன்பா-கிளிநொச்சி.

**ஏக்கம்?**

பாத்துப் பாத்துக் கண் பூத்துப் போச்சு!
காத்துக் காத்துக் கால் மரத்துப் போச்சு!
போனவர் வீடு திரும்பவில்லை;
நானவரை எங்கே தேடுவேன்?

சி.வல்லிபுரம்-கொழும்பு-13.

**முறிவு**

குண்டுச் சத்தத்தால்
முண்டியடித்து ஓடினேன்!
முறிந்து போனது-என்
கையெலும்பு தான்...

செல்வி ப்ரியநேசி- கருத்துறை (தெற்கு)

**ஏங்காதே!**

சாவுகளின் ஓலங்களைக்கேட்டு
தூங்கியதோ செம்மணி?
அடிவானின் இருளைப் பார்த்து
ஏங்குதோ கண்மணி?
ஏங்காதே கண்மணியே!
நாளைவரும் விடியலுக்கான
இருள் தான் இன்றுனக்கு!

கே.றஞ்ஜனா-வவுனியா.

**ஏக்கம்!**

உடைந்து போன நேசம்
உயிர் பெறுவதெப்போ?
ஊனமான தேசம்
உருப்படுவ தெப்போ?

ரேணுகா நிபாய்தீன்-
ஏறாவூர்-02.

**புரியுமா..?**

உடலின் ஊனம்..
கைகளில் தெரியும்;
உள்ளத்தின் ஊனம்...
யாருக்குப் புரியும்..?

தயாநிதி-வடகோப்பாய்.

## கவிதைப் போட்டி இல.279



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 24.10.1998

**முகவரி:** கவிதைப் போட்டி இல.279
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## வாசக(ர்)சாலை

முரசே!

நீ சுமந்து வந்த 'காதிலைப்பூ கந்தசாமி'யாரின் 'பொதி தாலாட்டு', 'பயோடேட்டா', 'எலும்புகள் பாடல்' என்பன சூப்பர். என் பாராட்டுக்கள்.

கே.கமலினி, பலாங்கொடை.

○◆

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் என்னைக் கவர்ந்துள்ளன. இருந்தும் 'முள்நிலவு' என்னை விட்டு நீங்காத இடம் பிடித்துவிட்டது. முரசே சென்ற வாரம் 'முள்நிலவு' என்னை அழவைத்து விட்டது.

ஈஸ்வரன், அம்மன், வவுனியா.

○◆

முரசே!

திக்கெல்லாம் தித்திக்கும் உன்னுள் நீ கொண்டு வரும் அனைத்தும் பிரமாதம். அதிலும் இரும்பு மனிதர் 'சதாமின்' சரிதை, 'கவியரசுவின்' சரிதை 'அரசியல் தொடர்', தெவிட்டாத 'தேன்கிண்ணம்' போன்ற பலதும் படு பிரமாதமே!

அன்சார் அஹமட், ஏறாவூர்-3.

○◆

என் அன்பின் முரசே!

முரசில் பாசங்கொண்ட பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். வெள்ளிக்கிழமைகளில்தான் எமக்கு முரசு கிடைக்கிறது. உன்னில் நீ தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். 'அரசியல் தொடர்', 'இலக்கிய நயம்', 'இடி அமீனின்' அதிர் இடி, 'முள்நிலவு' அருமையிலும் அருமை. கிருஷ்ணகாந்தை இழந்து தவிக்கும் நிலாவுக்கு நிம்மதி கிடைக்குமா?

கந்த-ஞானமுத்து, கைதடி.

○◆

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
பக்ஸ்- 074-513266

### வெளிப்பாடு



அன்பார்ந்த முரசுக்கு:

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நடைபெற்ற படுகொலைகளை அற்புதன் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். சிறந்த வரலாற்று ஆவணமாக மாறிவரும் அரசியல் தொடரில் இப்படுகொலைகள் இடம்பெறுவது அவசியமானதே.

செ.ஜெகசோதி, மட்டக்களப்பு.

### ஜனாதிபதி கூறிவிட்டாரே!

முரசே!

பேரினவாதம் மீண்டும் தலையெடுப்பதாகவும், அதனுடன் ஆட்சியில் உள்ளோரும் கைகுலுக்குவதாகவும் இராஜதந்திரி கூறியிருந்தார். அதில் எள்ளளவும் தவறு இல்லை. 'தமிழ்க் கடைகளில் சிங்கள மக்கள் பொருட்களை வாங்கக் கூடாது' என்று மலையகத்தின் சில பகுதிகளில் பிரசாரம் நடக்கிறது. இரத்தினபுரியில் ஆளும் கட்சிப் பிரமுகரே இனமோதலை தூண்டிவிடுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக ஜனாதிபதியும் "தமிழர்கள் இந்த நாட்டுக்கு சொந்தமற்றவர்கள்" என்று கூறிய செய்தியும் வெளியாகிவிட்டது. இராஜதந்திரி கூறியதை இவை உறுதிப்படுத்துகின்றன.

ஆறுமுகம்,
நுவரெலியா.

### துடிக்கிறது மனம்

முத்தான முரசின் மூலம் வாரந்தோறும் எனை நாடிவரும் 'முள்நிலவு' தொடர்கதை மிகச் சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் உள்ளது. கணவனின் முகம்கூடக் காணாமல் விதவையாகிவிட்ட நிலாவை நினைத்தால் நெஞ்சு கனக்கிறது. 'கிரைம் கதைகளில் மட்டுமல்ல, சமூக நாவல்களிலும் தான் சக்கரவர்த்தியே' என்பதை நிரூபித்துள்ள எழுத்தாளர் ராஜேஷ்குமாருக்கு முரசினூடாக எனது வந்தனங்கள். அன்பின் முரசே, உனைப் பிரிந்து மறுவாரம் வரை இருக்க முடிவதில்லை. 'நிலாவுக்கு என்ன நேர்ந்ததோ?' எனத் தவிக்கின்றது மனம்.

எஸ்.பிரேம் ஆனந்த், அக்கரைப்பற்று-9.

### விதி விலக்கல்ல

வன்னியில் கொட்டிய மழை பற்றிய நாரதரின் விவரிப்பு கச்சிதம். பேரினவாதப் பூதத்தை தோலுரித்துக் காட்டிய இராஜதந்திரியாருக்கும் பாராட்டு. தென்னிலங்கை ஆட்சிகள் எல்லாம் பெளத்த மதபீட ஆசிகளுக்காக காத்திருப்பதே வழக்கம். சந்திரிக்கா அரசு மட்டும் விதி விலக்காக முடியாது.

எம்.ராமநாதன், வவுனியா.

### மெளனம் ஏன்?

"இந்த நாட்டுக்குச் சொந்தமில்லாத சிறுபான்மையினர்" என்று ஜனாதிபதி அவர்கள் கூறியும் தமிழ்க் கட்சிகளோ, தமிழ் புத்திஜீவிகளோ ஏன் மெளனம் சாதிக்கின்றனர்? குமார் பொன்னம்பலத்தின் பகிரங்கக் கண்டனம் மட்டுமே சற்று ஆறுதலாக இருந்தது.

கா.இந்திரன், கொழும்பு-11.

### இனி ஏன் தோண்டவேண்டும்?

முரசுக்கு;

'அரசியல் அலசலும்', 'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டும் மிகவும் அருமை. எக்ஸ்ரே நடந்ததைச் சொல்கிறது. அலசல் நடக்கப் போவதைக் கூறுகிறது. இரண்டும் துல்லியம் என்பதை நம் அனுபவம் உணர்த்திவிடுகிறது. செம்மணி விவகாரத்தில் இராஜதந்திரி கூறியவை நூற்றுக்கு நூறு பலித்துவிட்டன. இனித் தோண்டி என்ன புண்ணியம்? எது தெரியக்கூடாது என்று நினைக்கிறார்களோ அதற்கான மறைப்புக்கள் நடந்துவிட்டபின் தோண்டி என்ன, விட்டென்ன?

மு.சர்வணபவன், திருமலை.

### காலத்திற்கேற்ற நயம்

அன்பு முரசே!

ரசிகனின் 'இலக்கிய நயம்' சில வாரங்களாக வித்தியாச சுவை தந்து வருகிறது. பாரதியின் கவிதைகளுக்கு ஏற்ற இலக்கியக் காட்சிகள் தந்து அசத்தினார் ரசிகன். பெண்கள் தங்கள் வலிமையை பலதுறைகளிலும் காண்பிக்கும் காலம் இது. 'இலக்கிய நயம்' காலத்துக்கு ஏற்ப கருத்து மழை பொழிந்துவிட்டது. பாராட்டுக்கள்.

எஸ்.வாணி, கொழும்பு-12.

### மீண்டும் கிழக்கில்?

முரசே!

இக் கடிதத்தை ஃபக்ஸ்மூலம் உனக்கு அனுப்புகிறேன். அற்புதனின் 'அரசியல் தொடரில்' கிழக்குப் படுகொலைகள் அம்பலமாகி, இக்கோரம் அறியாதாரையும் அதிரவைத்து வருகின்றன. இந்த நேரத்தில் மட்டக்களப்பு தும்பாலஞ் சோலையில் 32 தமிழர்கள் கடத்தப்பட்ட செய்தி வெளியாகியிருந்தது. முரசில் கூறுவது நடப்பதுண்டு. அதுபோல முரசில் சில பழைய சம்பவங்களை பற்றி விவரிக்கும்போது அதே போன்ற சம்பவங்கள் நாட்டில் நடப்பதும் உண்டு. கார்லோஸ் தொடரில் ரயில் குண்டு தாக்குதல் தொடர்பாக விவரங்கள் வெளியான சமயம், தெகிவளையில் ரயில் குண்டு வெடித்ததாக ஞாபகம்.

முரசே! ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாது என்று முரசு கூறிவருவதும் கலப்பில்லாத உண்மை.

க.செல்வநாதன், மட்டக்களப்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# "பொம்மை ஆட்சியின் தலைமை தகர்ப்பு!"

## யாழ் மாநகர சபை குண்டு வெடிப்பு பற்றி விவரிப்பு

**யா**ழ் மாநகர சபைக் கட்டடத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பு தொடர்பாக புலிகள் இதுவரை உத்தியோகபூர்வமாக உரிமை எதுவும் கோரவில்லை.

சமீபத்தில் வெளியாகியுள்ள 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் கூரைக்குண்டு பற்றிய பாராட்டு இடம் பெற்றுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; 12.09.98 அன்று நல்லூரில் நடந்த ஒரு குண்டு வெடிப்பு யாழ் குடாநாட்டை கட்டியாள முயன்ற இராணுவ நிர்வாகத்தின் முப்பெரும் தலைமைகளையும் அழித்து இராணுவ நிர்வாகத்தை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

ஆக்கிரமிப்பை நிலை நிறுத்த முயலும் குடாநாட்டின் இராணுவத் தலைமையையும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டல் என்ற போர்வையில் குடாநாட்டின் இராணுவ நிர்வாகத்திற்கு துணையாக இருக்கும் பொலிஸ் தலைமையையும் குடாநாட்டிற்கான சிவிலியன் தலைமை என்ற பெயரில் சிறீலங்கா நியமித்த அதன் பொம்மை ஆட்சியின் தலைமையையும் அந்தக் கூரைக் குண்டு காவு கொண்டுவிட்டது.

போராடும் மக்களின் நிலங்களைப் பிடித்தால் போராட்டம் சிதைந்துவிடும் என்று எதிர்வு கூறிய சிறீலங்கா கணிப்பீடு வெறும் கனவாகிவிட்டது.

யாழ் குடாநாட்டை ஆட்சிசெய்ய இராணுவ நிர்வாகத்தை நிறுவி, இதை ஒரு சிவிலியன் நிர்வாகமாகக் காட்ட ஒரு மோசடித் தேர்தலும் நடத்தப்பட்டது. தனது இராணுவ நிர்வாகத்திற்கு சிவிலியன் முகமூடி அணிவித்தது.

ஆயினும் சந்திரிக்கா அரசாங்கம் வகுத்த நேர சூசிப்படி குடாநாட்டில் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை.

அந்த நிர்வாகத்தை சீர்குலைத்து விடுதலை உணர்வை வெளிப்படுத்துவது போராட்டத்தின் பொதுப் பண்பு, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"யாழ் குடாநாட்டை கைப்பற்றினால் புலிகளது போர்ப்பலம் நசுக்கப்பட்டுவிடும் என்று கருதப்பட்டது. அந்த நம்பிக்கைகள் வன்னிக் களத்தில் புதையுண்டு போயுள்ளன. யாழ்ப்பாண சமரின்போது இருந்ததைவிட பன்மடங்கு அதிக பலத்துடன் புலிகள் திகழ்கின்றனர்" என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளது.

### எச்சரிக்கை

யாழ் குடாநாட்டில் மாநகர மேயர் பலியான பின்னர் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் பொது எச்சரிக்கை ஒன்று 'விடுதலை விரும்பிகள்' என்ற பெயரில் வெளியானது. அது முரசிலும் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

'இதுவே இறுதி எச்சரிக்கை. இனிமேல் தனியாக கூறமாட்டோம்!' என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த எச்சரிக்கை வெளியாகி ஒருமாத காலத்திற்குள் கரவெட்டி பிரதேசசபை ஈ.பி.டி.பி. உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவர் புலிகளால் கொல்லப்பட்டதாகவே முரசுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இவை தொடரும் என்று நம்பப்படுகிறது. இதனால் சகல கட்சிகளையும் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் பதவி விலகுவது குறித்து யோசித்து வருகின்றனர்.

எனினும், ஈ.பி.டி.பி.யின் யாழ் கமிட்டி வெளியிட்ட செய்தியில், அரசியல் குரோதம் காரணமாகவே தமது பிரதேச சபை உறுப்பினர் கொல்லப்பட்டதாக குற்றம் சாட்டியுள்ளனர். புலிகள்தான் காரணம் என்று கூறவில்லை. வேறு ஒரு தமிழ்க் கட்சிமீதும் சந்தேகப்படுவதாகத் தெரிகிறது. ■

# தமிழர்கள் மூத்த குடிமக்கள்

## ஜனாதிபதிக்கு பரா பதிலடி!

"**த**மிழ் மக்கள் இந்த நாட்டுக்கு உரித்துடையவர்கள் அல்ல" என்று தென்னாபிரிக்க தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி சந்திரிக்கா பேட்டியளித்துள்ளார்.

இது வரலாற்றை திரிபுபடுத்தும் முயற்சியாகும். இவ்வாறானவர்களிடம் நாம் எவ்வாறு நீதியை எதிர்பார்க்க முடியும்? இவ்வாறு கூட்டணியின் முக்கிய தலைவரான ஜோசப் பரராஜசிங்கம் எம்பி கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள், சிங்கள மக்கள் இங்கு குடியேற முன்னரே வாழ்ந்து வரும் மூத்த குடிமக்கள் என்றும் ஜோசப் பரராஜசிங்கம் கூறினார்.

இதற்கிடையே சமீபத்தில் கூடிய கூட்டணியின் பொதுச்சபை கூட்டத்தில் ஜனாதிபதியின் மேற்படி பேட்டி தொடர்பாக எக்கருத்தும் கூறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னர் ஒரு முறை ஜனாதிபதி தமிழ் மக்கள் தொடர்பாக கூறியதாக வெளியான தகவல் ஒன்றை மறுக்க இரா.சம்பந்தனின் பெயரில் நீலன் திருச்செல்வம் அறிக்கை விட்டு ஜனாதிபதியை ஆதரித்ததும் குறிப்பிடத்தக்கதாகும். ●

# நிரம்பி வழியும் மருத்துவமனைகள்!

## எட்டு நாட்கள் மகனைத் தேடிய தாய்!

சமீபத்திய கிளிநொச்சி சமரை அடுத்து தென்னிலங்கையின் பிரதான மருத்துவமனைகள் நிரம்பிவழிகின்றன.

சண்டை நடைபெற்ற நாட்களில், ராகம மருத்துவமனையில், காலை முதல் மாலை வரை தொடர்ந்து சிகிச்சையளித்த டாக்டர் ஒருவர் களைப்பினால் நோயுற்றார்.

சிப்பாய்களின் குடும்பத்தினர் தங்கள் உறவினர்களின் கதி அறிவதற்காக இராணுவத் தலைமையகத்துடன் தொடர்ந்து தொடர்பு கொண்டவண்ணம் இருந்தனர்.

நகர மருத்துவமனைகளின் வாயில்களில், வெகுதூரத்திற்கு அப்பால் உள்ள கிராமங்களில் இருந்து வந்த ஏழைகள் குழுமியிருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் நகர விடுதிகளில் சென்று தங்குவதற்கு வசதியற்றவர்கள்.

ஜயவர்த்தன மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தனது மகனைப் பார்வையிட கந்தளாயிலிருந்து வந்த ஒரு வயோதிப தாயார் தன் மகனைப் பார்வையிட எட்டு நாட்கள் பல இடங்களுக்கும் அலையவேண்டி இருந்தது. இவருடைய ஒரு மகனை ஏற்கனவே போர் முனையில் இழந்துவிட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 300ற்கு மேற்பட்ட சிப்பாய்களுக்கு 30 மணிநேரம் இடைவிடாத சிகிச்சையளித்து களைத்துப் போனார்கள் மருத்துவர்களும், ஊழியர்களும்.

விமான நிலையத்தில் இருந்து மருத்துவமனைக்கு வருவதற்கு போதுமான அம்பியூலன்ஸ் வண்டிகள் கிடையாது. சில சந்தர்ப்பங்களில் 'டாட்டா' பஸ் வண்டிகளில் ஒருவர் மேல் ஒருவராக படுக்கவைக்கப்பட்டும் படையினர் கொண்டுவரப்படுவர்.

மேற்கண்ட தகவல்களை 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டுள்ளது. காயப்பட்ட தங்களுக்கு அளிக்கப்படும் வசதிகள் தொடர்பாக படையினர் சிலர் அதிருப்தி தெரிவித்ததாகவும் சண்டே ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது. ■

# ஆள் திரட்டும் பிரசாரம்

**மூ**ன்றாம் கட்ட ஈழப்போர் தீவிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து கிழக்குப் பகுதியெங்கும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்காக போர்ப்பிரச்சார உத்திகளில் புலிகள் இயக்கத்தினர் முழு மூச்சாக ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர் தரத்திலுள்ளோரையும் பாடசாலையை விட்டு விலகியோரையும் இயக்கத்தில் இணைப்பதில் புலிகள் கடுமையாக உள்ளனர்.

பல பகுதிகளில் பெற்றோர்களை அழைத்தும் புலிகள் கூட்டங்களை நடாத்தி வருகின்றனர். யுத்த சூழ் நிலைகளின் அவசியத் தேவைகளைப் பெற்றோர் புரிந்து கொண்டு பிள்ளைகளை அழைத்துச் செல்வதில் குறுக்கீடு செய்யாமல் இருப்பதற்காகவுமே இத்தகைய பிரசாரங்கள் நடாத்தப்படுகின்றன. ●

# ஐ.தே.கட்சியின் இராணுவ ஆலோசகர்

## இரு கட்சிகளின் சதுரங்கம்

**ஐ**க்கிய தேசியக் கட்சியின் இராணுவ ஆலோசகராக லக்கி அங்கம கடமையாற்றுகிறார். இவர் இராணுவத்தில் மேஜர் ஜெனரலாக இருந்து ஓய்வு பெற்றவர்.

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்காலத்தில் ஆட்சி அமைத்தால் பாதுகாப்புச் செயலாளராக இவர் நியமிக்கப்படலாம்.

சமீபத்தில் கிளிநொச்சி சமர் தொடர்பான தகவல்களை தனது தொடர்புகள் மூலம் உள்ளிருந்து பெற்று எதிர்க்கட்சித் தலைவருக்கு கொடுத்தது இவர்தானாம்.

அத்தகவல்களையே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார் ரணில். எனினும் அத்தகவல்களில் கூறப்பட்ட ஆயுத தளபாடப் பட்டியலில் கரும்புலித் தாக்குதலில் அழிந்துபோனவையும் உள்ளன. டாங்கிகள் மூன்று புலிகளால் கைப்பற்றப்படவில்லை. தகர்க்கப்பட்டன.

தாக்குதலுக்கு முன்பாக கிளிநொச்சியில் படையினர்வசம் இருந்த ஆயுத தளபாடங்களின் பட்டியல்தான் ரணிலுக்கு கிடைத்தது. அதில் அழிந்தவை எவை, புலிகளின் கைகளுக்கு போனவை எவை? என்பது அவர் அறியாத தகவல்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டங்களும் இனம் தெரியாதோரால் குழப்பப்பட்டும் உள்ளன. 'அக் கூட்டங்களில் கிளிநொச்சிச் சமர் தொடர்பாக பேசப்படும் என்று கருதியே குழப்பினர்' என்று ஐ.தே.கட்சி பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார்.

யுத்தம் என்பது தென்னிலங்கையின் இரு பெரும் அரசியல் கட்சிகளின் சதுரங்க விளையாட்டாக மாறியுள்ளதை சமீபகால நிகழ்வுகள் அம்பலப்படுத்தி வருகின்றன என்று கூறப்படுகிறது.

# "மக்களின் சம்மதத்துடனேயே தடுத்துவைப்பு!"

## சட்டமா அதிபரின் அதிரடிப் பேட்டி

**அ**ண்மையில் கொழும்பிலுள்ள விடுதிகள் திடீரென மூடப்பட்டதும் எவ்வித முன்னறிவிப்புமின்றி அவ் விடுதிகளில் தங்கியிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டதும், அவர்களுக்கு எவ்வித மாற்று வசதிகள் செய்து கொடுக்காமல் அரசு மௌனமாக இருந்தது பற்றியும் தமக்கு எதுவுமே தெரியாது என்று தெரிவித்திருக்கிறார் இலங்கையின் சட்டமா அதிபர் திரு. சரத் என்.சில்வா.

இலங்கைச் சட்டக்கல்லூரிச் சட்டமாணவர் தமிழ் மன்றத்தின் வெளியீடான 'நீதிமுரசு 98' மலரின் சார்பான செவ்வியொன்றின் போது சட்டமா அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்த வெளியேற்றம் எந்தச் சட்டத்தின் கீழ் இடம்பெற்றது? இவர்களுக்கு கொழும்பில் நடமாடவும் வசிக்கும் இடத்தைத் தேர்ந்தெடுப்பதுக்குமான அடிப்படை உரிமைகள் இல்லையா?" என்று சட்டமாணவர்கள் சார்பில் கேள்வி எழுப்பப்பட்டபோதே "இல்லை. விடுதிகள் மூடப்பட்ட செய்தியை நான் கேள்விப்படவே இல்லை. யார் உங்களுக்கு அவ்வாறு கூறினார்கள்?" என்று திருப்பிக் கேட்டார் சட்டமா அதிபர். 'இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளியாயினவே' என்று கூறப்பட்டபோது, "இல்லை" என்று ஒரே வரியில் மறுத்துரைத்தார்.

### பொறுப்பு வேண்டும்

"பாதுகாப்புக் காரணங்களுக்காக அவை மூடப்பட நேர்ந்ததாக கௌரவ ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்ததாகப் பத்திரிகைகளில்கூட செய்திகள் வெளிவந்தன. ரூபவாஹினி தொலைக்காட்சிச் செய்தியின்போது, பயங்கரவாதிகள் கொழும்புக்கு வந்து விடுதிகளில் தங்கியிருப்பதாலேயே விடுதிகள் மூடப்பட்டன என்றும் கூறியுள்ளாரே?" என்று மாணவர்கள் கேள்வி தொடுத்தனர்.

"இந்தக் கேள்விக்கு நான் கூறக்கூடிய பதில் என்னவென்றால், தமிழ் மக்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதே" எனத் தெரிவித்த அவர் "இரு பக்கத்திலும் பரஸ்பர நம்பிக்கையை வளர்க்க வேண்டும். நீங்களும் இதிற் பங்கேற்க வேண்டும்" என வலியுறுத்தியதுடன், விடுதிகள் மீது இப்போது அண்மைக்காலமாகப் பொலிசாரின் கவனம் திரும்பியுள்ளது. ஏனெனில் அவை அடிப்படையிலேயே சட்டரீதியானவை அல்ல, என்றும் தெரிவித்துள்ளார்.

"வன்னி மக்கள் வவுனியாவில் முகாம்களில் தடுத்து வைக்கப்படுவது பற்றிக் கேட்ட கேள்விக்கு, "எவரும் அங்கு தடுத்து வைக்கப்படவில்லை; அவர்கள் சம்மதத்துடனேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். விரும்பினால் திரும்பிப் போகலாம்!" என்று பதிலளித்த சட்டமா அதிபர், பாஸ் நடைமுறைகள் அவர்கள் நன்மைக்காகவே என்றும் தெரிவித்துள்ளார். இப்பேட்டி-பல கேள்விகள் கொண்டதாய்-ஆறுபக்கங்களில் ஆங்கிலத்தில் வெளியாகியுள்ளது. ■

வாசக நெஞ்சங்கள்
அனைவருக்கும்
தித்திக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்!
ஒழிந்து போகட்டும்
தீயவை யாவையும்!
இருள் தகர்ந்து
ஒளி எழட்டும்!

# அவசரகாலத்தை ஆதரிப்பது ஏன்?

## இ.தொ.கா.எம்.பி. விளக்கம்

**இ**லங்கை ரூபாவாஹினியில் 11.10.98 அன்று கேள்விகளால் ஒரு வேள்வி நிகழ்ச்சியில் இ.தொ.கா எம்.பி சதாசிவத்தை பேட்டி கண்டனர்.

அவசரகால சட்டத்தை தாம் ஆதரிப்பது அதனால் கெடுதி வரக்கூடாது என்பதற்காகவே என்று சதாசிவம் விளக்கமளித்தபோது பார்வையாளர் பகுதியில் இருந்த பலர் நமட்டுச் சிரிப்பை உதிர்த்தனர்.

அவசரகால சட்டத்தை தாம் ஆதரிப்பதால்தான் மலையகத் தமிழ் மக்களுக்கு சலுகைகள் கிடைக்கிறது என்றும் அவர் விளக்கமளித்தார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற இன வன்செயலின் பிணையில் ஆளும் கட்சி அரசியல்வாதி இருந்ததாக கூறப்படுகிறதே என்ற கேள்விக்கு, "எமது மக்கள் அப்படி கூறினார்கள். சம்பந்தப்பட்ட அரசியல்வாதியுடன் உணவு சாப்பிட்டுக் கொண்டு இருக்கும்போது அது உண்மையா? என்று கேட்டேன். "இல்லை" என்று கூறினார். மக்களைச் சந்தித்துக்கூற இருக்கிறேன் என்கிறார்" என சதாசிவம் பதிலளித்தார்.

"உங்கள் மக்கள் கூறுவதை நம்பாமல் அவர் கூறுவதை நம்புகிறீர்களா?" என்று கேட்டபோது, சுற்றிவளைத்து பதில் கூறினாரே தவிர, தமது கட்சியின் கருத்து என்னவென்று கூறவில்லை. ■

# வவுனியா எம்.பி. கொலை

## உள்ளிருந்து போன தகவல்?

(நமது நிருபர்)

**வ**வுனியாவில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் சமீபத்தில் பலியானது தொடர்பாக புதிய தகவல்கள் சில வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட தமிழ்க் கட்சியின் முக்கிய பிரமுகராக திகழ்ந்த ஒருவர் மூலமே புலிகளுக்கு தகவல்கள் கொடுக்கப்பட்டதாம்.

சம்பவம் நடைபெற்ற நாளன்று பாராளுமன்ற உறுப்பினருடன் சென்ற மேற்படி பிரமுகர், நிகழ்ச்சி முடிய முன்பாகவே கிளம்பிவிட்டாராம்.

வேனில் சென்றால் தானும் பலியாக நேரும் என்று கருதியே அவர் முன்பாகச் சென்றதாக கூறப்படுகிறது.

தற்போது மேற்படி பிரமுகர் குறிப்பிட்ட தமிழ்க்கட்சியினரால் தடுத்துவைத்து விசாரிக்கப்பட்டு வருகிறாராம். அவரது பெயர் சுகுமார் என்று தெரியவருகிறது.

'ஜயசிக்குறுய்' ஆரம்பமாக முன்பாக வவுனியா நொச்சிமோட்டை காவலரணில் சுகுமார் படையினருடன் இணைந்து பணியாற்ற மேற்படி கட்சியால் நியமிக்கப்பட்டிருந்தார். பாவற்குளத்தை சேர்ந்தவர்.

இதற்கிடையே மேற்படி கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளராக இருந்தவரும் சந்தேகத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாக தகவல் ஒன்று தெரிவிக்கிறது. ●

# பதிலடியின் பின் ஏற்பு!

**வ**வுனியா கோவிற்குளம் பகுதியில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் நடமாடுவதாக புளொட் இயக்கத்தினருக்கு தகவல் ஒன்று கிடைத்தது.

அதனை அடுத்து அப்பகுதியில் தேடுதல் நடத்திய புளொட் இயக்கத்தினர் மூன்று புலிகளைச் சுற்றி வளைத்தனர்.

அவர்களில் ஒருவர் சயனைட் குப்பியை கடித்து பலியானார். ஏனைய இருவரும் புளொட்டினால் கொண்டு செல்லப்பட்டனர்.

மேஜர் துளசி (ராஜரத்னம் விஜயரவி-கிளிநொச்சி) என்பவரே பலியானவராவார்.

இவரது உடல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. உடனடியாக உடலை பொறுப்பேற்காது புலிகள் தாமதித்தனராம்.

புளொட் இயக்கத்திற்குப் பதிலடி கொடுத்த பின்னரே உடலைப் பொறுப்பேற்கப் போவதாகக் கூறப்பட்டதாம். அதன் பின்னரே மன்னாரில் வைத்து இரண்டு புளொட் உறுப்பினர்கள் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்கள் கொல்லப்பட்ட பின்னர் தமது உறுப்பினரது உடலை புலிகள் பொறுப்பேற்றனர். ■

# புலிகள் கடத்தல்

**க**டந்தவாரம் மட்டக்களப்பு, திருக்கோணமலை பகுதிகளில் பொதுமக்களுக்குச் சொந்தமான நான்கு உழவு இயந்திரங்களைப் புலிகள் இயக்கத்தினர் வழிமறித்துக் கடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு-வாகரைப் பகுதியில் ஓட்டமாவடி முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான ஓர் உழவு இயந்திரத்தையும், திருக்கோணமலை- கிண்ணியா பகுதியில் மேலும் மூன்று உழவு இயந்திரங்களையும் புலிகள் இயக்கத்தினர் கடத்திச் சென்றுள்ளனர்.

இவற்றை விடுவிப்பதாக இருந்தால், தலா ஒரு இலட்சம் ரூபா விகிதம் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை மட்டக்களப்பு- களுவாஞ்சிக்குடி பிரதேச சபையின் ஐ.தே.கட்சி உறுப்பினர் எஸ். விஸ்வநாதன் கடந்த 07.10.98 அன்று கிரான்குளத்தில் வைத்துப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தினருடனோ, பொலிசாருடனோ அதிக ஒட்டுதல் வைத்துக் கொள்ளக் கூடாது என்று புலிகள் தம்மிடம் கூறியதாக அவர் தெரிவித்திருக்கிறார். ●

# புலிகள் தடை!

**பு**லிகள் இயக்கத்தினர் கிழக்கில் தம் வசமுள்ள பகுதிகளில் சினிமாப் படக் காட்சிகளுக்குத் தடை விதித்துள்ளனர்.

இதுவரை சினிமாப் படக் கொட்டகைகளில் காட்டப்பட்டு வந்த சினிமாப் படக் காட்சிகளுக்குப் பதிலாக தமிழீழப் போராட்ட வரலாற்றுப் படங்களையும் (புலி இயக்கப் படங்கள்) மற்றும் பக்திப் படங்களையும் மாத்திரம் திரையிட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

ஆயினும் அடக்குமுறையும் புரட்சியும் சம்பந்தப்பட்ட சினிமாப் படங்களைத் திரையிட அனுமதிப்பர் என்று எதிர்பார்ப்பதாக படக் கொட்டகைக்காரர் கூறுகின்றனர். ●

# கொலையும்-பதில் கொலையும்!

**ம**ட்டக்களப்பு- பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலய தீப்பள்ளய உற்சவம் நடந்து கொண்டிருந்த வேளை எம்.எல்.ஏ. மீராஸாஹிபு (30) எனும் முஸ்லிம் நபர் ஒருவர் புலிகள் இயக்கத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு கடற்கரையோரமாக சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் முன்னர் ஊர்காவல் படைவீரராக இருந்து பின்னர் விலகியிருந்தாராம். இவர் மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவர் என்றும் தெரியவருகிறது.

இவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கேள்வியுற்று அங்கு சென்ற விசேட சீருடையினர் எஸ். ரூபதாஸன் (18) எனும் ஒரு வாலிபரைச் சுட்டுக் கொன்றனர். புலிகள் இவருடன் கதைத்து விட்டுச் சென்றனராம், என்று சீரடையினருக்குத் தகவல் சொல்லப்பட்டதாலேயே அவர் சுட்டுக் கொல்லப்பட்டாராம். ●

# குண்டுத் தாக்குதல்!

**ம**ட்டக்களப்பு- ஏறாவூர் நகர பிரதேச சபையின் உப தலைவர் எஸ்.எச்.அபூ ஹனீபா மீது இனங்காணப்படாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மின்சாரம் தடைப்பட்டு எங்கும் இருள் மயமாக இருந்த வேளையிலேயே கைக்குண்டு வீசப்பட்டது.

கொலையாளியின் இலக்கு சற்றுப் பிசகி கைக்குண்டு சில அடி தூரம் முன்னால் வீழ்ந்து வெடித்ததால் கொலை முயற்சியில் இருந்து அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். இச்சம்பவம் 10.10.98 அன்றிரவு 8.50க்கு அவரது வீட்டருகில் இடம்பெற்றது.

கடந்த காலங்களில் இப்பகுதிகளில் திட்டமிடப்பட்ட பல இன வன்முறைச் சம்பவங்களை இவர் நேரடியாகவே முன்னின்று தடுத்து வந்துள்ளதோடு, தமிழ்-முஸ்லிம் சமூகங்களிடையே பரஸ்பர நல்லுறவை வளர்ப்பதில் அயராது பாடுபட்டவராகும்.

1990 ஆம் ஆண்டு இவர் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளானார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ■



படிப்பகம்

www.padippakam.com

# தந்தையைக் கொன்றான் தனயன்!
## கசிப்பு விற்பனையால் விபரீதம்!

பண்டாரவளை-பூனாகல, மஹகந்த தோட்டப்பகுதியில் தனயன் ஒருவன் தந்தையைக் கொன்று விட்டு பொலிஸில் சரணடைந்தான். தந்தை தோட்டப் புறத்தில் விற்கப்படும் கசிப்பைக் குடித்து விட்டு வந்து தினமும் தாயாருக்கு அடி ஆக்கினைகள் புரிவதைச் சகிக்காமலே தனயன் தந்தையின் தலையில் துருவலையால் அடித்துக் கொன்றதாகக் கூறப்படுகிறது.

புஸ்பராஜ்-ராஜ்குமார்(16) என்பவரே தனது தந்தையான ரி.புஸ்பராஜ் (38) என்பவரைக் கொன்றவராகும்.

கொலைச் சந்தேக நபரான இந்த இளைஞர், தொழிற்சங்க பிரதேச பணிப்பாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய பி.எஸ்.தயானந்த என்பவரின் தயவை நாடியதையடுத்து அவர் இந்த இளைஞனை பண்டாரவளை -பொலிஸ் அத்தியட்சகர் பேட்டி கொபல்லாவ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தயாரட்ண, மற்றும் தலைமை பொலிஸ் பரிசோதகர் ஜயந்த செனவிரட்ண ஆகியோரின் பொறுப்பில் ஒப்படைத்ததாகத் தெரிவித்தார்.

மலையகத் தோட்டப் புறங்களில் தொழிலாளர்களை உறிஞ்சிக் குடிக்கும் சில முதலாளி வர்க்கத்தினர் கசிப்பு விற்பனையை ஊக்குவித்து வருவதாகவும் இதனால் நாளாந்தம் குடும்பங்களில் பிணக்குகளும் தொந்தரவுகளும் மற்றும் இவை போன்ற இன்னும் பல சமூகச் சீரழிகளும் தலைதூக்கியுள்ளன. அதிகாரிகளின் ஆதரவுடன் அல்லது குறைந்த பட்சத் தண்டனையுடன் குற்றவாளிகள் தப்பி விடுவதாக திரு.தயானந்த கவலை தெரிவித்தார்.

இதேவேளை, தனயன்கள் இருவர் சேர்ந்து தந்தையை அடித்துக் கொன்ற இன்னொரு சம்பவம் கண்டி-கட்டுகஸ் தோட்டை கலுகம பிரதேசத்தில் அண்மையில் இடம் பெற்றது.

சந்தேக நபர்களான சகோதர இளைஞர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களே.

# உடனே தேவை-சொந்தக் கட்டடங்கள்

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா நீண்ட வரலாறு கொண்ட கிராமப்பட்டணமாகும். சுதந்திரமடைந்த நாளிலிருந்து இப்பிரதேசத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்மண்ணிலேயே தோன்றியதுடன் திருமலை மாவட்ட அரசியல் அதிகார தலைமைகளையும் இன்று வரை அனுபவித்து வருகின்றார்கள்.

ஆனால் கல்வி, தபால், கூட்டுறவு மொத்த ஸ்தாபனம், வங்கி, போக்குவரத்து முதலிய முக்கிய திணைக்களங்கள் தனியார் கட்டடங்களிலேயே இன்றுவரை இயங்கி வருகின்றன.

இப்பிரதேசத்தில் ஆசிரியத் தொழில் புரிபவர்களே மிகவும் அதிகமானவர்கள். இருப்பினும் கல்விக் காரியாலயம் சொந்தக் கட்டடத்தில் இயங்கவில்லையென்றால் மற்றையோர்களின் முயற்சிகள் பயனளிக்குமா?

எவ்வாறாயினும், 'எலிப் பாளியானாலும் தனிப்பாளி இன்றியமையாதது' என்பதை இனியாவது உணர்ந்து சொந்தத் திணைக்களக் கட்டடங்களை அமைக்க உரிய அதிகாரிகள் ஆவனசெய்ய வேண்டுமென்பதே எமது அவா.

# சுதந்திரப் பிரஜை



இலங்கைத் தமிழரான டாக்டர் நமசிவாயம் சத்தியமூர்த்தி இலண்டனின் அதி உன்னத விருதான 'இலண்டன் மாநகரின் சுதந்திரப் பிரஜை' என்ற கௌரவத்தை அண்மையில் பெற்றுள்ளார்.

ஜவர்கலால் நேரு, மார்க்கிரட் தட்சர், இளவரசி டயானா, நெல்சன் மண்டேலா போன்றவர்களுக்கு வழங்கப்பட்ட இக் கௌரவ விருதைப்பெற்ற முதலாவது இலங்கையர் என்ற பெருமையையும் இவர் பெறுகிறார்.

வாட்டர்லூ யுத்தத்தில் சாதனை புரிந்ததற்காக தளபதி வெலிங்டனுக்கு 1815ல் இக் கௌரவம் முதன்முதலாக வழங்கப்பட்டது. மாற்று மருத்துவத்துறையில் செய்த சாதனையைக் கௌரவித்தே இவ்விருது டாக்டர் சத்தியமூர்த்திக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு சார்ள்ஸ் இளவரசரின் விருந்தாளியாகவும் இவர் கௌரவிக்கப்பட்டார்.

திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 47 வயதான டாக்டர் சத்தியமூர்த்தி தி/இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் மாணவப் பருவத்தில் சிறந்த பேச்சாற்றல், எழுத்தாற்றல் என்பவற்றைக் கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(திருமலை நிருபர்)

# சுயதொழிலுக்கு ஓய்வூதியத் திட்டம்!

(மட்டக்களப்பு நிருபர்)

நாட்டின் தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் தமது வயோதிப காலத்தில் ஓய்வூதியம் கிடைக்கவழி செய்யும் திட்டங்கள் அமுலாக்கப்படவுள்ளன.

ஏற்கனவே அரசாங்க, திணைக்கள, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்ற நடைமுறையிலேயே இவர்களுக்கும் ஓய்வூதியம் கிடைக்கும்.

தற்போது அமுலாக்கப்படவிருக்கும் ஓய்வூதியத் திட்டத்தில் அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்களும், மீனவர்கள், விவசாயிகள், அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் தவிர்ந்த சுயதொழிலில் ஈடுபடுவோர் சேர்ந்து நன்மையடையலாம்.

மாதாந்தம் மூவாயிரம் ரூபாவுக்குட்பட்ட வருமானம் பெறும் 18 வயது தொடக்கம் 59 வயது வரையான சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோர் இத்திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும்.

ஓய்வூதியத்திற்கான கட்டணத்தை மாதா மாதம் சிறு தொகையாகச் செலுத்தலாம். இந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொண்டவருக்கு இடர் ஏற்பட்டு அங்கவீனங்கள் சம்பவித்தாலும் அதற்குரிய விசேட கொடுப்பனவுகளைப் பெற இந்த ஓய்வூதியத் திட்டத்தில் வழி வகுக்கப்பட்டிருக்கிறதென்று பிரதேச செயலாளர் என். ஸ்ரீசங்கர் தெரிவித்தார்.

இவ்வேலைத் திட்டத்தை இலகுவாக அமுல்படுத்துமுகமாக அவ்வப்பகுதி சுபீட்சத்திட்ட (சமுர்த்தி) ஊக்குவிப்பாளர்கள், சமுக சேவை உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோர் ஈடுபடுத்தப்படவிருக்கிறார்கள்.

# பிரசாரப் போர்

சமீபத்திய நிகழ்வுகளின் பின்னர் தென்னிலங்கை மக்களிடையே அதிருப்திகளை தணிக்க பிரசாரப் போர் ஒன்று அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

அரச பிரசார சாதனங்கள் பேட்டிகள், கதைகள் மூலம் பின்னடைவுகளுக்கு முண்டு கொடுப்பதாக அரசியல் நோக்கர்கள் கூறியுள்ளனர்.

புலிகளின் பொறுப்பாளர்கள் தமது உறுப்பினர்களை கைவிட்டு ஓடியதாகவும் அரச பிரசார சாதனங்கள் கூறுகின்றன.

அப்படியானால் அவர்கள் ஓடியபின்னர் தற்போது யாருடன் சண்டை நடந்து வருகிறது? என்பது தான் ஆச்சரியமாக உள்ளது என்று செய்திகளைக் கேட்போர் கேலி செய்கின்றனர்.

சாதாரண சிங்கள மக்களும் தற்போது செய்திகளை கேலிசெய்து வருவதோடு, வெளிநாட்டு வானொலிச் செய்திகளை கேட்டு வருகின்றனர்.


விளம்பரப் பகுதி

**உடன் விற்பனைக்கு** புத்தம்புதிய கொத்ரேஜ் தமிழ் எலெக்ரோனிக் ஸ்கிரிப்ரா தட்டச்சு இயந்திரம்.
(Godrej Tamil Electronic Type writer. model-Scripta single line with 16 KB memory)
மற்றும் ஒலிம்பியா எலெக்ரோனிக் தட்டச்சு இயந்திரம் (Olympia Compact 5 DM)
இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு தொலைபேசி எண்: 826875

**எச்சரிக்கை**
T.P:- 594492
WELLAWATTA, COLOMBO-06
(NEXT TO ALEXANDRA ROAD,)
40 1/1, GALLE ROAD,
STUDIO CHHAYA

**ALPHA TELE COM CARD - SWISS**
சுவிஸ் நாட்டில் அல்பா தொலை பேசி அட்டைகளின்
மொத்த விற்பனையாளர் V.T. சீலன்.
சுவிஸில் ஏனைய மாநிலங்களுக்கும் விற்பனை முகவர்கள் தேவை.
18 வீதம்வரை கொமிஷன் வழங்கப்படும்.
— மேலதிக விபரங்களுக்கு —
V.T. SEELAN
MOOS SRT-01
8038 - ZURICH
SWISS.
ALPHA TELE COM CARD
Tel: 01-4812521
Natel: 079-4322158

**ஹோமியோபதி**
தமிழ்நாட்டின் பிரபல
ஹோமியோபதி சிகிச்சைநிபுணர்
Dr. R. தியாகராஜன்
D.H.M.S. AMRSH (Lond)
நாட்பட்ட தீராத வியாதிகளுக்கு
சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.
ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ்.
தொலைபேசி : 585592 - 581986
23.10.98 - 27.10.98
இந்திய தொலைபேசி : 0091-431 - 432946
0091-431 - 432046
வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும்
சிகிச்சை அளிக்கப்படும்.

**New Victors**

பழுது பார்க்கும் இடம்
நியூ விக்ரஸ்
40 1/3, காலி வீதி,
(அலெக்சான்ட்ரா வீதிக்கு அருகில்)
வெள்ளவத்தை.

**RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM**
**ராஜா வஜீகரண (ரசாயன) லேகியம்**

(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)
சலாமிசிரி, பதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுணையானதுஸ்திரீ புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும். மூலச் சூட்டைப் போக்கும். இருமல் மார்பு இடுப்புவலி. கால் கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.
நாள்பட்ட பீனிசம், இளைப்பு இருமல் மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம், பத்தியமில்லை.
**500 gram 300/= 250 gram 150/=**
வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.
**Ayur Dr. K. ASivasubramaniam**
**முருகானந்த வைத்தியசாலை**
G/02. கொழும்பு மத்திய சுப்பர் மார்கெட்,
மீன்கடை மேல் (நிலமாடி) கொழும்பு - 11


**4வது பிறந்த நாள் வாழ்த்து**



**செல்வன் கிரிசாந்த் 17-10-1998**

லெபனானை பிறப்பிடமாகவும் மாத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராம கிருஷ்ணன்-வசந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கிரிசாந்த் தனது 4வது பிறந்த நாளை வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.
(மாத்தளை தாத்தாவின் இல்லத்தில்)
இவரை இலங்கையில் வசிக்கும் அன்பு அப்பா, ஆசை அம்மா, தாத்தாமார், பாட்டிமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சான்மார், லெபனானில் வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமி, மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் செல்வன் கிரிசாந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் அருள்பெற்று, பல்கலையும் கற்று நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.


**மனோதத்துவ வைத்தியம்**
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை
**கொழும்பில் அக்டோபர் 21முதல் 31 வரை சந்திக்கலாம்**
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு)
கொழும்பு நாட்கள் மட்டும் செல்டெல் No. 072-609388
**கல்முனையில் நவம்பர் 7,8,9ம் திகதிகளில் சந்திக்கலாம்**
T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329
**வவுனியாவில் நவம்பர் 14,15,16ம் திகதிகளில் சந்திக்கலாம்**
(முன்கூட்டியே பதிவுசெய்யவும்) VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் வீதி, வவுனியா. T.P. 024-22074 Residend: T.P. 065-24019
கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
No. 33, Tissa Weerasingam sq, Boundary Road, Batticaloa. SRI LANKA.


**மலையாள மாந்திரிகம்**

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA**
**UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET,**
**MAY FIELD ROAD, COLOMBO-13.**
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

**தமிழகத்தின் தலைநகர் சென்னைக்கு வருகை தரும் தமிழ் மக்களுக்கு ஒரு நற்செய்தி!**
திருமணத் தேவைகளுக்கான பொன், தாலிக்கொடி, மோதிரம், வளையல், முதலான பொன் ஆபரணங்கள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும். தாலிக்குப் பொன் உருக்குதலுக்கு உங்கள் இல்லத்திற்கே பத்தரை அனுப்பி வைப்போம் என்பதையும் அறியத் தருகின்றோம். தவறாது விஜயம் செய்யுங்கள்.
சாந்தி கோல்ட் ஹவுஸ்,
இல: 72, உஸ்மான் ரோட்,
தி.நகர்,
சென்னை -600 017.
**சாந்தி கோல்ட் ஹவுஸ்**
Shanthi Gold House.
No: 72, Usman Road,
T.Nagar,
CHENNAI-600 017
PHONE:- (0091) 044 - 43 41730 - FAX: 0091.044 4334855
E-MAIL-SANTI COM MD3. VSNL-NET. IN-
HTTP. //WWW. INTAMM. COM / SHANTHI.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# எட்ட நினைத்த இலக்கை

## தட்டிப் பறித்த புலிகள்

நாரதர்

'ஜயசிக்குறுய்' சமர் மே 13ம் திகதி 97ம் ஆண்டு ஆரம்பமானபோது வவுனியா-யாழ் சாலையில் படையினர் கைப்பற்ற வேண்டிய தூரம் கிட்டத்தட்ட 74 கிலோ மீட்டராக இருந்தது.

'ஜயசிக்குறுய்' ஆரம்பமானபோது கிளிநொச்சி நகர் படையினரிடம் இருந்தது.

கிளிநொச்சி நகரையும் கைப்பற்றி பரந்தன் சந்திவரை புலிகள் தற்போது நிலைகொண்டுள்ளனர்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை அருகேயே படையினர் தமது முன்னரங்க நிலைகளை தற்போது அமைத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்த பரப்பளவு கிட்டத்தட்ட 1279 சதுர கிலோ மீட்டர்.

இம் மாவட்டத்திலேயே ஆனையிறவு படைத்தளம் அமைந்திருக்கிறது. 96ல் மேற்கொள்ளப்பட்ட சத்ஜய நடவடிக்கை மூலம் ஆனையிறவு தளத்துடன் கிளிநொச்சி நகரை இணைத்தனர். இதனால் 60 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு படையினரால் கைப்பற்றப்பட்டது. அதனைச் சூழ உள்ள 100 சதுர கிலோ மீட்டர் பகுதியும் மக்கள் வாழ முடியாத பிரதேசமாகியது.

இதனால் நகரிலும் அதனைச் சூழவும் உள்ள ஒன்றரை இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர்.

நகரில் படையினர் நிலைகொண்டு இருக்க அவசியமான கட்டடங்கள் தவிர அனைத்தும் தரைமட்டமாகின.

நகரை படையினர் கைப்பற்றியபோது ஒரு நாய் மட்டுமே அங்கு காணப்பட்டது.

யாழ் குடாநாட்டை கைப்பற்றிய பின்னர் அந்த இராணுவ வெற்றிக்கு மகுடம் சூட்ட வேண்டுமானால் அங்கு மக்கள் வசிக்கிறார்கள் என்பதை காண்பிக்க வேண்டி இருந்தது.

ஆனால் கிளிநொச்சி நகரை கைப்பற்றியபோது அத்தகைய தேவைகள் எதுவும் எழவில்லை. அதனால் நகரில் மட்டுமன்றி அதனை சூழ உள்ள பகுதிகளும் மக்கள் இல்லாத சூனிய பிரதேசமாகின.

தங்கள் வீடுகளைப் பார்வையிடச் சென்ற நூறுபேர்வரையான பொதுமக்கள் காணாமல் போயினர். ஒரு கிறிஸ்தவ மதகுருவும் கொலையானார்.

ஆனையிறவில் இருந்து பரந்தன் சந்திவரையான கிட்டத்தட்ட 23 சதுர கிலோ மீட்டர் பரப்பளவான பகுதி நீண்ட காலமாக மக்கள் வசிக்காத பகுதியாகும்.

அப்பகுதி பரந்த வெளி என்பதால் அதனை கைப்பற்றி நிலைகொள்ள படையினரின் மரபுப் படை பலம் கைகொடுத்தது.

பரந்தன் சந்தியில் இருந்து கிளிநொச்சி டிப்போ சந்திவரை படையினர் நிலைகொண்டிருந்த பகுதியே முக்கியத்தும் வாய்ந்த பகுதியாகும். கிட்டத்தட்ட 37 சதுரகிலோ மீட்டர் பகுதியில் அங்கு படையினர் நிலைகொண்டிருந்தனர்.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி புலிகள் நடத்திய கிளிநொச்சி சமரின் பின்னர் நகரின் மையப் பகுதிவரை படையினர் இழந்தனர். சுமார் 5 சதுர கிலோ மீட்டர் பகுதி புலிகளின் வசம் சென்றது.

'ஜயசிக்குறுய்' படையினர் எங்கு சென்றடைவதை தமது இலக்காக குறித்தனரோ அந்த இலக்கையே இல்லாதொழிப்பதே பிரபாகரனின் இலக்காக இருந்தது.

பெப்ரவரி முதலாம் திகதி சமரில் இலக்கை எட்டவே முயன்றனர். பாதிதான் முடிந்தது. அதனால்தான் பிரபாகரனே இம்முறை நேரடியாக களத்தில் இறங்கி உக்கிரச்சமரை நடத்த வேண்டியேற்பட்டது.

தலைவரே நேரடியாக களத்தில் நிற்கிறார் என்றதும் எப்பாடுபட்டாவது இலக்கை அடைந்தே தீருவது என்ற பயங்கர உத்வேகமுடன் ஒவ்வொரு அணியும் களத்தில் இறங்கின. இலக்கை எட்டின.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனையிறவு, பரந்தன் தவிர ஏனைய பகுதிகள் தற்போது புலிகளின் வசம் சென்றுள்ளன. முல்லைத்தீவுக்கு செல்லக்கூடிய சுலபமான போக்குவரத்துப் பாதைகள் பல புலிகள் வசம் வந்துள்ளன.

கிளிநொச்சி சமரின்பின்னர் 'ஜயசிக்குறுய்' படையினரின் இலக்கு மேலும் ஆறு கிலோ மீட்டர் நீளத்திற்கு பின்னால் போயிருக்கிறது.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கையில் கிளிநொச்சி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முனையாகும்.

மாங்குளத்தை படையினர் முழுதாகக் கைப்பற்றினால் கிளிநொச்சியில் இருந்தும் படை நகர்வு ஆரம்பித்திருக்கலாம். அவ்வாறான நிலையில் மாங்குளத்தில் முன்னேறும் படைகளுடன் முறியடிப்பு சமரில் ஈடுபடும் புலிகளது அணிகளை பின்புறமாக நெருங்கி கிளிநொச்சி படையணிகள் தாக்கியிருக்கும்.

அது மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவுக்கு செல்லும் தரைவழித் தொடர்புகளையும் கிளிநொச்சி படையணிகளது முன்னேற்றம் துண்டித்திருக்கும்.

அவ்வாறான நிலையிலும் புலிகள் தாக்குதல்களை தொடர முடியும், படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகள் இடையே ஊடறுத்து செல்ல முடியும் என்றாலும் சுதந்திரமான தரைவழித் தொடர்பு இருப்பது கூடுதல் சாதகம்தான்.

அதுமட்டுமன்றி கிளிநொச்சி நகரில் படையினர் நிலைகொண்டிருப்பது மாங்குளம் முனையில் இருந்து முன்னேறும் படையினருக்கு பன்மடங்கு உளவியல் பலத்தையும் கொடுத்திருக்கும்.

அதன் காரணமாகவே பெப்பரவரி 01ல் கிளிநொச்சி நகரின் மையப்பகுதிவரை புலியணிகள் கைப்பற்றிய பின்னர், அதனை மீளவும் பெறுவதற்காக பத்துக்கு மேற்பட்ட தரை நகர்வு முயற்சிகளில் படையினர் ஈடுபட்டனர்.

ஜூன் மாதம் நாலாம் திகதி கிளிநொச்சியில் படையினர் மேற்கொண்ட தரை நகர்வு பாரிய ஒன்றாகும்.





இருமுனைகளில் படையினர் முன்னேறினர். பெப்ரவரி 01ல் புலிகள் கைப்பற்றிய பகுதிகளை மீளக் கைப்பற்றும் ஆக்ரோசமான நகர்வாக அது இருந்தது. ஆயினும் இலக்கை எட்டாமல் படையினர் திரும்பினர். பின்னர் ஜூன் 8ம் திகதி புல்டோசர் நகர்வு என்று கூறப்படும் இன்னொரு பாரிய தரை நகர்வை மேற்கொண்டனர்.

9வது கெமுனு படைப்பிரிவும், 7வது சிங்க ரெஜிமெண்ட்டும் களம் புகுந்தன. எனினும் மோதலின் முடிவில் பழைய நிலைக்கு திரும்பவேண்டியதாகியது.

இம் மோதல்கள் புலிகளை பலவீனமாக்க நடத்தப்பட்டதாக படைத்தரப்பு கூறியிருந்தது.

கிளிநொச்சி புலிகள் வசம் சென்றபின்னர் அது முக்கியமற்ற பகுதி என்று படையினர் கூறியுள்ளனர். முக்கியமற்ற பகுதிக்காகவா ஒன்றரை இலட்சம் மக்களை இடம் பெயரச் செய்து, நகரே அழியும் விதமான சண்டைகளை படைத்தரப்பினர் நடத்தினர் என்ற கேள்வியும் இதனால் எழுகிறது.

எப்படித்தான் இருந்தாலும் இலங்கை இராணுவ வரலாற்றில் மறக்க முடியாததும், மகா பெரியதுமான சமர் 27.09.98ல் புலிகள் நடத்திய ஓயாத அலைகள்-02 என்பது தணிக்கைகளையும் தகர்த்துக்கொண்டு அம்பலமாகியுள்ளது.

மாங்குளத்தை கைப்பற்றியதாக அரசு கூறிவருகிறது. மாங்குளம் நகரில் படையினர் 11 கிலோ மீட்டர் தூரம் நிலைகொண்டுள்ளதாக அரசு கூறுகிறது.

செப்டம்பர் 30ம் திகதி மாங்குளத்தை கைப்பற்றியதாக படைத்தரப்பு கூறியது.

கிளிநொச்சி புலிகள் வசம் சென்றபின்னர் எப்பாடுபட்டாவது மாங்குளம் நகரில் கால் வைத்து, அதனை படமெடுத்துக் காட்டியேயாக வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது.

கிளிநொச்சி முனையில் புலிகளின் அணிகள் அலை அலையாக களமிறங்கியதால், மாங்குளம்முனை பலவீனமாக இருக்கும் என்று கருதப்பட்டது

ஆனால் மாங்குளம் நோக்கி முன்னேற முயன்ற படையினருக்கு எதிர்ப்பு காத்திருந்தது. புலிகளது பீரங்கிப் படையணிகள் மாங்குளம் முனையில் படை நகரலாம் என்று எதிர்பார்த்து காத்திருந்தன.

செப்டம்பர் 29ம் திகதி கவசப்படை துணையுடன் யாழ்-வவுனியா சாலையில் முன்னேறிய படையினருடன் கனகராயன் குளப் பகுதியில் புலிகள் பலத்த எதிர்ப்பு காட்டினார்கள். 65 படையினர் தம்மில் பலியானதாகவும், நூறுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் படையினரே கூறினர் என்றால் சண்டையின் உக்கிரத்தை புரிந்து கொள்ள முடியும்.

இம் மோதல்களில் தமது தரப்பில் பலியான நான்கு பேரின் பெயர் விபரங்களையே புலிகள் வெளியிட்டிருந்தனர்.

கேணல் கிட்டு பீரங்கிப் படையணியே மாங்குள முனையிலும் முக்கிய பாத்திரம் வகித்தது. மோட்டார்களின் எறிகணைகள் தாக்கியே படைத்தரப்புக்கு பெரும் சேதம் ஏற்பட்டது.

கிளிநொச்சியில் கைப்பற்றிய பகுதியை தக்கவைப்பதில் புலிகளது பிரதான தாக்குதல் அணிகள் கவனம் செலுத்தியதால் மாங்குளம் முனையில் பீரங்கிப் படையணிகளே முறியடிப்பு சமரின் முக்கிய பாத்திரத்தை வகிக்கவேண்டி இருந்தது.

செப்டம்பர் 30ல் மாங்குளத்தின் கிழக்குப் பக்கமாக புலிகளது முன்னணி அரண்களை மேவிச்சென்று பக்கவாட்டுப் பக்கமாக மாங்குளம் நகர்ப்பகுதிக்குள் சந்திவரை படைகள் முன்னேறின.

அதற்கு முன்னர் படையினரின் சிறப்பு கொமாண்டோ படையணி சந்தடி செய்யாமல் துரித நகர்வொன்றை மாங்குளத்தின் பக்கவாட்டு பகுதியூடாக மேற்கொண்டது.

புலிகளது சில காவலரண்கள் கைப்பற்றப் பட்டன. சிறப்பு கொமாண்டோக்கள் புலிகளின் பலவீனமான முனை ஒன்றில் உடைவு ஏற்படுத்தித்தர காலாற்படைகள் தொடர்ந்து முன்னேறி மாங்குளம் சந்திக்குள் பிரவேசித்தன.

பெரும் நகர்வாக ஆரம்பித்திருந்தால் புலிகளின் மோட்டார்கள் படைகள் நகரும் பாதை நோக்கி எறிகணைகளை பொழிந்திருக்கும். கெரில்லாபாணியில் நகர்ந்ததால் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகவில்லை.

மரபுப்போர் அல்லாத போர் முறையை படையினரும் 'ஜயசிக்குறுய்' களத்தில் பல முறை பரிசீலித்துள்ளனர்.

### அளக்கப்படும் காலடிகள்

முன்னர் அவ்வாறான ஒரு நகர்வின் போதே மன்னகுளத்தில் கொமாண்டோப் படையணி புலிகளால் முற்றுகையிடப்பட்டு பெரும் சேதத்திற்கு உள்ளானது. சந்தடியற்ற நகர்வில் ஈடுபட்ட சிறப்பு கொமாண்டோக்கள்தான் புலிகளது காவல் அரணில் இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலரையும் மற்றும் உதவிக்கு நின்ற சிலரையும் கைது செய்ததாக தெரிகிறது.

தற்போது மாங்குளத்தின் ஒரு பகுதியில் படையினர் நிலைகொண்டுள்ளனர். மோதல்கள் தொடர்ந்து நடக்கின்றன.

கிளிநொச்சி நகரும் படையினரின் கையில் இருந்திருந்தால் மாங்குளம் சந்திக்கு படையினர் சென்றது 'ஜயசிக்குறுய்' சமரில் முக்கிய படிக்கல்லாக அமைந்திருக்கும்.

ஆனால் தற்போதைய நிலை சாண் ஏற முழம் சறுக்கும் நிலைதான்.

மாங்குளத்தில் பதினொரு கிலோமீட்டர் பகுதியை கைப்பற்றியுள்ளதாக ஜெனரல் ரத்வத்தை கூறியுள்ளார்.

ஜெனரல் ரத்வத்தை கூறுவதன்படி பார்த்தால் கிட்டத்தட்ட அதில் பாதித்தூரம் சென்றிருக்க வேண்டும்.

ஆனால் அரச தரப்பு செய்திகளில் கூறப்படும் இடப்பெயர்களும், தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட படங்களும் மாங்குளம் சந்தியை அண்டிய பகுதிகளாகவே உள்ளன. ஏனைய பகுதிகளை காண்பித்தால் என்ன?

மாங்குளத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் நின்று ஜெனரல் ரத்வத்தை சிங்கக் கொடியேற்றினார்.

அதற்கு முன்னர்தான் கிளிநொச்சியில் சிங்கக்கொடியை இறக்கி புலிக்கொடியை புலிகளின் மகளிர் படையின் சிறப்புத் தளபதி விதுஷா ஏற்றினார்.

கிளிநொச்சியை புலிகள் கைப்பற்றியதால் மாங்குளத்தின் முக்கியத்துவம் குறைந்தது. அதற்கு முன்பாக கைப்பற்றப்பட்டிருந்தால் பட்டாசு ஒலிகள் தெற்கிலும் கேட்டிருக்கக்கூடும்.

ஆனால் கிளிநொச்சி சமரின் சூடான செய்திகளை மறைத்துக்கொண்டு மாங்குளம் சந்திவரை முன்னேறியதாக கூறியதை சாதாரண சிங்கள மக்கள் முதலில் நம்பக்கூட இல்லை.

இப்போதெல்லாம் சண்டைச் செய்திகள் அறிய அரச தகவல் தொடர்பு சாதனங்களையோ உள்நாட்டு தகவல் ஊடகங்களையோ நம்பியிருக்கும் தேவை மக்களுக்கு இல்லை.

முன்னர் பி.பி.சி. சில பகுதிகளில் தெளிவாக கேட்பதில்லை. இப்போது அரசின் உபயத்தில் நாடெங்கும் தெளிவாகக் கேட்கிறது. அரசுடன் உள்ள ஒப்பந்தம் கருதி பி.பி.சி. முன்புபோல் அல்லாமல் அடக்கி வாசித்தாலும் கூட தனது நம்பகத்தன்மையை காப்பாற்ற சில உண்மைகளையாவது கூறியாக வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் கிளிநொச்சி சமருக்கு ஈடாக மாங்குளம் சமரை அரச பிரசார சாதனங்கள் விபரித்ததை யாரும் வரவேற்றதாக தெரியவில்லை.

மாங்குளம் சந்தியில் புலிகள் பின்வாங்கியதற்கும், கிளிநொச்சியில் படையினர் பின்வாங்கியதற்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன.

பின்வாங்குவது, முன்னேறுவது, பதுங்குவது, பாய்வது என்பன போர் அரங்கில் சகல தரப்பும் கைக்கொள்ளும் உத்திகள்தான்.

தந்திரோபாயமான பின்வாங்கல் என்பது ஒழுங்கு முறையில் அமைந்திருக்கும். தந்திரோபாயமாக பின்வாங்கும் அணி தமது ஆட்கள், ஆயுத தளபாடங்கள் என்பவற்றை பத்திரமாக விலக்கிக்கொள்ளும்.

உதாரணமாக யாழில் இருந்தும், கிளிநொச்சியில் இருந்தும் புலிகள் பின்வாங்கிய போது தமது ஆயுத தளபாடங்கள், மற்றும் ஆட்பலத்தை தக்கவைத்தபடி நிதானமாகப் பின்வாங்கினர்.

கடந்த பெப்ரவரி 01ல் கிளிநொச்சி நகரில் படையினர் பின்வாங்கியதையும் தந்திரோபாயப் பின்நகர்வு என்று கூறலாம். பாரிய ஆட்டிலறிகள், கவச வாகனங்கள் என்பவற்றை அழிவில் இருந்து காப்பாற்றிக் கொண்டு பின்வாங்கினர்.

எதிர்பாராத அழிவில் சிக்கி அனைத்தையும் கைவிட்டு தப்பிச் செல்லுதல், அல்லது குறிப்பிட்ட பகுதியில் முழு அழிவுக்குள்ளாகிய நிலையில் அதனைக் கைவிடல் என்பதை தந்திரோபாயப் பின்வாங்கல் என்று கூறிக் கொள்ள முடியாது.

உதாரணமாக 1989ல் வடக்கு-கிழக்கில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எ ஃப், ரெலோ, ஈ.என்.டி.எல்.எ ஃப். போன்ற இயக்கங்கள் செய்ததை தந்திரோபாயப் பின்வாங்கல் என்று கூறமுடியாது.

ஆயுதங்களை கண்ட இடத்தில் வீசிவிட்டு ஒழுங்கு முறையில்லாமல் கடலால் உறுப்பினர்களும், வானத்தால் தலைவர்களும் தப்பிச் சென்றனர். அதன் பெயர் தப்பியோட்டம். அதுவும் சாதாரண ஓட்டமல்ல, தலைதெறிக்க ஓட்டம். ஆனால் அவர்களும் "ஏன் நாம் மட்டுமா ஓடினோம், புலிகளும்தானே ஓடினார்கள்" என்று கேட்பது நல்ல தமாஷ்.

கிளிநொச்சியில் படையினரின் பின்வாங்குதல் தந்திரோபாய நகர்வு என்றுதான் முதலில் கூறப்பட்டது. பின்னர் இராணுவப் பேச்சாளரே 'மிக மோசமான பின்னடைவு' என்று கூறியிருந்தார்.

மாங்குளம் சந்திவரை படையினர் சென்ற பின்னர் புலிகளின் சடலங்களை கைப்பற்றி ஒப்படைத்ததாக எவ்வித செய்தியும் வெளியாகவில்லை. பாரிய மோதல் மூண்டு புலிகள் முற்றுகைக்குள் சிக்கியிருந்தால் சடலங்களை விட்டே பின்வாங்கியிருப்பர்.

மாங்குளத்தில் ஆயுதங்களை கைப்பற்றியதாக படம் காட்டினர். அவற்றை கையாண்ட புலிகளின் சடலங்களை காட்டவில்லையே என்ற கேள்வியும் படம் கண்டபோது எழாமல் இல்லை.

எப்படியோ, கிளிநொச்சி சமரின் பரிமாணம் பாரியது. 'ஜயசிக்குறுய்' சமரில் திருப்புமுனை என்று கூறுமளவுக்கு அதன் விளைவுகள் இனிமேலும் களத்தில் பிரதிபலிக்கும்.

கிளிநொச்சி சமரில் பலியான படையினர் பற்றிய அரச தகவல்களை வைத்து கணக்கெடுத்தால் இரண்டாயிரத்தி 49 படையினர் பலியானதாக கொள்ளவேண்டும் என்று 'சண்டே ரைம்ஸ்' கூறுகிறது.

இராணுவப் பேச்சாளரும், இராணுவ உளவுப்பிரிவுத் தலைவருமான சுனில் தென்னக்கோன் அக்டோபர் 04ம் திகதி வெளியிட்ட தகவலில் 632 படையினர் பலியானதாக கூறினார். அவரே அக்டோபர் 8ம் திகதி வெளியிட்ட செய்தியில் ஆக 186 பேர்தான் பலியானதாக கூறினார்.

இறந்தவர்களை உயிர்ப்புக்கும் புதிய கருவி ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா என்று சாதாரண மக்கள் தமாஷ் பண்ணுகிறார்கள். அப்படியான கருவி கண்டுபிடிக்கப்பட்டால் இலங்கைதான் உலக வல்லரசு.

வன்னியில் பருவ மழை ஆரம்பமாகி விட்டது. இந்நிலையில் 'ஜயசிக்குறுய்' டிசம்பருக்குள் இலக்கை எட்டுவதோ, அரசு நினைப்பதுபோல ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதோ சாத்தியமா?

சுற்றிவளைக்காமல் நாம் கள நிலவரப்படி கூறும் ஒரே பதில் ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் என்பது நடக்கப்போவதில்லை. ஏனெனில் டிசம்பருக்குள் 'ஜயசிக் குறுய்' முடியப்போவதில்லை.

ஆனால் பாரிய மோதல்கள் சண்டைகள் நடக்கப்போகின்றன. படையினர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் புலிகளால் அளக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. படையினருக்கும் அது தெரியும்.

தற்போது வன்னியில் மாங்குளம் சந்திவரை படையினர் நிலைகொண்டிருந்தால்கூட அது நீளமான தொடராக இல்லை. உட்பாதைகள் வழியாக சுற்றியே நிலைகொண்டுள்ளனர். படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளுக்குள்ளும், பகுதிகளை நெருங்கியும் புலிகளின் நடமாட்டம் உள்ளது.

சமீபத்தில் ஓமந்தையில் ஊடுருவிய புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஓமந்தை ஜயசிக்குறுய் படையினரின் இதயப் பகுதியில் உள்ளது.

அதற்கு முன்பாக தாண்டிக்குளத்திலும் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்று புலிகளால் நடத்தப்பட்டது. தாண்டிக்குளம் ஜயசிக் குறுய் படையினரின் வால்பகுதியாகும்.

எனவே வவுனியா முதல் மாங்குளம் சந்திவரை படையினர் நிலை கொண்டுள்ள தூரம் 45 கிலோமீட்டர். அதற்குள்ளேயே புலிகளது ஊடுருவல் இருக்கிறது. மேலும் 35 கிலோமீட்டர் முன்னேற வேண்டியுள்ளது.

இதுவரை படையினர் முன்னேறிய 45 கிலோமீட்டரில் 10 கிலோமீட்டர், வவுனியா முதல் ஓமந்தைவரை சண்டை இன்றி கைக்கெட்டிய பிரதேசமாகும். எனவே கடும்சண்டையிட்டு கைப்பற்றப்பட்ட தூரம் 35 கிலோமீட்டர்.

எனவே கடந்த ஒருவருடமும் ஐந்து மாதங்களுமாக கைப்பற்றிய அதேயளவு தூரத்தை கடந்தாக வேண்டும்.

எனவே, அரசின் கனவுகள் ஜனவரிக்குள் கைகூடும் என்பது நடக்கக்கூடியதல்ல. ○

## அதிரடி அய்யாத்துரை



***நவராத்திரி பூஜையில்*** ஆயுத பூஜையும் ஒன்று. வன்னியில் ஆயுத பூஜை அட்டகாசமாகக் கொண்டாடப்பட்டதாம். இதுவரை கொண்டாடிய பூஜைகளில் ஆயுதம் அதிகம் வைத்துக் கொண்டாடிய பூஜை இதுதான் என்று தலைவர் பூரித்துப் பாராட்டினாராம்.

***முன்னர் புலிகளைக்*** கண்டிச்ச ஆட்களும் புலிகளின் செயற்பாடுகளால் மனம் மாறிவருவதை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் பொறுக்க முடியவில்லையாம். பிரசுரங்களில் புலம்பித்தள்ளுகினம். அந்தக் கட்சிச் செயலாளரே 'பிரபாகரன் இல்லையென்றால் நாங்கள் கொழும்பில் கோவணத்தோடுதான் நிக்க வேண்டும்!' என்று சொன்னதை மறந்து போனாரோ? அவரே அப்படிக் கூறும்போது ரெண்டு எழுத் தாரைக் கண்டிச்சவை இப்போது கைகொடுத்துப் பாராட்டுகினமே என்று கவலைப்படுவது என்ன நியாயம்கோ?! மீன்பிடி அமைச்ச ஆலோசகர் பதவி கிடைத்ததும் கோவணத்தோடு நிற்கவும் ரெடியாகி விட்டாராக்கும்!

***தலைநகரில் சீருடையினருக்கு*** விருது வழங்கும் விழா. கணவனை இழந்த மனைவி. பிள்ளையை இழந்த பெற்றோர் என்று வந்திருந்த பலர் கண்ணீர் சிந்தியபடி இருந்தனராம். வெளியே வானமும் கண்ணீர்விட்டுக் கொண்டிருந்தது. பாதுகாப்புத் தொடர்பான அதிகாரமுள்ளவருக்கும் அதி உயர் விருது ஒன்று வழங்கப்பட இருந்ததாம். அதைப் பெற அவர் மறுத்துவிட்டதாகக் கூறுகிறார்கள். அதியுயர் இழப்பை சமீபத்தில் கொடுத்துவிட்டு அதியுயர் விருதை வாங்க அவர் மனச்சாட்சி இடமளிக்கவில்லையாம்.

***செம்மணியில் புதைத்ததைத்தான்*** பகிரங்கமாக தோண்டத்தான் மறுத்தார்கள். மன்னார் கடலில் விழுந்ததையும் எடுக்க ஏன் மறுத்தார்கள்? என்று கேட்கினம் பாதிக்கப்பட்டவர்கள். உடல்களை மீட்க அக்கறை காட்டாத விமான நிறுவனத்தினர் எப்படியாவது விமானத்தின் ஒரு பாகத்தையாவது கண்டெடுத்துக் கொண்டுவர ஒற்றைக்காலில் நிற்கினம். அப்படிக் கொண்டுவந்தால்தான் முழுக் காப்புறுதியும் கிடைக்குமாம். அவையவைக்கு தங்கள் தங்கள் கவலைகள்!

***ரெண்டு எழுத்தாரை*** சாந்தப்படுத்த கூட்டான கட்சி அறிக்கை விட்டிருக்கிறது. வெகுஜன சபையில் உரையாற்றிய சம்பந்தமானவர் சர்வதேச உதவி பெற்று பிரச்சனையைத் தீர்க்குமாறு கூறினார். அதுதான் எப்போதோ நடந்து கொண்டுதானே இருக்குது! உதவி மட்டுமோ- பயிற்சிகளுமல்லோ பெறப்படுகிறது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எண்டு கூற அவருக்கு வாய்வரவில்லைப் பார்த்தியளோ? அங்குதான் இருக்குது விஷயம்!

***கடலில் கவிழ்ந்த*** விஷயத்தில் சீருடையினர் பலியானது ஏன் தெரியுமோ? ரெண்டு எழுத்தார் தாக்கவந்தால் குழாயால் தாக்க வசதியாக உள்ளே ஏறி இருந்தவையாம். அதனால்தான் கவிழ்ந்தபோது கதவுகளைத் திறந்து குதிக்க முடியாமல் உள்ளே சிக்கிக் கொண்டனராம்.

***சட்டத்திற்குப் பொறுப்பான*** அதிபர் ஆற்றியுள்ள உரையைப் படித்துப் பார்த்தியளோ? நாடு எங்கே போகுது என்று தெரியுதோ?!

***'கிளி' தோல்வி*** தேசிய அவமானம் என்று தலைநகர ஆங்கிலத் தினசரி தலையங்கம் தீட்டியுள்ளது. ஆளும் தரப்பும் எதிரணியும் இணைந்து சண்டையைத் திறம்படக் கொண்டுபோக வேண்டும் எண்டமாதிரி ஆலோசனை கூறியுள்ளது. அந்தப் பொறுப்பை நம்மடமில் கட்சிகளிடம் கொடுத்தால் தலைமேற்கொண்டு செய்வினமல்லோ? ஹி.ஹி.ஹி.

இவ்வாரப் பொன்மொழி பேரறிஞர் அரிஸ்டாட்டில்.

**"தேவையில்லாமல் நிறைய நண்பர்களை பெற்றிருப்பவனுக்கு ஒருவனும் உண்மையில் நண்பனில்லை!"**

'குழந்தைகளை மட்டுமல்ல நண்பர்களையும் அளவோடுதான் பெறவேண்டும்!' என்கிறார். ■



படிப்பகம்

# அரசியல் தொடர்




## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள்!

அற்புதன் எழுதுவது

**1990** அக்டோபர் 30ம் திகதிக்கு முன்பாக வடபகுதியில் உள்ள முஸ்லிம்கள் வெளியேற வேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் மன்னாரின் சில பகுதிகளில் காணப்பட்டன.

யாரோ விஷமிகள் செய்த வேலை என்றுதான் முதலில் கருதப்பட்டது. ஆனால் புலிகள் அது தொடர்பாக உத்தியோகபூர்வமாக மறுக்கவும் இல்லை, உத்தியோகபூர்வமாக பகிரங்கமாக அறிவிக்கவும் இல்லை.

அதன்பின்னர் புலிகள் இயக்கப் பொறுப்பாளர்களும் வாய்மூலமாக தங்கள் முடிவை முஸ்லிம்களுக்கு கூறினார்கள்.

அக்டோபர் 30ம் திகதிக்கு முன்னர் வெளியேறவேண்டும். அதனை மீறுகிறவர்கள் மரண தண்டனைக்கு உள்ளாவர் என்று அவர்கள் கூறினார்கள்.

முஸ்லிம் கிராமங்கள் சிலவற்றுக்குள் ஒலிபெருக்கிகள் மூலம் புலிகளது அறிவித்தல் வெளியிடப்பட்டது.

மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ் குடாநாடு ஆகிய பகுதிகளில் தங்கியிருந்த முஸ்லிம்களை வெளியேற்றும் முடிவில் புலிகள் மிகவும் உறுதியாக இருந்தனர்.

புலிகளின் முடிவு தவறானது என்பதை அவர்களிடம் எடுத்துச் சொல்லவும் எவரும் முன்வரவில்லை.

மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள முஸ்லிம்கள் முடிவை பரிசிலிக்கும்படி புலிகளிடம் கோரினார்கள்.

குறுகியகால அவகாசத்தில் மூச்சுவிடக்கூட நேரமில்லாமல் தங்கள் உடமைகளில் கொண்டு செல்லக்கூடியவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து மூட்டை முடிச்சுக்களாக கட்டி முடிக்க வேண்டியிருந்தது.

மன்னாரில் இருந்து சுமார் 40 ஆயிரம் அகதிகள்வரை புத்தளம் மாவட்டத்திற்கு வந்து சேர்ந்தனர் என்று புத்தளம் மாவட்ட அரச அதிபர் அப்போது கூறியிருந்தார்.

100 படகுகள்வரை மன்னாரில் இருந்து முஸ்லிம் அகதிகளை ஏற்றி இறக்குவதில் ஈடுபட்டன.

படகுகளுக்கு காத்திருக்காமல் தரை வழியாக வவுனியா எல்லைவரை பல ஆயிரக் கணக்கானோர் வந்து சேர்ந்தனர். அவர்கள் அநுராதபுரம் நோக்கிச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய 55 ஆயிரம் பேர் வெளியேறி உள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் கூறியிருந்தது.

### குற்றச்சாட்டு

வடபகுதியில் இருந்து தாம் வெளியேறுவதற்கு முஸ்லிம் காங்கிரசே காரணம் என்று முஸ்லிம்கள் பலர் கூறினார்கள்.

"நாம் உயிரைக் கொடுத்துப் போராடுகிறோம். பல்லாயிரம் உயிர்களை பலிகொடுத்திருக்கிறோம். எமது போராட்டத்தில் முஸ்லிம் காங்கிரசும் அஷ்ரப்பும் குளிர்காய்கின்றனர். தனிமாகாணம் கேட்கின்றனர். வடக்கு-கிழக்கை துண்டாடும் அரசின் சதிக்கு துணை போகின்றனர். அதனால்தான் உங்களை வெளியேற்றுகிறோம்!" என்று புலிகள் முஸ்லிம்களிடம் கூறியனுப்பினார்கள்.

ஆனால் வடபகுதி முஸ்லிம்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் அக்கால கட்டத்தில் பெருமளவு உடன்பாடு கொண்டிருக்கவில்லை. தனி மாகாணக் கோரிக்கையையும் அவர்கள் ஆதரிக்கவில்லை.

அதிலும் குறிப்பாக யாழ் குடாநாட்டு முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரசைப் பற்றி அக்கறையே கொள்ளவில்லை.

முஸ்லிம் காங்கிரசின் கொள்கைகளையே ஏற்றுக் கொள்ளாத வட பகுதி முஸ்லிம்களை முஸ்லிம் காங்கிரசின் கோரிக்கைக்காக புலிகள் வெளியேற்றியது பெரும் முரண்பாடு.

### வரலாற்றுத் தவறு

விடுதலைப் புலிகள் இயக்கம் தனது போராட்ட வரலாற்றில் செய்த மாபெரும் தவறு முஸ்லிம்களை வடபகுதியில் இருந்து வெளியேற்றியது.

தமிழ் பேசும் மக்கள் என்று பொதுப்பதத்திற்குள் தமிழ், முஸ்லிம் மக்கள் அடங்குகின்றனர்.

வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான பாரம்பரியத் தாயகமாகும்.

வடபகுதியில் இருந்து முஸ்லிம்களை வெறியேற்றுவதற்கு புலிகள் கூறிய காரணங்கள், விளக்கங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல.

### ரஞ்சனிடம் புகார்

மன்னாரில் இருந்து முஸ்லிம்கள் வெளியேறியபோது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா மன்னார் சிலாவத்துறைக்குச் சென்றிருந்தார்.

அங்கு முஸ்லிம்கள் அவரைச் சந்தித்தனர். 'முஸ்லிம் காங்கிரசின் தனி மாகாணக் கோரிக்கைதான் புலிகள் தம்மை வெளியேற்றுவதற்கான காரணம்' என்று அவர்கள் ரஞ்சனிடம் கூறினார்கள்.

நவம்பர் முதலாம் திகதி கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார் ரஞ்சன்.

"மன்னாரில் இருந்து வெளியேறிய முஸ்லிம்களை மீண்டும் அங்கு குடியமர்த்துவோம். அதனை செய்தே தீருவோம்" என்று கூறினார்.

ரஞ்சன் விஜயரத்தினா முஸ்லிம் காங்கிரசுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். "நேற்று நான் (31.10.90) மன்னார் சிலாவத்துறைக்குச் சென்றிருந்தேன். அங்கு அகதிகளுடன் உரையாடினேன்.

தம்மிடம் இருந்த பெறுமதியான சகல பொருட்களையும் புலிகள் பறித்துவிட்டதாக அவர்கள் கூறினார்கள்.

புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறும் வரை நாம் பொறுத்திருக்க வேண்டியேற்பட்டது.

இன்று (1.11.90) இரண்டு இராணுவப் பட்டாளங்கள் மன்னாருக்குச் சென்றுள்ளன.

மன்னாரையும் உள்ளடக்கிய முஸ்லிம் மாகாணசபை ஒன்றை முஸ்லிம் தலைவர்கள் கேட்பதால் புலிகள் தம்மை இம்சிப்பதாக சிலாவத்துறையில் வைத்து முஸ்லிம்கள் கூறினார்கள்.

எனவே அதுபோன்ற கோரிக்கைகளை விடுக்க வேண்டாம் என அந்தத் தலைவர்களிடம் கேட்டுக் கொள்ளுமாறு அவர்கள் எம்மிடம் வேண்டிக்கொண்டனர்.

அதனை ஜனாதிபதிக்கு எழுதி அறிவிக்குமாறு நான் கூறினேன்.

முஸ்லிம் தலைவர்கள் தமது அரசியல் கோரிக்கைகளால் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்களை கஷ்டத்தில் போடக்கூடாது." என்று கூறியிருந்தார் ரஞ்சன் விஜயரத்ன.

### புலிகள் கூறியது

முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட காரணம் குறித்து புலிகள் உத்தியோகபூர்வமாக எக் கருத்தையும் வெளியிடவில்லை.

விடுதலைப் புலிகளின் உலகத் தமிழர் பத்திரிகை பின்வருமாறு கூறியது:

"ஸ்ரீ லங்கா அரசின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் மன்னாரில் பெரும் பகுதிகளை இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப் போவதாகவும், அதன் பின்னர் அங்கு முஸ்லிம்களை குடியமர்த்தப் போவதாகவும் கூறியிருக்கிறார்.

பாரிஸ் முஸ்லிம் இளைஞர் சபைகள், சம்மேளனத்தின் தலைவர் எம்.எம்.சுஹைர் முஸ்லிம் கிராமங்களை பாதுகாப்பதற்காக 15 ஆயிரம் முஸ்லிம் இளைஞர்களைக் கொண்ட படையொன்றை திரட்ட முஸ்லிம் மக்கள் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

இன்றைய சிறிலங்கா முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்கள் சிறிலங்கா அரசுடன் இணைந்து தமிழ் மக்களை கொன்றழிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் இத்தகைய சக்திகளால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் சம்மதமின்றி இன்றைய முஸ்லிம் தலைமைகளால் எடுக்கப்படும் தவறான முடிவுகளை சிங்கள அரசு தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களுடன் இணைந்து போராட வேண்டிய முஸ்லிம் மக்களை முஸ்லிம் காங்கிரசும் அஸ்ரப்பும் தமிழர்களுக்கு எதிரான ஒரு சக்தியாக உருவாக்கி வருகின்றனர்.

குறிப்பாக, விடுதலைப் புலிகளை இராணுவரீதியில் அழிக்க முடியாத சிறீலங்கா அரசு முஸ்லிம் மக்களை தமிழ் மக்களின் எதிரிகளாக்க முனைகிறது." என்று உலகத் தமிழர் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தது.

### கவனிப்பாரில்லை

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசோ அல்லது முஸ்லிம் தலைவர்களோ போதிய உதவிகளைச் செய்யவில்லை.

புத்தளம் மாவட்டத்தில் தங்கியிருந்த அகதிகள் தங்குமிட வசதிகூட இல்லாமல் அவதிப்பட்டனர்.

அதனால் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மத்தியில் இருந்தே அகதிகள் நலனுக்கான அமைப்புக்கள் பல தோன்றின.

முஸ்லிம் மக்களை புலிகள் வெளியேற்றியதை சகல தமிழ்க் கட்சிகளும் கண்டித்தன. ஈ.பி.டி.பி. புத்தளத்தில் அலுவலகம் ஒன்றை நிறுவி முஸ்லிம்களுக்கு உதவியளித்து வருகிறது. ஏனைய தமிழ்க் கட்சிகள் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் பக்கம் இன்றுவரை சென்றதில்லை. இடையே ஒரு தடவை 1994 பொதுத் தேர்தலின்போது மட்டும் பிரசாரத்திற்காக சகல தமிழ்க் கட்சிகளும் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை தேடித் திரிந்தன.

முஸ்லிம் மக்கள் வெளியேறி இந்த மாதத்துடன் (98 அக்டோபர் 30) எட்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

முஸ்லிம்களை வெளியேற்றியது தவறு என்பதை புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனும் ஒப்புக்கொண்டுள்ளார். அன்ரன் பாலசிங்கமும் கூறியுள்ளார்.

ஆனாலும் வடபகுதிக்கு சென்று குடியேறுமாறு புலிகள் தாமாக கூறவில்லை. அதேசமயம் மன்னாரில் மீளக் குடியமர்ந்த முஸ்லிம்களுக்கு புலிகளிடம் இருந்து எவ்வித அச்சுறுத்தலும் விடுக்கப்படவில்லை.



இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்காக நடத்தப்பட்ட போராட்டம்

# ஏறாவூரில் வெறியாட்டம்

'எடுத்த முடிவு எடுத்ததுதான். புறப்பட ஆயத்தமாகுங்கள்' என்று கூறப்பட்டது.

யாழ்ப்பாணத்திலும் ஒலி பெருக்கிகள் மூலம் முஸ்லிம் பகுதிகளில் அறிவிப்பு செய்யப்பட்டது.

### நாம் பொறுப்பல்ல

யாழ்ப்பாண முஸ்லிம்கள் தமக்குத் தெரிந்த புலிகள் இயக்க உறுப்பினர்களிடம் சென்று "நாங்கள் உங்களுக்கு என்ன துரோகம் செய்தோம்? எங்களை ஏன் வெளியேறுமாறு கூறுகிறீர்கள்?" என்று கேட்டனர்.

முஸ்லிம் மக்களுடன் நன்கு பரிச்சயமான புலிகளது உறுப்பினர்கள்: "இதற்கும் எங்களுக்கும் தொடர்பில்லை. மட்டக்களப்பு அணிதான் இதற்கு பொறுப்பாக நிற்கிறது. அவர்களோடு பேசிப் பாருங்கள்" என்று கூறிவிட்டனர்.

யாழ்ப்பாண முஸ்லிம்களை வெளியேறுமாறு அறிவித்தல் விடுத்ததிலும், வெளியேறும் நடவடிக்கைகளை கண்காணிப்பதிலும் மட்டக்களப்பு மாவட்ட புலிகள் இயக்க முக்கியஸ்தரான கரிகாலன் முன்னணியில் நின்றார்.

குறிப்பிட்டளவு பொருட்களுக்கு மேற்பட்டு எடுத்துச் செல்லக்கூடாது என்று புலிகள் கட்டளையிட்டிருந்தனர்.

மன்னார், முல்லைத்தீவு பகுதிகளில் வெளியேறுவோரின் குடும்ப விபரம், அவர்கள் எடுத்துச் செல்லும் பொருட்களின் விபரம் போன்றவற்றை குறிப்பிடுமாறு கோரும் பத்திரங்கள் புலிகளால் தரப்பட்டன.

யாழ் குடாநாட்டில் யாழ்ப்பாணத்திலும், சாவகச்சேரியிலுமே முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர்.

யாழ் நகரில் பல முக்கியமான வர்த்தக நிலையங்கள் முஸ்லிம்களுக்கு சொந்தமாக இருந்தன.

வர்த்தக நடவடிக்கைகள் மூலம் வசதி படைத்த முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கானோர் இருந்தனர்.

தமது சொத்துப் பத்துக்களை கைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானபோது அவர்கள் கலங்கி நின்றனர்.

இவ்வாறான ஒரு நிலை தங்களுக்கு ஏற்படும் என்பதை வடபகுதி முஸ்லிம்கள் கனவிலும் நினைத்தது கிடையாது.

முஸ்லிம்கள் கொழும்புக்கும் ஏனைய பகுதிகளுக்கும் சென்றனர்.

புத்தளம், வவுனியா, அநுராதபுரம், குருநாகல் போன்ற பகுதிகளில் பெரும் தொகையான முஸ்லிம்கள் தங்கவைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேறியதும் முஸ்லிம் பகுதியைச் சுற்றி புலிகள் பாதுகாப்பு ஏற்பாடு செய்தனர். நகரில் இருந்த முஸ்லிம்களது வர்த்தக நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு போடப்பட்டது.

இதனை அறிந்த சில பத்திரிகைகள் முஸ்லிம்களின் உடமைகளுக்கு பாதுகாப்பளிக்க புலிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்தி வெளியிட்டன.

ஆனால், நடந்ததோ வேறு. முஸ்லிம்களது வர்த்தக நிறுவனங்களிலும், முஸ்லிம்களின் பகுதிகளிலும் விட்டுச் செல்லப்பட்ட உடமைகளை தமது இயக்கம் சுவீகரித்துக் கொள்ளும் பொருட்டே பாதுகாப்பு போடப்பட்டது.

அவ்வாறு பாதுகாப்பு போடப்பட்டிருக்காவிட்டால் திருடர்கள் தங்கள் கைவரிசையை காண்பித்திருப்பர்.

யாழ் குடாநாட்டில் இருந்த முஸ்லிம்களது பிரபல வர்த்தக நிறுவனங்கள் பின்னர் புலிகள் இயக்கத்தினரின் நிறுவனங்களாக நடத்தப்பட்டு வந்தன.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் குடியிருந்த பகுதியில் உள்ள வீடுகளில் புலிகள் இயக்கத்தின் பிறமாவட்ட உறுப்பினர்களதும், பலியான உறுப்பினர்களதும் குடும்பத்தினர் தங்கவைக்கப்பட்டனர்.

### அரசு மௌனம்

வடபகுதியில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது தொடர்பாக பிரேமதாசா அரசாங்கம் உத்தியோகபூர்வமான கண்டனம் எதனையும் உடனடியாகக் கூறவில்லை. ஜனாதிபதி பிரேமதாசாவும் கருத்து எதனையும் கூறவில்லை.

ஏறக்குறைய 75 ஆயிரம் முஸ்லிம்கள் வட பகுதியில் இருந்து வெளியேறினர் என்று மதிப்பிடப்பட்டது.

### மன்னிக்க வேண்டுகிறோம் அது துரதிஷ்டமான சம்பவம்

'அவுட் லுக்' (டில்லி) பத்திரிகை நிருபர் எ.எஸ்.பன்னீர் செல்வத்திற்கு 1995 நவம்பரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்டன் பாலசிங்கம் அளித்த பேட்டியிலிருந்து.

**கேள்வி:** *நீங்கள் பல்லின சமூகத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளதாக மிகச்சிலரே நம்புகிறார்கள். உங்களது சகிப்பின்மைக்கு வட பகுதி முஸ்லிம்களை நீங்கள் பலாத்காரமாக வெளியேற்றியதை உதாரணமாகக் காட்டுகிறார்கள்?*

**பதில்:** அது ஒரு துரதிஷ்டவசமான விடயம். அதற்காக நாம் மன்னிப்பு கோருகிறோம். எனினும் அங்கு இனரீதியான முறுகல் நிலையிலிருந்து நாம் அவர்களுக்கு ஒரு கெடுதலும் செய்யாமல் வெளியேறுமாறு கேட்டோம். அது ஒரு தவறு. வட-கிழக்கு மண்ணில் வாழ்வதற்கு மறுக்க முடியாத உரிமை கொண்டவர்கள் என அவர்களுக்கு தெரிவித்துள்ளோம். சகஜ நிலைமை ஏற்பட்டதும் அவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பலாம். ■

### சவுக்கடி படுகொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1998 அக்டோபர் 20ம் திகதி மற்றுமொரு படுகொலை நடைபெற்றது.

ஏறாவூரின் கிழக்கே கடற்கரையோரமாக இருப்பது சவுக்கடி என்னும் தமிழ் கிராமம். பெரும்பாலும் மீனவர்களைக் கொண்ட கிராமம் இது.

துப்பாக்கிகள், வாள்கள் கத்திகள் சகிதம் புகுந்த குழுஒன்று ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற பேதம் இன்றி வெட்டியும், சுட்டும் இரத்த வெறியாட்டம் நடத்தியது.

31 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன் மனைவி குழந்தைகள் உட்பட பலர் வெட்டிச் சாய்க்கப்பட்டனர்.

ஆறு மாதக் குழந்தைகள் இரண்டும் வெட்டி வீசப்பட்டிருந்தன. 2 வயதுக்கும் பத்து வயதுக்கும் உட்பட மேலும் 9 பிள்ளைகள் கொல்லப்பட்டனர்.

ஊர்காவற்படையினரே இப் படுகொலைக்கு காரணம் என்று மக்கள் சந்தேகித்தனர்.

(தொடர்ந்து வரும்)



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

விடுதலைப் புலிகளின் ஹெலிக்கொப்டர் ஒன்று முல்லைத்தீவில் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. புலிகளின் ஹெலி தமது ராடர் கருவிகளில் தெரிந்ததாக பாதுகாப்பு வட்டாரங்களும் கூறியுள்ளன.

கடந்த மாத நடுப்பகுதியிலேயே ஹெலிக்கொப்டர் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வற்றாப்பளை அம்மன் கோயில் பகுதியிலேயே ஹெலி பறந்திருக்கிறது.

புலிகளிடம் மற்றுமொரு சிறியரக விமானம் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இம்முறை முரசின் முகப்பில் காணப்படுகின்ற சிறியரக விமானம் போன்றவைக்கு பெரிய ஓடுபாதைகள் தேவையில்லை. இவற்றின் விலையும் அதிகமில்லை.'ஸ்போர்ட்ஸ் பிளேன்' என்று இவை அழைக்கப்படும்.

அவ்வாறு இருந்தும் வடக்கு-கிழக்கு கடற்பிராந்தியத்தை கடற்படையினரால் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க இயலவில்லை.

புலிகளுக்கு ஆயுதம் ஏற்றிவந்த கப்பலை கடற்படையினரால் நெருங்க முடியாதிருந்தது. வான்படையினரே குண்டு வீசி தகர்த்தனர். அதுபோல சமீபத்தில் புலிகள் கைப்பற்றிய சரக்குக் கப்பலான பிரின்கேஷை புலிகளிடம் இருந்து மீட்டெடுக்க கடற்படையினரால் முடியாமையினாலேயே அதனை வான்படை தாக்கியழித்தது.

1995ல் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்ட ஐரிஸ் மோனா கப்பலை மீட்கச் சென்ற கடற்படையினரும், அவர்களது டோரா சண்டைப்படகுகளும் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டன. அதன்பின்னர் புலிகளால் வடமராட்சி கடலில் பலமாதமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐரிஸ் மோனாவையும் மீட்க முடியாமல் இறுதியில் குண்டு வீசியே அழித்தனர்.

இதுவரை தரைப்பக்கம் அசைவுகள் தெரிகிறதா என்று இருளைத் துழாவிய படையினரின் விழிகள், இனிமேல் வானில் புள்ளியாக ஏதாவது தெரிகிறதா என்று ராடர் திரைகளையும், வான் பரப்பையும் தங்கள் விழிகளால் துழாவ வேண்டியிருக்கும்.

ஆக, ஜயசிக்குறுய் படையினரின் காலடியில் மட்டுமன்றி தலைக்கு மேலேயும் இனிமேல் புலிகளின் அச்சுறுத்தல் இருக்கப்போகிறது.

விடுதலைப் புலிகள் விமானம் செய்யப்போகும் தகவல்கள் சில வருடங்களுக்கு முன்னரே வெளியாகி விட்டன. அதன்பின்னரே வடக்கு-கிழக்கில் படை முகாம்களில் விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் பொருத்தப்பட்டன.

முல்லைத்தீவு முகாமை புலிகள் தாக்கியபோது அங்கிருந்த விமான எதிர்ப்புத் துப்பாக்கியும் புலிகளால் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னர் ஊகங்களாக வெளியான புலிகளின் வான்படை பற்றிய தகவல்களை இப்போது படையினர் தாமே உறுதிப்படுத்தியுள்ள

# அமிர் உயர்த்திய வாளும்

முகாம்கள் மீதோ, அல்லது வேறு பிரதான இலக்குகள்மீதோ விமானத்துடன் அல்லது ஹெலியுடன் சென்று மோதக்கூடிய சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன.

ஹெலியைவிட சிறியரக விமானத்தை கரும்புலித் தாக்குதலுக்கு அதிகம் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என்று படைத்தரப்பும் கருதுவதாகத் தெரிகிறது.

புலிகளிடம் இதுவரை வான்படை மட்டுமே இல்லாதிருந்தது. இப்போது அப்படையும் பிரபாகரனால் கட்டியமைக்கப்பட்டு வருவதானது போர்முனையில் அரச துருப்புக்கள் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கப்போவதற்கான முன்னறிவிப்பேயாகும்.

அரசிடம் உள்ள வான் படையளவுக்கு பலமான வான்படையை விடுதலைப் புலிகளால் கட்டியமைக்க இயலாது. அதற்கான பொருளாதார வசதிகள் புலிகளிடம் கிடையாது.

பாரிய போர் விமானங்களை அரசுகூட வெளியுலக கடன் உதவியில்தான் கொள்வனவு செய்து வருகிறது.

அவ்வாறிருந்தும் மிக நவீன போர் விமானங்களை வாங்குமளவுக்கு இலங்கை அரசிடம் நிதிவசதி இருக்கவில்லை.

ஆயினும் புலிகளுடன் ஒப்பிட்டால் வான்படை மட்டுமல்ல, அரசின் சகல படைகளும் படைக்கல வசதியிலும், அவற்றின் எண்ணிக்கையிலும் மேம்பட்டே உள்ளன.

ஆனால், புலிகளிடம் அவையனைத்தையும்விட முக்கியமான ஒன்று இருக்கிறது. 'செய் அல்லது செய்து மடி' என்னும் உத்வேக உணர்ச்சியும், கச்சிதமான திட்டமிடுதலுமே புலிகளின் முக்கிய பலமாகும்.

இந்த உணர்ச்சியும், போர் நுட்பமுமே தம்மைவிட மேம்பட்ட படையினரை புலிகள் எதிர்கொண்டு தாக்குப்பிடிக்கும் முக்கிய காரணிகளாக இருந்துவருகின்றன.

கடற்புலிகளிடம் உள்ள கடற்கலங்களுடன் ஒப்பிட்டால் கடற்படையினரின் கடற்கலங்களினதும், ஆட்பலத்தினதும் பலம் பன்மடங்காகும்.

மிக எட்டத்தில் நின்றுகொண்டே கடற்புலிகளது கடற்கலங்களை தாக்கி அழிக்கும் வல்லமை கடற்படையினரிடம் உளளது.

கடற்படைக் கப்பல்கள், அதிவேக ரோந்துப் படகுகள், சண்டைப் படகுகள் போன்ற பல்வேறு கடற்கலங்களும், நவீனரக ஆயுதங்களும் கடற்படையினரிடம் உள்ளன.

சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகள் வழங்கிய கடற்கலங்கள் புல உள்ளன.

மேலும் மேலும் பலநூறு கோடி ரூபாய்களில் நவீனரக கடற்கலங்கள் கொள்வனவு செய்யப்பட்டும் வருகின்றன.

08.07.97ல் மொரங் பொங் என்னும் கப்பலை கடத்திய புலிகள் அதனையும் கப்பல் மாலுமிகளையும் பலநாட்கள் தமது பாதுகாப்பில் வைத்திருந்துவிட்டு விடுவித்தனர். அக் கப்பல் முல்லைக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோதும் கடற்படையினரால் அதனை கைப்பற்ற இயலவில்லை.

நவீன கடற்கலங்கள் இருந்தும், அமெரிக்கா போன்ற நாடுகளில் கடற்சண்டை பயிற்சி பெற்றிருந்தும்கூட சாதாரண கடற்கலங்களுடன் நடமாடும் கடற்புலிகளின் தாக்குதல்கள் கடற்படையினருக்கு பெரும் சவாலாகவே விளங்கி வருகின்றன.

அதிவேக டோரா சண்டைப் படகுகள், போர்க் கப்பல்கள் உட்பட கடற்படை கடற்கலங்கள் பல கடற்புலிகளால் அழிக்கப்பட்டதுடன், நேரடி கடற்சண்டையில் ஈடுபட்டு பாரிய இழப்பை ஏற்படுத்துமளவுக்கு கடற்புலிகள் குறைந்த வசதிகளோடு நிறைந்த அனுபவம் பெற்றுள்ளனர்.

இதன் காரணமாக தற்போது கடற்பரப்பில் சமபல நிலை நிலவுகின்றது. கடற்பரப்பிலும் குறிப்பிட்ட பகுதி கடற்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்துவருவதும் குறிப்பிடத்தக்க போரியல் பரிமாணமாக அமைந்துளளது.

அதேபோலவே கவச வாகனங்கள், டாங்கிகள், ஆட்டிலெறிகள், கனரக மோட்டார்கள் போன்ற பாரிய படைக்கலங்களுடன் தரைப்படை விளங்கியும், புலிகளின் தரைப்படை மற்றும் கெரில்லா படையணிகளின் தாக்குதல் மற்றும் தற்காப்பு வியூகங்களை எதிர்கொள்வதற்கு திணறி வருகின்றன.

இந்நிலையில் புலிகள் தமது வான்படையை கட்டியமைத்து வருகின்றனர்.

புலிகளது பொருளாதார நிலையின் பிரகாரம் அவர்களால் உதிரிப்பாகங்கள் விலைக்கு வாங்கி உருவாக்கப்படக் கூடியவை தரத்தில் உயர்ந்த வான்கலங்களாக இருக்கவியலாது.

புலிகளால் வெள்ளோட்டம் விடப்பட்ட ஹெலிக்கொப்டர் பழங்காலத்து ஹெலி போன்றே காணப்பட்டதாக கண்ணால் கண்டவர்கள் கூறியுமுள்ளனர்.

ஆனால் தரத்தைவிட அவற்றை புலிகள் பயன்படுத்தப்போகும் முறைகளும், அவற்றைப் பயன்படுத்துவோரின் நுட்பங்களும் அரச படைகளுக்கு வான்வழியான பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தவே போகின்றன.

விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளுடன் எந்நேரமும் வானத்தை அண்ணாந்து நோக்கியபடி தயார்நிலையில் காத்திருக்கும் கட்டாயம் போர் முனைகளில் உள்ள படையினருக்கு மட்டுமன்றி நாடெங்கும் உள்ள பாதுகாப்பு தரப்பினருக்கும் ஏற்படப்போகிறது.



நிலையில் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளின் தேவை மேலும் அதிகரித்துள்ளது.

விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளாலோ,

மூலம் தமது நாட்டு மக்களை உற்சாகப்படுத்துவதுண்டு.

ஜெர்மன் படைகள் ரசியாவின் ஸ்டாலின் கிராட்டுக்குள் புகுந்தபோது ஜெர்மன் அரச வானொலி அதனை வெற்றிச் செய்தியாக அறிவித்தது.

மொத்தத்தில் இங்கு நடைபெற்று வருவதும் இருநாடுகள் இடையே, இரு சமபல படைகள் இடையே நடைபெறும் போர் என்ற தோற்றப்பாட்டையே அரச பிரசார சாதனங்களும் அவற்றின் விசேட அறிவித்தல்களும் ஏற்படுத்தி வருகின்றன.

ஜனாதிபதி சந்திரிக்கா வெளிநாட்டில் இருந்தபடியே வாழ்த்துச் செய்தி விடுக்குமளவுக்கு ஆச்சரியங்கள் எதுவும் நிகழ்ந்திருக்கவில்லை. எனினும் வாழ்த்துச் செய்தி பறந்து வந்திருந்தது.

மாங்குளம் என்பது ஒரு சிறு பகுதி. அதுவும் முற்றாக கைக்கெட்டாதநிலையில் ஜனாதிபதியே வாழ்த்து தெரிவித்திருந்தார். புலிகளின் கையில் இருந்து இரண்டு மூன்று கிலோமீட்டர் கைப்பற்றுவதுகூட பாரிய சாதனையாக நோக்குமளவுக்கு, புலிகளை சமபல சக்தியாக அரசு கருதுகிறது என்பதையே அது எடுத்துக்காட்டியது.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரொனிடி மெல் கிளிநொச்சி சமர் தொடர்பாக பின்வருமாறு கூறியுள்ளார்.

"சோழர்களிடம் அநுராதபுரத்தில் தோல்விகண்ட பின்னர் சிங்களவர்களுக்கு ஏற்பட்ட மிகப்பாரிய தோல்வி இது." என்று அவர் கருத்து கூறியிருக்கிறார்.

எதிர்க்கட்சி கூறிய படை இழப்பு பற்றிய புள்ளிவிபரங்கள் உட்பட பலவற்றை சந்தைக் கூச்சல் போட்டும், பதிலடி கொடுத்தும் ஆளும் தரப்பினர் மறுத்திருந்தனர். ஆனால் ரொனிடி மெல்லின் மேற்படி கருத்தை

ஆனால் பேரினவாதிகள் அதனை மறுத்து வருவதுடன், தமிழர்களுக்கு இந்தநாடு சொந்தமில்லை என்றே கூறிவருகின்றனர்.

அந்த எண்ணப்பாடுதான் ரொனி டி மெல்லின் கருத்திலும் எதிரொலித்துள்ளது. அதனை மறுக்காதிருந்த ஆளும் தரப்பினர் மனதிலும் ஆழப்பதிந்திருக்கிறது என்றே கருதவேண்டியுள்ளது. என்னதான் இனிக்கப் பேசினாலும் உரிய தருணங்களில் உண்மையான மனோபாவம் வெளிப்பட்டே தீரும்.

ரொனி டி மெல் பழம்பெரும் அரசியல்வாதி. நீதி அமைச்சராக இருந்தவர். கட்சிகள் பல தாவியபோதும் தாவும் கட்சிகளில் அவர் மூளைக்காக மதிப்பு தரப்படுகிறவர்.

எனவே, சிங்கள அரசியல்வாதிகளால் நன்கு மதிக்கப்படும் மூளைகளது இலட்சணம் எப்படியிருக்கிறது என்பதற்கு ரொனி தன் வாயாலேயே தக்க சான்று தந்திருக்கிறார்.

தமிழ் பேசும் தரப்பு பலமிழந்து தலைகுனிந்து நிற்குமானால் இவ்வாறான மூளைகளால் தயாரிக்கப்பட்டு திணிக்கப்படும் அடிமைச் சாசனங்களையே தமிழ் பேசும் தரப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதும் உண்மையாகும். ஐ.தே.கட்சியின் இனப்பிரச்சனை தீர்வுக்கான திட்டம் தயாரிக்கும் குழுவில் ரொனிதான் முக்கிய நாயகராக இருந்து வருகிறார்.

இவ்வாறான பேரினவாத நிலைப்பாடுகள்தான் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புலிகளுக்கு ஆதரவான அரசியல் தளத்தை உருவாக்கி கொடுக்கின்றன.

ரொனிடி மெல் போன்றோர் தமிழர்களை ஆக்கிரமிப்பாளர்களாக சித்தரிக்கும்போது, தமிழர்கள் புலிகளைத் தங்கள் பலமாக கருதும் மறுபக்க விளைவும் ஏற்பட்டே தீரும்.

# பிரபா உயர்த்திய ஹெலியும்

ஏவுகணைகளாலோ புலிகளது வான் கலங்களை சுட்டுவீழ்த்துவது சுலபமாக இருக்கக்கூடும். ஆனால், எந்நேரமும் விழிப்பாக இருந்தால்தான் எதிர்கொள்ளமுடியும்.

கடற்புலிகளின் படகுகளையும் கடற்படையினர் எட்டத்தில் வைத்தே அழித்துவிடும் வசதி இருந்தும்கூட, கடற்கரும்புலிப் படகுகள் கடற்படை படகுகளில் மோதி அவற்றை தகர்த்துள்ளன. கடற்சண்டைகளிலும் லாவகமாக ஈடுபட்டுள்ளனர்.

எனவே, படைக்கலங்களின் தரத்தை மட்டும் வைத்து பலத்தை நிர்ணயித்தல் என்பது தவறான கணிப்பீடு என்பதையே கடந்தகால தரைச் சண்டைகளும், கடற்சண்டைகளும் இங்கும் நிரூபித்து வருகின்றன.

இலங்கை அரச படைகளின் ஆட்பலத்துடனும், படைக்கல பலத்துடனும் ஒப்பிட்டால் மடுவின் நிலையில் இருக்கும் புலிகளால் சமபல நிலையை தரையிலும், கடலிலும் தக்கவைக்க முடிவது போரியல் ஆச்சரியமாக நோக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் இரு வேறு படைகள் சமபலத்தில் உள்ளன என்பதை இறுதியாக கிளிநொச்சியில் நடைபெற்ற 'பேய்ச்சமரும்' தெட்டத் தெளிவாக உணர்த்தியிருக்கிறது.

மாங்குளம் நகரின் ஒருபகுதிக்குள் படையினர் பிரவேசித்ததை இலங்கை அரச பிரசார சாதனங்கள் தங்கள் நிகழ்ச்சிகளை இடைநிறுத்தி விசேட அறிவித்தலாக பலமுறை கூறிக்கொண்டிருந்தன.

உள்நாட்டு யுத்தத்தில் இவ்வாறான அறிவிப்புகளுக்கு அவசியமிருப்பதில்லை. பிறிதொரு எதிரி நாட்டுடன் நடைபெறும் போரிலேயே இவ்வாறான அறிவித்தல்கள்

மறுத்துரைக்கவோ, நடைபெறும் போருக்கு இனவாதச் சாயம் பூசவேண்டாம் என்று கூறவோ ஆளும் தரப்பில் யாரும் முன்வந்திருக்கவில்லை.

சிங்கள இனத்துக்கு பெருமை சேர்ப்பது யார்? என்ற ரீதியில்தான் யுத்தம் தொடர்பான ஆளும் தரப்பினதும், எதிர்க் கட்சியினதும் வாதப் பிரதிவாதங்கள் மாறியுள்ளன.

போரை நடத்துவது சிங்கள இனப் பெருமையை நிலைநாட்டவே என்று பேரினவாதிகள் பிரசாரம் செய்கின்றனர்.

'போர் அவ்வாறு நடந்தால் எங்களுக்குப் பரம சந்தோசம். ஆனால் சந்திரிக்கா அரசு போரை நடத்தத் தெரியாமல் சிங்களவர்களின் பெருமையை சிதைக்கிறது' என்று எதிர்க்கட்சி கூறுகிறது.

கிளிநொச்சி தோல்வியை சோழர்களிடம் ஏற்பட்ட தோல்வியுடன் ஒப்பிடுவதை சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்கூட மறுத்துரைக்கவில்லை.

சோழர்கள் தமிழர்களாக இருந்தாலும் பிறிதொரு நாட்டில் இருந்து படையெடுத்து வந்தவர்கள். ஆனால் இலங்கைத் தமிழர்கள் இந்த நாட்டின் குடி மக்கள்.

அரசு புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறினாலும், தங்கள் அரசியல், இராணுவத் தலைமையாக புலிகளை தமிழ் மக்கள் கருதுவதும், புலிகளது நடவடிக்கைகளை உள்ளூர மெச்சுவதும் தவிர்க்க முடியாத நிகழ்வுகளாகவே உள்ளன.

1976இல் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் வைத்து பூசிக்கப்பட்ட வாளை கூட்டணித் தலைவரான அமிர்தலிங்கத்திடம் வழங்கி நெற்றியில் திலகமிட்டனர். அந்த வாளில் ஆணையிட்டு 'தமிழீழம் அமைத்தே தீருவோம்' என்று சூளுரை செய்திருந்தார் அமிர்தலிங்கம். அச் செயல் ஆர்ப்பரிப்போடு ஏற்கப்பட்டது.

தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களே, தமிழ் மக்கள் தங்களுக்கு என்று ஒரு படையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துக்கு வித்திட்டன. அதனால்தான் அமிர் வாளை ஏந்தியபோது மாபெரும் வரவேற்பு கிடைத்திருந்தது.

தற்போது முல்லைத்தீவில் வற்றாப்பளை அம்மன் முன்பாக ஹெலியை வெள்ளோட்டம் விட்டுள்ளார் பிரபாகரன் என்ற செய்தியும் தமிழ் மக்களுக்கு உள்ளூர மகிழ்ச்சி கொடுத்திருக்கிறது.

இதன் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்காமல், தமிழர்கள் எல்லாம் புலிகள் என்று கூறி பேரினவாதிகள் கோபப்படுவது பொருத்தமற்றதாகும்.

இன்றைய யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுப்பதில் அரசு விடாப்பிடியாக இருப்பதால், தவிர்க்கமுடியாமல் இனப் போராக வடிவம் எடுத்துவருகிறது. இந்நிலையில் தமிழ் மக்கள் புலிகளை நோக்கிச் செல்லுவதும் இந்நிகழ்வின் மறுதாக்கமாக அமைவது தவிர்க்க முடியாததே.

### பொன்சேகாவல்ல

சென்றவார அலசலில் யாழ் நூலகத்தை எரித்தது காமினி திசநாயக்கா என்பதற்கு பதிலாக காமினி பொன்சேகா என்று தவறுதலாக இடம்பெற்றுவிட்டது.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

கிளிநொச்சி சமரில் புலிகள் முதற்கட்டமாக ஒப்படைத்த 600 உடல்களில் 400 உடல்களை படையினர் பொறுப்பேற்றனர். ஏனைய 200 உடல்களை அடையாளம் காணும் முயற்சி நடக்கிறது. இதுதான் அரச பிரசார சாதனங்களே கூறிய செய்தி.

09.10.98 அன்று பாராளுமன்றத்தில் பிரதி அமைச்சர் அநுருத்த ரத்வத்தை கூறியுள்ள கணக்குப்படி 186 படையினரே பலியாகியுள்ளனர்.

400 படையினரது உடல்களை தாம் பொறுப்பேற்றதாக சொன்னதைக்கூட எப்படி மறந்தனர்?

பெற்றது 400 உடல்கள். பலியானது 186 பேர்! இது என்ன புதிர்க் கணக்கு? புரியவேயில்லையே! எந்தப் பாடத்திட்டத்தில் இதற்கு விடை இருக்கப்போகிறது?!

-★-

காயப்பட்ட தமது உறுப்பினர்களை வாகனத்தில் ஏற்றியதும், இன்னொரு உறுப்பினரில் இருந்து இரத்தம் உடன் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்க, அந்த வாகனம் புலிகளது மருத்துவமனை நோக்கி விரைகிறது.

அந்தளவுக்கு மருத்துவ வசதிகள் செய்து வைத்துள்ளனராம். மறுபக்க தரப்பில்கூட இத்தனை வசதி இல்லை என்கிறார்கள்.

20ற்கு மேற்பட்ட டாக்டர்களை கொண்ட மருத்துவ அணி 24 மணிநேரமும் சுறுசுறுப்பாக இருந்து சிகிச்சை செய்ததாம். அதனால்தான் காயப்பட்ட பலர் காப்பாற்றப்பட்டனர். இல்லையானால் புலிகள் தரப்பில் பலியான தொகை அதிகமாகியிருக்குமாம்.

தேவையான மருந்து வகைகள், நவீன சத்திர சிகிச்சை வசதிகள் என்பவற்றுடன் புலிகளது மருத்துவமனை இயங்கி வருகிறதாம்.

கிளிநொச்சியில் மருத்துவக் களஞ்சியம் ஒன்றும் புலிகளிடம் போய்ச் சேர்ந்ததாகத் தகவல். முன்னர் தாண்டிக்குளத்திலும் ஏராளமான மருந்துப் பொருட்களை அள்ளிக்கொண்டு போனார்கள்.

# புதிரான கணக்கு

படையினருக்காக அமெரிக்கா வழங்கிய நடமாடும் மருத்துவ வாகனமும் புலிகளிடம்தான் இருக்கிறது. காயப்பட்ட உறுப்பினர்களுக்கு சிகிச்சையளிப்பதில் அதுவும் மிகவும் உபயோகமாக இருக்கிறதாம்.

இதுதவிர தமிழ்நாட்டில் இருந்தும் கரையோர தடைகளையும் தாண்டி மருந்துப் பொருட்களை கொண்டு வருகின்றனர் புலிகள்.

•••

வவுனியாவில் இருந்து 'சாரா' என்பவர் சுவாரசியமான சங்கதிகள் சிலவற்றை அனுப்பி இருக்கிறார்.

வவுனியாவில் ஒருவரிடம் படையினர் பாஸ் கேட்டனர். அவர் கேட்டாராம்: "எந்தப் பாஸ் வேணும்? இருப்பிடப் பாஸ், வேலைப்பாஸ், மண்ணெண்ணெய் பாஸ், பெற்றோல் பாஸ், கொழும்பு போகும் பாஸ். அலுமாரி நிறையப் பாஸ்தான். எது வேண்டும்?"

வவுனியா இறம்பைக் குளத்தில் புளொட் மக்களை வெளியேறுமாறு மிரட்டி வருகிறதல்லவா. அது பற்றி திருவாளர் பொதுஜனம் இப்படிக் கேட்க நினைத்தாராம்:

"1990ம் ஆண்டுக்குப் பிறகு வந்தவர்களும், சொந்தவீடு இல்லாதவர்களும் எழும்ப வேண்டும் என்கிறீர்கள். நீங்கள் (புளொட்) எப்போது இங்கு வந்தீர்கள்? உங்களுக்கு சொந்த வீடு இருக்கிறதோ?"

வவுனியாவில் பெற்றோல் பாஸ் கியூவில் நின்றபோது ஒருவர் படையினரைப் பார்த்து கூற நினைத்தது:

"எங்களை வெய்யிலில் கியூவில் போட்டு வாட்டுகிறீர்கள். வன்னிக்கு கப்பலோடு பொருட்களை இலவசமாகக் கொடுத்திருக்கிறீர்கள்!"

வவுனியாவில் ஒரு இயக்கம் தமது முன்னாள் உறுப்பினரை பிடித்து விசாரித்ததாம்.

அவர் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால் அந்த இயக்கத்தில் இருந்தவர்.

"ஏன் எங்களை விட்டுப் போனனீர்?" என்று இயக்கம் கேட்டதாம்.

அவர் சொன்னாராம்: "நாங்கள் எங்கே உங்களை விட்டது? நீங்களல்லோ எங்களை விட்டுட்டு ஓடினீங்கள்!"


படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 31

**கடந்தவாரம்**

**உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயின் கிளர்ச்சிப்படை உகண்டாவுக்குள் ஊடுருவுகிறது. அத்தனை பேரையும் ஒழித்துக்கட்ட உத்தரவிடுகிறான் இடி அமீன். கிளர்ச்சிப்படை என்ற பெயரில் அப்பாவிகள் பலர் கொல்லப்படுகின்றனர்.**

**இனி....**

ஒபேடேயின் கிளர்ச்சிப் படை உகண்டாவுக்குள் புகுந்துவிட்டதை வைத்து தனக்கு சாதகமாக மாற்ற திட்டமிட்டான் அமீன்.

தன்மீது உகண்டா மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பை திசைதிருப்ப இதுதான் தக்க தருணம் என்று முடிவு செய்தான்.

**"எங்கள் முன்னாள் ஜனாதிபதி ஒபேடேக்கு நான் இரண்டு தடவை நன்றி கூறவேண்டும்."** என்றான் இடி அமீன். அவன் கூறியது அந்தரங்கச் செயலாளர் சியம்பாவிடம்.

**"என்ன புரியவில்லையா? உமக்கு எதுதான் ஒழுங்காக புரிந்திருக்கிறது. ஜனாதிபதி பதவியை இரத்தம் சிந்தாமல், யுத்தம் செய்யாமல் தந்ததற்காக ஒரு நன்றி. இப்போது என்மீது மக்களுக்கு ஏற்பட்ட அவநம்பிக்கையை போக்குவதற்கும் ஒபேடேதான் உதவியிருக்கிறார்!"** என்று சிரித்தான்.

"இப்போது எப்படி உதவி இருக்கிறார்?" என்று கேட்டார் சியம்பா.

அடுத்தவர்களுக்கு புரியாத விஷயங்கள் தனக்கு தெரிந்திருக்கும் சந்தர்ப்பங்களில் இடி அமீனுக்குள் குபுக்கென்று சந்தோசம் பெருகும். இப்போதும் அதே உணர்ச்சியுடன் சியம்பாவுக்கு விளக்கினான்:

**"உகண்டாவுக்கு பெரிய அபாயம், வெளிநாட்டுச் சக்திகள் சதி என்று மக்களை மிரட்டப் போகிறேன். மக்கள் என் தவறுகளை மறந்து போவார்கள். எப்படி இருக்கிறது கதை?"** என்று கேட்டான் அமீன்.



இத்தனை வெளிப்படையாக தன் சுயரூபத்தை அமீன் கூறியது சியம்பாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அன்றிரவே உகண்டா வானொலி மூலம் அமீன் ஒரு செய்தி வெளியிட்டான்.

**"உகண்டாவை தீயசக்திகளின் பிடியில் இருந்து காப்பாற்ற நானும், எமது படைகளும் சகல தியாகங்களுக்கும் தயாராக இருக்கிறோம். உகண்டா மக்கள் ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள். எங்கள் நாட்டைக் காப்பாற்ற தர்ம யுத்தம் வெற்றிபெறும்வரை வேண்டுதல் தொடரட்டும்!"** என்று அறிவித்தான்.

முக்கிய நகரங்கள் எங்கும் வீதித் தடைகள் போடப்பட்டன. இரவு நேரங்களில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

**"நள்ளிரவு நேரத்தில் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்கவேண்டும். மக்கள் பீதியில் நித்திரை விட்டு எழவேண்டும். அப்போது தான் எல்லாவற்றையும் மறந்து போவார்கள். பெரிய எதிரியிடம் இருந்து உகண்டாவை காப்பாற்றியவன் என்று என்னை போற்றுவார்கள். அடுத்த பத்து வருச காலத்திற்கு என் பதவிக்கு ஆபத்து இருக்காது!"** என்று கூறினான் இடி அமீன்.



அதனையும் சியம்பாவிடமே விபரித்திருந்தான்.

ஒபேடேயின் ஆதரவுப் படையாக உள்ளே புகுந்தவர்கள் இடி அமீனின் படைகளை எதிர்க்க துணிச்சல் இன்றி பதுங்கி இருந்தனர்.

"ஊடுருவியுள்ள படைகள் குறித்து உண்மையாகவே நாம் விழிப்பாக இருக்க வேண்டும்." என்று சியம்பா எச்சரிக்க, தன் உடம்பு குலுங்கக் குலுங்க சிரித்தான் இடி அமீன்.

**"ஊடுருவிய படைகள் உயிரோடு இருந்தால் தானே நாம் விழிப்பாக இருக்க வேண்டும்!"** என்றான் சிரிப்பினூடே அமீன்.

சியம்பா புரியாமல் விழிக்க, **"உமக்கு எப்படிக் கூறினாலும் புரியாது. இப்போது செய்யப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் ஏன் தெரியுமா? மிகப் பெரிய எதிரியைத்தான் நான் அடக்கி இருக்கிறேன் என்று மக்கள் நம்பவேண்டாமா? அதற்காகத்தான்!"** என்றுவிட்டு, இதுகூட தெரியவில்லையே என்பதுபோல சியம்பாவை அனுதாபப் பார்வை பார்த்தான்.

கிளர்ச்சிப் படைகளை ஒழித்துக் கட்டுவதாக அமீனுக்கு கூறுவதற்காக, கிளர்ச்சிப் படையினர் கையில் மாட்டாத போது அப்பாவிகளை சுட்டுக்கொன்றன உகண்டா படைகள்.

எல்லைக் கிராமம் ஒன்றுக்குள் புகுந்த உகண்டா படைகள் அங்கிருந்த பெண்களை தங்கள் காமப்பசிக்கு இரையாக்கின.

எல்லைப் புறத்தில் பணியாற்றிய இராணுவ அதிகாரி ஒருவன் புத்திசாலி. பிழைக்கத் தெரிந்தவன்.

அழகான பெண்களாக அகப்பட்டால், எவ்வித சேதமும் செய்யாமல் அவர்களை அடைத்து வைத்தான்.

அவ்வாறு மொத்தம் 22 இளம் பெண்கள் தனியாக வைக்கப்பட்டு, தனியான வாகனம் ஒன்றில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்கள் அனுப்பப்பட்டது இடி அமீனின் மாளிகைக்கு.

தினமும் இரவில் மூன்று பெண்களை தன் அறைக்கு அழைப்பான் இடி அமீன். தன்னிடமுள்ள வக்கிரங்களையெல்லாம் அவர்களிடம் காண்பித்தான்.

22 இளம் பெண்களில் நான்குபேர் தப்பியோட எத்தனிக்க, அமீனின் மெய்க்காப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தனது ஆசை தீர்ந்ததும் அப் பெண்களை மெய்க்காப்பாளர்களிடம் கொடுத்துவிடுவான் அமீன்.

அவர்களுக்கும் திகட்டிய பின்னர் மீதி 18 பெண்களும் அவர்களின் ஊருக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

தனது மனமறிந்து அழகிகளை பிடித்து அனுப்பிய படை அதிகாரிக்கு உடனடியாக பதவி உயர்வும், அழகான பங்களா ஒன்றும் பரிசளித்தான் அமீன்.

இது எப்படியோ ஏனைய படை அதிகாரிகளுக்கும் எட்டிவிட்டது.

அவர்களும் அழகான பெண்களைக் கண்டால் கைதுசெய்து அமீனிடம் அனுப்பத் தொடங்கினார்கள்.

அவ்வாறு அனுப்பப்படும் அழகிகளை தனக்குப் பிடித்திருந்தால் மட்டும்தான் குறிப்பிட்ட அதிகாரியை குளிரவைப்பான் அமீன்.

ஒரு அதிகாரிக்கு ஏற்பட்ட அனுபவம் வித்தியாசமானது.

இரண்டு அழகிகளை அவன் அமீனிடம் அனுப்பிவைத்திருந்தான்.

இரண்டு பேரையும் தன் அறைக்கு அழைத்தான் அமீன். ஒருத்தி கை கால்களை அமுக்கிவிட்டாள். இன்னொருத்தி அமீனை அணைத்து முத்தமிட ஆரம்பித்தாள்.

தான் எதுவும் கூறாமலேயே இருவரும் அனுபவப்பட்டவர்கள்போன்று காரியத்தை ஆரம்பித்தது அமீனுக்கு சந்தேகத்தை கொடுத்தது.

தன்னை முத்தமிட்டவளின் கழுத்தில் பிடித்து "நீயார்?" என்று அமீன் உறுமிய உறுமலில், இரண்டுபேரும் உண்மையைக் கூறிவிட்டனர்.

அவர்கள் விபச்சாரத் தொழில் செய்பவர்கள்.

துள்ளியெழுந்த அமீன் ஒருத்தியை உதைத்து தள்ள அவள் மல்லாந்து விழுந்தாள். இன்னொருத்தி அறைவாங்கினாள்.

நேராக போனுக்கு சென்ற அமீன் இராணுவ தளபதியுடன் தொடர்புகொண்டு, குறிப்பிட்ட அதிகாரியின் பெயரைக்கூறி "அவனை பதவியில் இருந்து உடனே தூக்கியெறி. அவசியப்பட்டால் சொர்க்கத்துக்கு அனுப்பு!" என்று உத்தரவிட்டான்.

அன்றிரவே அந்த அதிகாரியின் பதவி காலியானது.

அதன்பின்னர் அமீனுக்கு பெண்களை அனுப்பி வைக்க அதிகாரிகள் தயங்கினார்கள்.

கிளர்ச்சிப் படைகள் என்ற போர்வையில் அப்பாவி குடிமக்கள் பலர் கொல்லப்பட்ட போதும், கிளர்ச்சிப் படையில் பலரையும் தேடிப் பிடித்து ஒழித்துக் கட்டின அமீன் படைகள்.

அப்படி இருந்தும் தான்ஸானியா எல்லையருகே இருந்த முட்டுக்குலா, பாராரா ஆகிய இராணுவ முகாம்கள் கிளர்ச்சிப்படைகளால் தாக்கப்பட்டன.

அம் முகாம்கள் தாக்கப்பட்ட போதும், முகாம் பொறுப்பு அதிகாரிகள் இருவரும் தப்பி வந்தனர்.

அவர்கள் இருவரையும் படைகள் முன்பாகவே சென்று சந்தித்தான் அமீன்.

**"வெற்றிகரமாக பின்வாங்கி வந்த உங்கள் திறமையை பாராட்டுகிறேன். எதிரிகளில் எத்தனைபேரை சுட்டு வீழ்த்தினீர்கள்?"** என்று கேட்டான் அமீன்.

பொய் சொல்லவும் அச்சம். உண்மையைச் சொன்னால் பதவி நிலைக்காது. இறுதியில் பொய்யைக்கூறுவது என்று முடிவு செய்த இரு அதிகாரிகளில் ஒருவர்: "நூற்றுக்கு மேற்பட்ட கிளர்ச்சிப் படைகள் பலியாகி இருக்க வேண்டும்" என்று பொய்யான கணக்கொன்றை கூறினார்.

அமீன் சிரித்தான்.

**"நூற்றுக்கணக்கான எதிரிகள் செத்தும்கூட எம்மால் முகாம்கள் இரண்டையும் பாதுகாக்க முடியவில்லை. இது பெரும் ஆச்சரியம் அல்லவா! இந்த ஆச்சரியத்தை உருவாக்கிய உங்களுக்கு இதோ என் சிறு பரிசு!"** சொல்லி முடிக்க முன்பாகவே அமீனின் கையில் பிஸ்டல் முளைத்திருந்தது.

டுமீல்! டுமீல்!

இரு அதிகாரிகளும் சாய்ந்தனர். பச்சையான இராணுவ சீருடைகள் சிவப்பாக நிறம்மாறத் தொடங்கியிருந்தன.

இருவரும் அடங்கிக் கொண்டிருக்க, கூடியிருந்த இராணுவத்தினரிடம் அசாதாரண அமைதி நிலவியது.

அது பயத்தால் ஏற்பட்ட அமைதியா? அனுதாபத்தால் ஏற்பட்ட அமைதியா என்பதை கண்டறிய அமீன் குரல் ஒலித்தது;

"இடி அமீனை ஏமாற்றுவது, தாய் நாட்டையே ஏமாற்றுவது மாதிரியானது. அதுதான் சுட்டேன். என்ன கொடுத்த தண்டனை திருப்திதானே?" என்றான்.

அனைவரும் விறைப்பாக நின்று சல்யூட் செய்தனர். அமீன் முகத்தில் திருப்தியான புன்னகை மலர்ந்தது.

(இடி தொடரும்)

**தருவது ரசிகன்**

---

## மோனிகா சுருட்டு



கிளின்ரன் மோனிகா விவகாரம் இப்போதும் சூடாகத்தான் இருக்கிறது. இந்த சூட்டோடு சூடாக மோனிகா பெயரில் புதுப் பொருட்கள் பல விற்பனைக்கு வந்துள்ளன.

அமெரிக்காவில் மோனிகா பெயரில் சுருட்டு விற்பனைக்கு வந்திருக்கிறது.

மோனிகா சுருட்டை வாயில்வைத்து பற்றவைப்பது மாதிரி படம் போட்டிருக்கிறார்கள். அந்த சுருட்டுக்கு ஏகப்பட்ட கிராக்கியாம்.

மோனிகா விவகாரத்தால் கிளின்ரனுக்குத்தான் நஷ்டம். பலருக்கு இலாபம். மோனிகாவுக்கு இலாபமோ இலாபம். மகா இலாபம்.

---

## டெய்லரின் சந்தோசம்



அந்தக்கால ஹொலிவூட் நடிகை எலிசபெத் டெய்லருக்கு இப்போது எழுபது வயது. எட்டுமுறை திருமணம் செய்தும் அத்தனையும் தோல்வியில் முடிந்தன.

தற்போது வீட்டில்.... அல்ல மாபெரும் மாளிகையில் வசிக்கும் எலிசபெத் டெய்லருக்கு வாழ்க்கை அலுப்பாக இருக்கிறதாம்.

மலைபோல பணம் இருந்தும் மனம் நிறைவாக இல்லை. இதனையறிந்த பொப் புயல் அழகி மடோனா ஒரு நடன நிகழ்ச்சி ஒன்றை பிரத்தியேகமாக ஏற்பாடு செய்தார்.

எலிசபெத் டெய்லரின் கடல் போன்ற வீட்டிலேயே அந்த நடன நிகழ்ச்சி நடந்தது.

நடனம் முடிந்த பின்னர் எலிசபெத் டெய்லர் மிக்க மகிழ்ச்சியாக காணப்பட்டதுடன், 'நான் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன்!" என்றும் கூறினாராம்.

அப்படி என்ன விசேஷம் அந்த நடனத்தில் என்று தெரியுமா?

கட்டான உடல் அமைப்பு கொண்ட இளைஞர்கள் உடம்பில் பொட்டுத்துணி கூட இல்லாமல் நடனம் ஆடிக்காட்டினார்களாம்.

---

## தங்கக் கதவுகள்

இந்தியாவில் குருவாயூர் கோயிலுக்கு பக்தர்கள் எண்ணிக்கை அதிகமாகிவருகிறது.

தற்போது இக் கோயிலின் சகல கதவுகளும் தங்கத்தால் செய்யப்பட்டு வருகின்றன.

வருமானம் அதிகரித்து வருவதால் குருவாயூர் கோவிலை தங்கமயமாக்கும் பணிகளும் தொடங்கிவிட்டன.

குருவாயூர் கோயில் கூரையில் ஏற்கனவே 105 கிலோ தங்கத்தில் கூரைத் தகடு பொருத்தப்பட்டுள்ளது. கண்ணனின் முன்னால் நெய் நிறைந்து நின்று எரியும் தூக்கு விளக்குகளும் தங்கமயம் தான். பூஜைக்கு பயன்படுத்தும் ஏனைய உபகரணங்களும் தங்கத்தால் செய்யப்பட்டவைதான்.

---

## ஒரு நடிகரின் மரணம்



வீரன்–சங்கீதா

மாவீரன் என்ற பெயருடன் 'புண்ணியவதி' என்ற படத்தில் கதாநாயகனாக நடித்து வந்த இளைஞர் மர்மமான முறையில் இறந்து போயுள்ளார்.

சங்கீதா ஜோடியாக 'புண்ணியவதி' என்ற படத்தில் நாயகனாக நடித்தார் மாவீரன். இவரது சொந்தப் பெயர் வீரன்.

எம்.ஜி.ஆர். ரசிகரான வீரன் நல்ல உடல்வாகு கொண்டவர்.

'புண்ணியவதி' படத் தயாரிப்பாளருக்கும் நடிகர் வீரனுக்கும் இடையே வெளியே தெரியக் கூடாத சில விவகாரங்களில் பிரச்சனைகள் தோன்றியதாம்.

ஒரு நடிகை விவகாரமும் அதில் அடக்கம் என்று கூறுகிறார்கள். குறிப்பிட்ட படத் தயாரிப்பாளர் அந்த நடிகையை தன் ஆசைக்கு இணங்குமாறு வலியுறுத்தினாராம். வீரன் தலையிட்டு தடுத்திருக்கிறார்.

பின்னர் அந்த நடிகை வீரனுடன் நெருக்கமாகியுள்ளார். சில பெரிய நடிகர்களால் ஏமாற்றப்பட்ட அந்த நடிகைக்கு வீரனின் நட்பு ஆறுதலாக இருந்ததாம்.

இதனை வயிற்றெரிச்சலுடன் நோக்கிய மறு தரப்பு படப்பிடிப்பு முடியும் வரை காத்திருந்து வீரனின் கதையை முடித்துவிட்டது.

தனது வீட்டில் குப்புற விழுந்த நிலையில் பிணமாகக் கிடந்தார் வீரன்.

திடகாத்திரமான வீரனை நான்கு ஐந்துபேர் சேர்ந்து அமுக்கிப் பிடித்துத் தான் தீர்த்துக்கட்டியிருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

'கழுத்தை நெரித்தே கொல்லப் பட்டுள்ளார்' என்பதை மரண விசாரணையில் அறிந்ததும் பொலிசார் துருவத் தொடங்கியுள்ளார்.

'புண்ணியவதி' படத்தின் தயாரிப்பாளரும் தீவிர விசாரணைக்கு உள்ளாகியிருக்கிறார்.

முதலில் சிறு சிறு வேஷங்களில் நடித்து வந்த வீரன் 'புண்ணியவதி' மூலம் மாவீரன் என்ற பெயருடன் கதாநயாகனாக மாறினார். அவரது கனவு நிறைவேறும் தருணத்தில் மரணம் அணைத்துக் கொண்டது.

'புண்ணியவதி' படத்தில் வீரனை நாயகனாகப் போடுமாறு சிபாரிசு செய்தவர் இளையராஜா.

---

## இளம் கொலைஞன்



அமெரிக்கா கனடா போன்ற நாடுகளில் சிறுவர்கள் பெரும் கொலைகாரர்களாக மாறிவருகிறார்கள். அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோன் கென்னடியின் உறவினரான ஜெ கென்னடியும் அவர் மனைவியும் சமீபத்தில் கொல்லப்பட்டனர்.

இக் கொலை தொடர்பாக கைதான பர்ன் என்பவரின் வயது பதின்மூன்று. இக் கொலை தொடர்பான விசாரணை கனடா வான்கூவரில் இளம் குற்றவாளிகளுக்கான நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com



# வெற்றி நடைபோடும் இரட்டையர்

'நூறு வருசம் வாழவேண்டும்' என்று வாழ்த்தினாலும் அத்தனைகாலம் ஆயுள் மீற்றா் வேலை செய்யாது என்று தெரியும். இந்தக் காலத்தில் நூறுவயதுவரை வாழ்வது உலக சாதனை.

அந்த உலக சாதனையை தனியாக அல்லாமல், இரட்டையராக படைத்துள்ளனர் இந்த இளைஞிகள்.

↑ ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கோல்ட், சில்வர் இருவரும் சில நிமிட இடைவெளியில் பிறந்த இரட்டையர்கள். இருவருக்கும் இப்போது வயது அப்படி ஒன்றும் அதிகமில்லை, 106! ஒரே வீட்டில் வசிக்கிறார்கள். ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஒன்றாய் போய்ச் சேர்ந்தால் நன்றாய் இருக்கும் என்றும் பிரார்த்தித்து வருகிறார்களாம்.

# தகவல் பெட்டி



## புதைகுழி வைத்தியம்

← என்ன இது மனிதப் புதைகுழியோ? என்று கலக்கமாக இருக்கிறதா? இதுவும் புதைகுழிதான். ஆனால் கொலைக்கானதல்ல, மருத்துவ கலைக்கானது.


இயற்கை வைத்திய முறையில் புற்றுநோய், மூளைக் கோளாறு, போன்ற பலவேறு நோய்களுக்கு சிகிச்சை தரப்படுகிறது.

மண்ணுக்குள் சில மணிநேரம் கழுத்துவரை புதைத்து வைத்து விட்டு தூக்கி விடுவார்கள். இந்த மண்புதையல் சிகிச்சையால் துரித நிவாரணம் கிடைக்கிறதாம். கம்போடியாவில் பூரிராம் என்ற பகுதியில் இந்த புதையல் சிகிச்சை நடக்கிறது.

## தவறு திருத்தம்

சென்றவார தகவல் பெட்டியில் டக்ளஸ் மைக் ஆர்தர் பிலிப்பைன்ஸ் தளபதி என்று தவறுதலாக இடம் பெற்றுவிட்டது. அமெரிக்கத் தளபதியான டக்ளஸ் 1945இல் பிலிப்பைன்ஸில் இறங்கிய போது படம் எடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட வெண்கலச் சிலை என்பதே சரியான தகவலாகும். தவறுக்கு வருந்துகிறோம்.

## ஓநாய் மனிதன்



→ முகமெல்லாம் மொசமொசவென்று முடி. சவரம் செய்வதென்றால் லேசுப்பட்ட வேலையல்ல. இவரை ஓநாய் மனிதன் என்று அழைக்கிறார்கள்.

மெக்ஸிக்கோ நாட்டைச் சேர்ந்த இவரது பெயர் ஃபஜார்டோ ஏஸ் வெஸ் ஜீசஸ் மனுவெல்.

முகத்தில் ஆண்களுக்கு முடி வளரும். ஆனால் இப்படி முகமெல்லாம் வளராது. உலகிலேயே முகமெல்லாம் முடிவளர்ந்த ஒரே மனிதர் என்று உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார். இது 21-ஏப்ரல், 1998 இல் எடுக்கப்பட்ட படம். முடியழகன்!

(தகவல்: ஏ.எஸ்.எம். நியாஸ்)

## இரும்புக் காது

சீனாவில் உள்ள ஷகியாவு எனும் இடத்தில் லிஜியன்வோ என்னும் சாதனைவீரருக்கு காது மகா கெட்டி. வேன் ஒன்றில் ஆட்களை ஏற்றி, அதனை கயிற்றால் கட்டி ஒரே இழுவையாக இழுக்கிறார்.

சீனாவின் பலவான் என்று அழைக்கப்படும் இந்த காது வீரரின் சாதனையை செய்ய காதுள்ள வேறு யாரும் முன்வரவில்லை. போட்டிக்குப் போய் காதே போய்விட்டால் என்ன செய்வது!

↘ பாரமான பொருட்களையும், வண்டிகளையும் பற்களால் அல்லது தலைமுடியால், மீசையால் கட்டி இழுக்கும் காட்சிகளை தகவல் பெட்டி தந்திருக்கிறது. ஆனால் காதால் இழுக்கும் காட்சியை இதுவரை கண்ணால் கண்டதில்லை. முதல் முறையாக இப்போதுதான் பார்க்கிறோம்.



## வெங்காயப் போராட்டம்

↓ இது ஒரு புதுவிதமான போராட்டம். வெங்காய விலை உயர்வைக் கண்டித்து தாய்க்குலமும், தந்தைக்குலமும் கொதித்துப்போய் போராட்டத்தில் குதித்திருக்கிறது.


போராட்டம் நடைபெற்றதீ இந்தியத் தலைநகரான புதுடில்லியில். போராட்டம் நடத்தியவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்கள். தங்கள் போராட்டம் புதுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக ராட்சத வெங்காய உருவம் ஒன்றைச் செய்து வைத்திருந்தனர்.

ஒரு பலனும் இல்லாத போராட்டத்தை 'வெங்காயப் போராட்டம்' என்றும் கூறுவர். இது உண்மையாகவே வெங்காயப் போராட்டம்.



## சாதனை ஆம்லெட்

↓ டக்கு டக்குகென்று முட்டை முட்டையாக உடைத்து ஆளாளுக்கு கை வலி வந்துவிட்டதாம். பின்னே, 21 ஆயிரம் முட்டைகளை உடைத்து முடிப்பது என்றால் சும்மாவா.



ஹொங்கொங்கைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு கின்னஸ் புத்தகத்தில் தங்கள் முயற்சி இடம்பெறவேண்டும் என்று ஆசை. அதற்காக உலகில் மிகப் பெரிய்யயய முட்டைப் பொரியல்ல்ல் செய்ய நினைத்தனர்.

மொத்தம் 21 ஆயிரம் முட்டைகளைப் பயன்படுத்த நினைத்தும் ஒரு முட்டை மட்டும் கீழே விழுந்து உடைந்துவிட்டதாம். அதனால் 20 ஆயிரத்தி 999 முட்டைகளைப் பயன்படுத்தி இந்த மகா பெரிய ஆம்லெட்டை செய்து முடித்தனர். இறுதியில் பார்வையாளர்களுக்கு பகிர்ந்து கொடுத்தும் மீதி இருந்ததாம்.

## குடிப்பதில் வல்லது



↑ மனிதாபிமானம் காணாமல் போய்க்கொண்டிருந்தாலும், மிருகாபிமானம் கிடு கிடுவென்று வளர்ந்துகொண்டுதான் இருக்கிறது. மிருகங்களுக்கு மவுசும், சொகுசும் கூடிக்கொண்டே போகிறது.

அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தில் சாண்டியாகோ வனவிலங்குப் பூங்காவில் அண்மையில் பிறந்த காண்டாமிருகக் குட்டிக்கு புட்டியில் பாலூட்டுகிறார் பெண்மணி.

வெள்ளையின வகையைச் சேர்ந்த இந்த காண்டாமிருகக் குட்டியின் எடை 56 கிலோ. பால் கொடுத்து கட்டுப்படியாகவில்லையாம். ஒரு வேளைக்கு ஒன்றே கால் லீட்டர் வீதம் தினமும் குறைந்தது ஏழுமுறை பால் குடிக்கிறதாம். இப்போதே இப்படி என்றால் வளர்ந்த பின்னர் என்னாகுமோ?



படிப்பகம்

www.padippakam.com

## ஒரு கன்னத்தில் அறைந்தால்

பகுத்தறிவுக் கருத்துக்களில் மகாநம்பிக்கை உள்ளவர் சத்யராஜ். "ஒரு கன்னத்தில் அடித்தால் இரு கன்னத்திலும் திருப்பிக் கொடுப்பேன். அதுவும் இரத்தம் வருவது மாதிரி கொடுப்பேன்" என்கிறார் கருணாநிதியின் பவளவிழாவை முன்னிட்டு திரையுலகத்தினர் நடத்திய விழாவிலும் சத்யராஜ் கலந்து கொள்ளவில்லை.



வர்ஷா

## காதோடு சொல்லுகிறோம்

சூப்பர் நடிகரின் கதாநாயகியான சௌந்தர்யமான நடிகை கன்னடம் கற்றுவருகிறார். சொந்த மொழியிலேயே பேசி சூப்பர் நடிகரை மயக்கத்தான் கன்னடப் பயிற்சி. ஆனால் சூப்பருக்கு தமிழ்தான் பிடிக்கும்.

மார்க்கண்டேய நடிகரின் வாரிசான சூரியமான நடிகருக்கு இன்னமும் கமராக் கூச்சமும், பெண் கூச்சமும் போகவில்லை. நாயகிகளை நெருங்கும்போது முகத்தில் கூச்சம் குடியேறிவிடுகிறது. தந்தையார் தக்க பயிற்சி கொடுப்பாரா?

தனது பெயரில் 'ராம்' என்பதை வைத்திருக்கும் நடிகை அவர். சூப்பர் நடிகரின் அறிமுகம். அந்த நடிகைமீது புதிய பாதை கண்ட நடிகருக்கு பிரியமாம். நடிகையும் அவரும் தனிமையில் இனிமை காணுகிறார்கள். கிளின்ரன் கதைதான் அங்கும் நடப்பதாக கிசுகிசுக்கள் வெளியாகியும் உள்ளன. சங்கீத நடிகையும், சீமைப்பசு நடிகையும் ஓரமாய் போய்விட்டதால், 'ராம்' நடிகையை கொத்தியிருக்கிறார் நடிகர்.

'நக்ம' நடிகையுடன் ஜோடி சேர வேண்டாம் என்று மாவீர நடிகருக்கு 'சரச' நடிகர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அந்த வேண்டுகோள் மீறப்பட்டதை சென்றவாரம் கூறினோம். 'நக்ம' நடிகைக்கு இப்போது மாவீர நடிகர்தான் முழுப்பாது காப்பு கொடுக்கிறாராம். அதனால் 'சரச' நடிகர் மாவீர நடிகருடன் நட்பை முறித்து விட்டாராம்.

## ரசிகர்கள் எதிர்ப்பு

ரஜினிக்கு அப்பாவாக சிவாஜி நடிப்பதை ரஜினி ரசிகர்கள் விரும்பவில்லையாம். பட வெற்றியில் சிவாஜியின் பங்குதான் பெரிதாக பேசப்படும் என்று நினைக்கிறார்களாம். அதுபோல ரம்யா கிருஷ்ணன் ரஜினியின் ஜோடிகளில் ஒருவராக தோன்றுவதையும் ரஜினி ரசிகர்கள் விரும்பவில்லை.

சென்ற தலைமுறை நடிகையாகிவிட்டார் ரம்யா கிருஷ்ணன். நமது தலைவருக்கு பொருத்தமான ஜோடி அல்ல என்கிறார்களாம்.

ஆனால் ரம்யா கிருஷ்ணன் கார்த்திக்குடனும் தமிழில் 'அத்தை மகன்' படத்தில் ஜோடியாக நடிக்கிறார். வயது தெரிகிறதா என்ன?

## தமிழ் தெரிந்த பாடகி

தமிழ்ச் சினிமாப் பாடல்களை தமிழ் தெரியாத பாடகர்களும், பாடகிகளும் பாடிப் பிரபலமாகின்றனர். பாடலை தங்கள் மொழியில் எழுதிவைத்துக் கொண்டு பாடுவார்கள்.

ஆனால், 'நலம் நலமறிய ஆவல்' பாடல் மூலம் பிரபலமான அனுராதா ஸ்ரீராமுக்கு நன்றாகத் தமிழ் தெரியும். தமிழில் எழுதி வைத்துத்தான் பாடுகிறார்.

அனுராதா ஸ்ரீராமின் அம்மா ரேணுகா 'கந்தன் கருணை' படத்தில் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம் உட்பட 500 பாடல்களுக்கு மேல் பாடியுள்ளார் அனுராதா ஸ்ரீராம்.

'மின்சாரக்கனவு' படத்தில் இடம்பெற்ற 'அன்பெனும் மழையிலே' பாடலை வெகுளித்தனமான குரலில் பாடுமாறு கூறினாராம் ரகுமான். அதனைக் குரலில் கொண்டுவர மிகவும் சிரமப்பட்டுப்போனாராம்.

## வெற்றிச் சிரிப்பு

'என் ஆசை ராசாவே', 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' இரண்டும் வெற்றி பெற்றுவிட்டதால் உச்சக்கட்ட மகிழ்ச்சியில் இருக்கிறார் ரோஜா. முன்பு நிருபர்களை கண்டால் முகம் சுளிப்பவர் இப்போது வெற்றிச் சிரிப்புடன் பேட்டி மேல் பேட்டி கொடுத்து வருகிறார்.

## முகப்பில்

அப்பாஸ்–அப்பாஸ்

நக்மா



ரம்பா

## குஷ்பு ... ரம்...

முன்றா...
தாக குஷ்...
முன்றா...
மு...
ஒரே ...
புகை...

## 15 இலட்சம்

'படையப்பா'வில் நடிக்க சௌந்தர்யாவுக்கு சம்பளம் இந்திய பணமதிப்பில் 15 இலட்சம் ரூபாய். ரஜினி படம் என்பதால்தான் அத் தொகைக்கு ஓ.கே. சொன்னாராம். இல்லையானால் 25 இலட்சத்துக்கு ஒரு வெள்ளிக்காசுகூட குறைக்கமாட்டார்.

தெலுங்கில் வெற்றிக் கொடி பறக்கவிட்டுள்ள சௌந்தர்யாவுக்கு அருணாச்சலத்தில் நடித்த பின்னர் கூட தமிழில் சரியான கவனிப்பு இல்லை. அக்குறையை படையப்பா போக்கும் என்று நினைக்கிறார்.



கார்த்திக்-ரம்யா கிருஷ்ணன்
படம்: அத்தை மகன்

## சிலுக்கின் ஆவி

சிலுக்கு ஆவி அவர் வீட்டில் நடமாடுவதாக, அவரது வீட்டுப் படத்தையும் பிரசுரித்து தமிழக சஞ்சிகை ஒன்று சிலமாதங்களுக்கு முன்பாக வெளியிட்டிருந்தது.

சிலுக்கு இருந்தது சொந்த வீடல்ல. வாடகை வீடு. அந்த வீட்டை மிகக் குறைந்த விலைக்கு தட்டிப் போக நினைக்கிறாராம் ஒரு பெரும் புள்ளி. அவர்தான் குறிப்பிட்ட பத்திரிகைக்கு ஆவிக்கதை கட்டி விட்டாராம்.

இது போதாது என்று ஆவி அமுதா என்ற பெண் சிலுக்கின் ஆவியை பேட்டி கண்டதாகவும் தமிழக சஞ்சிகை ஒன்று கூறியுள்ளதுடன், அப் பேட்டியையும் வெளியிட்டுள்ளது. காதில் பூ சுற்றுகிறார்கள்.

## மினி சினி

* 'அதிரடிப்படை', 'லத்திசார்ஜ்' ஆகிய இரண்டுபடங்களைச் சொந்தமாகத் தயாரித்து கையைச் சுட்டுக் கொண்ட ரோஜா, மறுபடி சொந்தத் தயாரிப்பில் இறங்குகிறார். இப்படத்தை இயக்கப்போவது செல்வமணி அல்ல. 'சொல்லாமலே' படத்தை இயக்கிய சசி.

* 'ஜீன்ஸ்' படத்திற்கு ஒளிப்பதிவு செய்த பிரபல ஒளிப்பதிவாளரான அசோக்குமார் 'காமா' என்ற படத்தை இயக்குகிறார். இப்படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகும் விஷால், அசோக்குமாரின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

* 'ஹைவே பெங்களூர்' இது தெலுங்கில் தயாரான ஆக்ஷன் படம். அருண்பாண்டியன் கதாநாயகனாக நடித்துள்ள இப்படம் தமிழில் 'டைம்பாம்' என்ற பெயரில் மொழிமாற்றப்படுகிறது. இப்படத்தில் பாடல்களே கிடையாது என்பது முக்கிய அம்சம்.


* 'ராஜஸ்தான்' படத்தில் சரத்குமார்-விஜயசாந்தியுடன், சாந்தினி என்ற புதுமுகம் அறிமுகமாகிறார். சாந்தினி ஏற்கனவே 'ஏ' என்ற கன்னடப்படத்தில் கதாநாயகியாக நடித்தவர்.

* 'ஆஹா' தமிழில் பெரும் வரவேற்பைப் பெற்றதால், தமிழ்ப் படத்தை இயக்கிய சுரேஷ் கிருஷ்ணாவே தெலுங்குப் படத்தையும் இயக்குகிறார். தமிழில் பானுப்பிரியா நடித்த வேடத்தில் தெலுங்கில் ஜெயசுதா நடிக்கிறார்.

* 'வசந்தகாலப் பறவை', 'சூரியன்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கிய பவித்ரன் தற்போது தெலுங்குப் படம் ஒன்றை இயக்கிவருகிறார். இவர் விரைவில் தமிழ்ப்படமொன்றை இயக்கவுள்ளார். இதில் விஜய் கதாநாயகனாக நடிக்கிறார்.

* 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தில் விஜய் ஜோடியாக நடித்துவரும் சிம்ரான், சில காட்சிகளில் கண்பார்வை இழந்தவராக நடிக்கிறார். சூப்பர்குட் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் இப்படத்தை எழில் என்னும் புதிய இயக்குநர் இயக்குகிறார்.

* 'கை விளக்கு' என்ற புதிய படத்தில் ராஜீவ் கிருஷ்ணா-சங்கீதா இணைந்து நடிக்கிறார்கள். இப்படத்தில் றிச்சர்ட் ராஜசேகர் என்ற நெதர்லாந்து நாட்டுத் தமிழ் இளைஞர் இரண்டாவது கதாநாயகனாக நடிக்கிறார்.



விஜய்-ரம்பா

## கனவுக்கன்னி ஐஸ்வர்யா ராய் அப்பாஸின் அதிரடிப் பேட்டி

சினிவிசிட்

கிடு கிடுவென்று உயர்ந்து சட்டென்று சரிந்துபோனார் அப்பாஸ். ரஜினி, கமலுக்கு அடுத்த இடத்தை பிடிக்கப்போகிறார் என்று தயாரிப்பாளர்கள் துரத்தினர். மளமளவென்று படங்கள் குவிந்தன. கதை கேட்காமல் நடித்துத் தள்ளினார். விளைவு, அடுத்தடுத்து தோல்விப் படங்கள். 'சரியான வழிகாட்டல் இல்லாததுதான் சறுக்கலுக்கு காரணம்' என்று கூறும் அப்பாஸின் அதிரடிப் பேட்டி இது.

**கே: ஆரம்பத்தில் உங்களுக்கு இருந்த பெண் ரசிகைகள் இப்போதும் இருக்கிறார்களா?**

அ: நிச்சயமாக! கல்யாணமானா இமேஜ் போயிடும் என்ற காலமெல்லாம் இப்ப போயிடுச்சு. எப்படி ஒரு படத்தோட ரிசல்ட் ஒவ்வொரு ஏரியாவுல ஒவ்வொரு மாதிரி இருக்கோ, அதே போலத்தான் இமேஜும். சென்னையில் படப்பிடிப்பு நடக்கறச்சே என் மனைவிதான் மதிய உணவு கொண்டு வருவாங்க. அப்போ என்னிடம் ஒட்டோகிராப் வாங்கும் ரசிகைகள் என் மனைவியையும் விசாரித்து விட்டு போவார்கள்.

**கே: உங்கள் கனவுக் கன்னி யார்?**

அ: சிக்கலில் மாட்டிவிடுகிறீர்கள். பரவாயில்லை சொல்கிறேன். ஐஸ்வர்யா ராய். எனக்கு மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கிற எல்லோரதும் கனவுக் கன்னி அவர்தான்.

**கே: உங்கள் மனைவி இருக்கும்போதும் இதே பதிலைச் சொல்வீர்களா?**

அ: கண்டிப்பாக! ரசிப்பு வேறு, குடும்பம் வேறு.

**கே: உங்கள் பொழுதுபோக்கு என்ன?**

அ: ஃபுட்பால். ஏன் சிரிக்கிறீங்க. நான் இப்போதும் விளையாட்டுப் பிள்ளைதான். வேல்ட் கப் நடந்தபோது படப்பிடிப்பு இருந்தாலும் தொடர்ந்து மேட்ச் பார்த்தே... பிரேசில் ஜெயிக்கும் என்று பார்த்தேன். ஆனால் ஃபிர... கப்பை தட்டிக்கொண்டு போய்விட்டார்கள்.

**கே: இப்போதுள்ள நடிகர்களில் உங்களுக்குப் பிடித்தவ...**

அ: எல்லோரும்தான்! குறிப்பாக சொல்லணும்னா சூர்... இப்படிச் சொல்லலாம். பொதுவாக நாங்கள் நட்போடுதான்...

www.padippakam.com

# -சுந்தர் மோதல் ...ாவால் வம்பா?

...ண்டுகளில் திருமணம் செய்யப் போவ ...வும், இயக்குநர் சுந்தரும் அறிவித்து ...டு களாகிவிட்டன.

...றாண்டுகளும் இருவரும் ஒன்றாகவே வீட்டில் இருந்தனர். இப்போது சிறு ...சல்.

ரம்பாவுடன் சுந்தர் தனியாகத் தங்கிய ...ாச்சாரம் குஷ்பு காதில் விழுந்துவிட்டது. ...ற்கனவே ஒரு முறை ரம்பாவும் சுந்தரும் மோதிக்கொண்டு பிரிந்தனர். இப்போது மறுபடி ஐக்கியமாகிவிட்டனர்.

குஷ்புவுக்கு பயம் பிடித்திருக்கிறது. இப்படியேவிட்டால் தளதள ரம்பா சுந்தரை அள்ளிக் கொண்டுபோய்விடுவாரோ என்றுதான் பயம்.

அதனால் திருமணப் பேச்சை எடுத்தாராம் குஷ்பு. சுந்தரோ கழுவுற தண்ணீரில் நழுவுற மீனாக நடந்து கொள்கிறாராம். அதனால் குஷ்புவின் சந்தேகம் மேலும் வலுப்பட்டிருக்கிறது.

'ரம்பாவிடம் சுந்தருக்கு இருப்பது காதலல்ல. அது வேறு சமாச்சாரம். குஷ்புவைத்தான் காதலிக்கிறார். அது புரியாமல் குஷ்பு அவசரப்படுகிறார்' என்று கூறுகிறார்கள் சுந்தரின் உதவி இயக்குநர்கள்.

ஆனால் குஷ்பு கோபமாகத்தான் இருக்கிறார். "எப்போது திருமணம்?" என்று கேட்டால் "அவரிடம் போய்... கேளுங்கள்" என்கிறார்.

# படையப்பா 20 கோடி ஸ்ரீதரும் பங்காளி

'படையப்பா' படப்பிடிப்பு ஆரம்பமாக முன்னரே வியாபாரம் சூடு பிடித்துவிட்டது.

ரஜினியின் நண்பர்களும் பங்குதாரர்களாக உள்ள படம் 'படையப்பா'. வியாபாரத்தை ரஜினியே நேரடியாக கவனிக்கிறார். இதுவரை இருபது கோடி ரூபாய்கள் முற்பணமாக மட்டும் குவிந்துள்ளதாம்.

பழம்பெரும் இயக்குநர் ஸ்ரீதரும் ஒரு பங்காளராக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளாராம்.

ஜெயலலிதாவை அறிமுகம் செய்தவர் ஸ்ரீதர். 'காதலிக்க நேரமில்லை' போன்ற பல வெற்றிப்படங்களை உருவாக்கியவர். இப்போது நோயிலும், கஷ்டத்திலும் இருக்கிறார்.

'அருணாச்சலம்' படம் எடுத்த சமயம் ஸ்ரீதரையும் பங்காளராக்க விரும்பினார் ரஜினி. 'எனக்கு பிச்சை போடுகிறாயா? உன் ரேட் என்ன? காசாகத் தருகிறேன். படம் பண்ணித் தருகிறாயா?' என்று கேட்டாராம் ஸ்ரீதர்.

ஆனால், இப்போது தானே ஃபோன் பண்ணி தன்னையும் ஒரு பங்காளராக சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டாராம்.

கன்னடத்தில் வெற்றி பெற்ற ஒரு படத்தின் தழுவல் தான் 'படையப்பா' என்பது இன்னொரு தகவல்.

# அவருக்காக இவர்

ஒரு இயக்குநரின் படத்தில் இன்னொரு இயக்குநர் பணியாற்றுவது சகஜமாகிவிட்டது.

உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் படத்தில் ஒரு பாடல் காட்சியை வி.ஐ.பி. பட இயக்குநர் சபா சுட்டுக்கொடுத்தார்.

இப்போது சேரன் இயக்கும் 'தேசியகீதம்' படத்தின் பாடல் காட்சி ஒன்றை 'காதல் மன்னன்' பட இயக்குநர் சரண் சுட்டுக் கொடுக்கிறார்.

# அர்ஜுனுக்கு வேட்டை

'ஜீன்ஸ்' படத்தின் பாடல்கள் பிரபலமானாலும் படம் அந்தளவு ஓடவில்லை. குறிப்பாக கிராமப்புறங்களில் வசூல் திருப்தியில்லை.

அதனால் அடுத்த படத்தை கிராமங்களும் ரசிக்கும்படி எடுக்கப்போகிறார் ஷங்கர்.

அர்ஜுன், மனிஷா கொய்ராலா நடிக்கும் 'முதல்வன்' படம் 'ஜென்டில் மேன்' அளவுக்கு வெற்றிக்கொடி நாட்டும் என்கிறார் ஷங்கர்.

அர்ஜுனுக்கு மகா சந்தோசம். மும்பாய் நடிகைகளுடன் நடிப்பது என்றால் ஆக்ஷன்கிங்குக்கு அல்வா சாப்பிடுவதுமாதிரி. ஆனாலும் தபுவுடன் சற்று அதிகமாக உரசியதால் தாமிஸ் மணிக்கொடி படப்பிடிப்பு தள்ளிப் போனது. அதுபோல் மனிஷா விடமும் வைத்துக் கொள்ளா விட்டால் சரிதான். ஆனால் மனிஷா தபு மாதிரி அல்ல. அனுசரிக்கும் ஜாலியான நடிகை.

'முதல்வன்' படத்தின் இசை ஏ.ஆர்.ரகுமான். வசனம்: சுஜாதா. ஒளிப் பதிவு கே.வி. ஆனந்த். இவர் இந்திய தேசிய விருது பெற்றவர்.




முரளி-ரோஜா

திரையுலக மறுபக்கம் 73

# அசுர வில்லனின் மறைவு!

## நடிகரை விரட்டிய நடிகை

தமிழ்த் திரையுலக அசுர வில்லன் பி.எஸ்.வீரப்பா. 'அடைந்தால் மகாதேவி. இல்லையேல் மரண தேவி' ஹா.ஹா.ஹா!, 'சபாஷ் சரியான போட்டி' போன்ற சின்ன சின்ன நெத்தியடியான வசனங்கள் வீரப்பாவின் முத்திரை.

நடிகர் மட்டுமல்ல தயாரிப்பாளருங்கூட. எம்.ஜி.ஆர் நடித்த ஆனந்தஜோதி, சிவாஜி நடித்த ஆண்டவன் கட்டளை உட்பட பல வெற்றிப்படங்களை தயாரித்தவர்.

வீரப்பாவின் சிரிப்பு என்றால் திரையரங்கமே அதிரும். அதேபோல சிரித்துப் பார்க்காத ரசிகர்களே அக்காலத்தில் இல்லையெனலாம்.

அந்த வீரப்பா கடந்த செப்டம்பர் 13ம் திகதி மரணமாகிவிட்டார்.

### அறிமுக நாயகன்

குண்டான நடிகை அவர். ஒரு காலத்தில் ரஜினி, கமல், பிரபு போன்ற முன்னணி நாயகர்களுடன் கவர்ச்சி கலந்த ஹீரோயினாக நடித்தவர்.

காதலில் தோல்வி கண்ட அந்த நடிகை இயக்குநர் ஒருவரை காதலித்தார்.

அத்தருணத்தில் இளம் நடிகர் ஒருவர் அறிமுகமானார். ரசிகைகளின் காதல் தேசத்தில் ஆட்சி நடத்திய அந்த நடிகர்மேல் நடிகைகளுக்கும் ஒரு கண். இளம் நடிகைகள் மட்டுமல்லாமல் நடுத்தர வயது நடிகைகளும் நடிகர்மேல் ஆசைப்பட்டனர்.

அப்படி ஆசைப்பட்டவர்களில் குண்டான நடிகையும் ஒருவர். நடிகருக்கு இளம் நடிகைகள்மேல்தான் பிரியம். அதனால் நடுத்தர நடிகைகளின் அழைப்புக்களை நைசாகத் தவிர்த்து வந்தார். ஆனால் குண்டான நடிகைமீது நடிகருக்கும் கொள்ளை ஆசை.

நடிக்க வருவதற்கு முன்னர் நடிகையின் படங்களைப் பார்த்து ஜொள்ளு விட்டவர் அந்த நடிகர். இப்போது நடிகையே தன்னுடன் வலிய ஃபோன் செய்து கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்போது நடிகருக்கு தலைகால் புரியாத சந்தோசம்.

நடிகரின் முன்னேற்றத்திற்கு வாழ்த்துச் சொல்வதில் ஆரம்பித்த நடிகை படிப்படியாக இரட்டை அர்த்தங்களில் பேசுமளவுக்கு ஃபோனிலேயே நெருக்கமானார்.

### அழைப்பு

ஃபோன் நெருக்கத்தின் பின்னர் இளம் நடிகரை தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தார் நடிகை. கரும்பு தின்ன கூலியா என்ற நடிகரும் விரைந்து போனார்..

வீட்டில் நடிகை மட்டும்தான் இருந்தார். இயக்குநர் படப்பிடிப்பு ஒன்றுக்காக வெளியூர் போயிருந்தார்.

தடபுடலான விருந்து கொடுத்து அசத்தினார் நடிகை. விருந்து முடிந்ததும் வீட்டைச் சுற்றிக் காட்டினார். ஒவ்வொரு அறையாக காட்டிக்கொண்டே வந்தார்.

படுக்கை அறை வந்ததும் உள்ளே வந்து பார்க்குமாறு அழைத்தார். நடிகர் உள்ளே செல்ல, அவரது பின்னால் வந்த நடிகை பின்புறமாகவே அவரை கட்டியணைத்துக் கொண்டார். பஞ்சுமூட்டை ஒன்று முதுகில் சரிந்ததுமாதிரி இருந்தது நடிகருக்கு.

நடிகையின் வேகத்தைக் கண்டு நடிகரே தடுமாறிப் போனார். நடிகையோ நடிகர்மீது தனக்கிருந்த ஆசைகளையெல்லாம் கொட்டித் தீர்த்துவிட்டார்.

அதன்பின்னர் பலமுறை இருவரும் சந்தித்தனர். நடிகருக்கு சில சமயங்களில் நடிகையின் நட்பு பெரும் தொல்லையாகவும் மாறிப்போனது.

இவ்விஷயம் இயக்குநருக்கும் ஜாடைமாடையாக தெரியவந்தது. அக்கட்டத்தில் இயக்குநரும் மூன்றெழுத்து இளம் நடிகை ஒருவரோடு நட்பாக இருந்தார். அதனால் குண்டான நடிகையை அவரால் கண்டிக்கவும் முடியவில்லை.

### எச்சரிக்கை

இளம் நடிகர் தங்கியிருந்த ஹொட்டலுக்கு அடியாட்களை அனுப்பி எச்சரித்தார் இயக்குநர். "நாங்கள் நீங்கள் நினைப்பதுபோல தவறான எண்ணத்துடன் பழகவில்லை. அவர் எனக்கு ரசிகை. நான் அவரது ரசிகன். வேறு எதுவும் கிடையாது!" என்று இயக்குநருக்கு தானே ஃபோன் பண்ணிக் கூறினார் நடிகர். அத்தோடு நடிகையின் வீட்டுக்கு செல்வதையும் நிறுத்திவிட்டார்.

ஆனால் நடிகைக்கு இருப்புக் கொள்ளவில்லை. இளம் நடிகர் தங்கியிருந்த ஹொட்டலுக்கே தேடிவந்துவிட்டார். ஹொட்டலில்வைத்தே நடிகரை பாடாய்படுத்திவிட்டார்.

அதனால் அந்த ஹொட்டலை காலிபண்ணிவிட்டு வேறு ஹொட்டலுக்கு சென்றார் நடிகர். அந்த நடிகரும் இன்னொரு நடிகையும் காதலிப்பதாக செய்திகள் பரவிக்கொண்டிருந்த நேரம் அது.

அந்த நடிகைமீது குண்டான நடிகைக்கு கோபம். அவர் சொல்லித்தான் தன்னை சந்திக்காமல் இருக்கிறார் நடிகர் என்று நினைத்தார்.

அந்த நடிகைக்கு ஃபோன் செய்து நேராகவே கேட்க, அவர் சொன்ன பதிலால் அதிர்ந்து போனார் குண்டான நடிகை.

"நானும் அவரும் சிறு வயதில் இருந்தே ஃப்ரெண்ட்ஸ். ஒன்றாகத்தான் படித்தோம். செக்ஸ் எங்களுக்கு பொழுது போக்கு. வேறு யாரும் அவருடன் நட்பாக இருப்பது பற்றி நான் ஏன் கவலைப்படப் போகிறேன். நாங்கள் என்ன காதலிக்கிறோமோ? நோ! நெவர்! வேணுமானால் நாங்கள் இரண்டுபேருமா சேர்ந்து அவரைச் சந்திக்கலாமா?" என்றார் நடிகை. குண்டான நடிகை அதற்குமேல் பேசாமல் ஃபோனை வைத்துவிட்டார்.

### ஆலோசனை

குண்டான நடிகைக்கு பலபேர் ஆலோசனை கூறினார்கள் நடிகரை நம்பி இயக்குநரை இழக்க வேண்டாம். அந்த நடிகர் நம்பகமானவரல்ல என்று கூறினார்களாம். அதனால் நடிகையும் மெல்ல ஒதுங்கிக் கொண்டார்.

அந்த நடிகருக்கு பின்னர் திருமணம் நடந்தபோது மலர்ச்செண்டுடன் சென்று வாழ்த்திவிட்டு வந்தார் நடிகை. இப்போது அந்த நடிகரின் மனைவியும், நடிகையும் நெருக்கமான தோழிகள்.



ன்ஸ்

... அஜித். விஜய்... பழகுகிறோம்.

சாய்குமார்-சௌந்தர்யா
படம்: ஈஸ்வர அல்லா

www.padippakam.com

## அகதி வாழ்வும் அவளின் நினைவுகளுமாய்....

முழுவதுமாக கும்மிருட்டு!
ஒரு மெழுகுதிரிதானும் இல்லை;
ஒரு மின்மினியுமில்லை;
அடைக்கப்பட்ட அறையில்
தனிய நான் மட்டும்!
அகதி என்பது இதுதானோ?
***
என் ஞாபகங்களைக் கிளறுகிறது
மணிக்கூடு.
உடைந்து போன என் வாழ்வினைப்போல அது!
நினைக்கும் படியான
உத்தரவுடன் அவள் வாங்கித் தந்தது!
அவளைப் போல
அதுவும் வெள்ளை நிறம்!
***
அந்நிய மண்ணில் நினைவுகளைச்
சுமக்க முடிகிறது;
பொருட்களையுமா?
ஓரிரு இரவுகளைக் கடத்த முடியும்;
சுமை கூடிய அவைகளை
எவ்வாறு என்னால் ஜீரணிப்பது?
***
உன் வாசனைகளைக் கடந்து
எத்தனையாயிரம் மைல்களுக்கு அப்பால்...
எல்லாம் அங்கு போலத்தான்...
ஆனால் வெறுமை மட்டும்
அங்கிங்கெனாத படிக்கு பரந்து போய்...!
***
நீ நலமாயிருக்க வேண்டும்!
அதுதானே என் பிரார்த்தனை!
எங்கே அந்தப் பல்கலைக்கழக
தொலை பேசிகள்...?
என்னைப் பற்றியும் என் நினைவுகள் பற்றியும்
அவளிடம் கொஞ்சமாவது
சொல்லுங்களேன்!
***
என்னவளைச் சுமந்து செல்லும்
வயல்க் காட்டுப் பாதைகளே...!
உங்களுக்கு மெத்தைகள்
கட்டிக் கொள்ளுங்கள்!
***
அவள் பாதணி நொந்துவிடும்.
சொல்வதற்கு என்ன இருக்கிறது...?
தூரம் மட்டும்தானா வாழ்க்கை?
***
அகதிகளாய் இருந்துகொண்டு,
தாயமண்ணை உலகப்படம்
காட்டிக் கொண்டிருக்கிறதே...
அதுதான் கொடுமை!

ஹீரா அனஸ், இலண்டன்.

## உயிர் உதிர்ந்த பூமி



படைபலம் உண்டு என்ற மிதப்போடு பலநாடுகள்மீது படையெடுத்தது ஜப்பான். இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன் ஹிட்லருடன் கைகோர்த்து நின்று களம் பல கண்டது ஜப்பான்.

இறுதியில் களநிலவரம் மாறியது. நேசநாட்டுப் படைகள் ஜப்பான் படைகளைப் புரட்டி எடுத்தன. ஜப்பானில் குவாடல்கனால் என்னும் இடத்தில் நடந்த சண்டையில் பலியாகிக் கிடக்கும் ஜப்பான் படைகளில் ஒருபகுதியினர்தான் இவர்கள். 1942ல் இந்தச் சண்டை நடைபெற்றது. இறுதியில் ஜப்பான் வீழ்ந்தது. அதன் வெற்றிப் பெருமிதம் புதையுண்டு போனது. தேவையற்ற யுத்தத்தை வலிந்து ஆரம்பித்த ஜப்பான் அழிவுகளையும் உருவாக்கியது; அழிவுகளையும் சந்தித்தது.

## நாம் தமிழர்

சரித்திரம் படைத்து ...
சாதனை செய்து...
ஆண்ட பரம்பரையென
அகிலமும் அறைகூவி,
கனவில் வாழும்
கற்பனையாளர் நாம்!
*
சண்டையும் சச்சரவும்
தம்மை பாதிக்காதவரை,
சலுகையும் சனமானமும
தங்கிடாமல் தொடரும்வரை,
கைகட்டி அறந்தள்ளும்
சுயநலக்காரர் நாம்!
*
சேவையே வாழ்க்கையென
கைதுகளை தடுப்பதாகவும்...
கெடுதிகளைக் குறைப்பதாகவும்...
அறிக்கை விட்டு அலறும்
ஆந்தைத் தலைமைகளைக் கொண்ட
ஏமாளிகள் நாம்!
*
தகுந்த நேரத்தில்
தங்களின் தேவைகளை
தாங்களாகப் பெறுவதற்கு
தோள்களை தூக்கி நிற்காமல்,
தம்மால் முடியாதென
மற்றவரால் தரும்வரை
எதிர்பார்த்திருக்கும்
சோம்பேறிகள் நாம்.
*
ஆளுக்கொரு கட்சியாய்,
நபருக்கொரு அறிக்கையிட்டு,
தாமாக தலைமையாகி...
தம்மால் முடிவுமாகி
தமக்கென நியாயம் கொண்ட
பிரிவினைவாதிகள் நாம்!
*
எதைப்பெற்றாலும்
எவற்றில் பெற்றாலும்
காரியம் கைகூட,
நேர்மை கஞ்சமாகி
இலஞ்சம் மிச்சமாக
கப்பம் கொடுப்பவர் நாம்!
*
ஓடும்வரை ஓடி...
சொந்தம் விட்டு ஓடி...
புறநானூறு பொய்யாகி...
புற நாவால் பேசும்
அகதிகள் நாம்!
*
செந்தமிழர் நாம்...!
சொந்தமும் இங்கே
அகதிகளாக மாறாமல்
நாரத அரசியலை விட்டு
கற்பனையை செய்வினையாக்கி,
சுயநலத்தை
பொது நலமாக்கி,
பொதுமையில் ஒன்றாகும்வரை
தமிழர்கள் நாம்?

## நீ மேகம் நான் மழை

இந்தப் பூமியில்
வேறு பெண்ணா
இல்லை?
ஆனால் யாருமே
உன்னைப் போல்
இல்லையே!
-o-
நெஞ்சினில்
அன்பையும்
கண்களில்
கருணையினையும்
தேக்கி வைத்திருந்த நீ
ஏன் திசைமாறினாய்?
நேரான
உன் வார்த்தைகள்
ஏன் தடம் புரண்டன?
இந்தப்
புகையிரதத்தால்
போய்ச் சேர முடியுமா?
-o-
நீரினைச் சுமந்தால்
மேகம்
மழை பெய்ய
வேண்டும்!
நினைவுகளைச் சுமந்தால்
கண்ணீர் சிந்துவதுதான
நியாயமா?
-o-
என் இதயக் கோயிலுக்கு
உன் கடித வேதங்கள்
ஓதப்படுகின்றன...
என்றோ ஒரு நாள்
உன் அருள்
கிடைக்குமென்று!

மாரிமுத்து யோகராஜன்-
மட்/ஆசிரியர் கலாசாலை.

## பேனா நண்பர்கள்



பெயர்: கனி சபியு,
வயது: 18
முகவரி: 'கனி இல்லம்' புதுக்குடியிருப்பு, மன்னார்.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: பி. ரோஜினி,
வயது: 17
முகவரி: மத்திய மகா வித்தியாலய வீதி, தம்பிலுவில்-02.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(18.10.1998 தொடக்கம் 24.10.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| சிம்மம் | – | செவ்வாய், ராகு. |
| கன்னி | – | சூரியன், சுக்கிரன். |
| மீனம் | – | சனி. |
| துலாம் | – | புதன். |
| கும்பம் | – | குரு, கேது. |

சந்திரன்- கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. | 9 மணி |
| **திங்கள்**- வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- மனக்குறை நீங்கும், காரிய சித்தி. | காலை | 7 மணி |
| **புதன்**- துயர் நீங்கும், பண வரவு. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- வீண் விரயம், செய்தொழில் விருத்தி. | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- பயனுள்ள செயல், கௌரவம். | பகல் | 11 மணி |
| **சனி**- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | காலை | 8 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-8

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் மந்தம், காரியத் தடை. | காலை | 7 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, கடன் சுமை. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**-வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | மு.ப. | 10 மணி |
| **புதன்**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- வீண் மனஸ்தாபம், மனக்குழப்பம். | காலை | 8 மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, மறைமுக எதிர்ப்பு. | பகல் | 11 மணி |
| **சனி**- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை | 6 மணி |
| **திங்கள்**- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் பகை, மனவேதனை. | காலை | 6 மணி |
| **புதன்**- பணத்தட்டுப்பாடு, கௌரவக் குறைவு. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- உயர்ந்த நட்பு, பண வரவு. | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- செலவு மிகுதி, மனப்பயம். | மு.ப. | 9 மணி |
| **சனி**- வீண் விரயம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பொருள் விரயம், காரியத் தடை. | காலை | 8 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை | 8 மணி |
| **புதன்**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 11 மணி |
| **வியாழன்**- அந்நியர் நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை | 6 மணி |
| **சனி**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- செலவு மிகுதி, பணக் கஷ்டம். | காலை | 7 மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை | 8 மணி |
| **புதன்**-காரிய சித்தி, பொருள் இலாபம். | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- மனக் கலக்கம், பயனற்ற செயல். | காலை | 6 மணி |
| **வெள்ளி**- முயற்சி தடை, பொருள் விரயம். | பகல் | 12 மணி |
| **சனி**- பொருள் வரவு, செலவு மிகுதி | காலை | 8. மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- புதிய முயற்சி, செலவு மிகுதி. | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | காலை | 6 மணி |
| **செவ்வாய்**- கடன் பயம், வீண் மனஸ்தாபம். | பகல் | 12 மணி |
| **புதன்**- காரிய சித்தி, கௌரவம். | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | காலை | 8 மணி |
| **வெள்ளி**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. | 10 மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பொருள் வரவு, மனக் கலக்கம். | காலை | 8 மணி |
| **திங்கள்**- வீண் சந்தேகம், துயர் நீங்கும். | காலை | 7 மணி |
| **செவ்வாய்**- பயனற்ற செயல், மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| **புதன்**- பொருள் நட்டம், முயற்சித் தடை. | காலை | 8 மணி |
| **வியாழன்**- கௌரவக் குறைவு, அந்நியர் உதவி. | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, மனப் பயம். | மு.ப. | 9 மணி |
| **சனி**- இனசன விரோதம், பணச் செலவு. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- காரிய சித்தி, பொருள் வரவு. | காலை | 8 மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- வீண் முயற்சி, கௌரவக் குறைவு. | மு.ப. | 9 மணி |
| **வெள்ளி**- புதிய நட்பு, தொழில் மந்தம். | பகல் | 12 மணி |
| **சனி**- வெளியிடப் பயணம், உயர்ந்தநிலை. | காலை | 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், கௌரவம். | பகல் | 12 மணி |
| **திங்கள்**- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | காலை | 6 மணி |
| **செவ்வாய்**- உறவினர் உதவி, செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| **புதன்**- மனக் கலக்கம், வீண் துயரம். | காலை | 7 மணி |
| **வியாழன்**- பொருள் விரயம், கடன் பயம். | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- பெரியோர் பகை, மனக் கசப்பு. | காலை | 6 மணி |
| **சனி**- பயனற்ற செயல், உயர்ந்த எண்ணம். | காலை | 8 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, உறவினர் உதவி. | காலை | 8 மணி |
| **புதன்**- பயனற்ற செயல், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- பெரியோர் உதவி, தேகசுக நன்மை. | மு.ப. | 9 மணி |
| **வெள்ளி**- அந்நியர் பகை, செலவு மிகுதி. | காலை | 8 மணி |
| **சனி**- பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை | 6 மணி |
| **திங்கள்**- வீண்குறை கேட்டல், பகைமை. | காலை | 8 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, முயற்சி பலிதம் | காலை | 7 மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. | 9 மணி |
| **வெள்ளி**- மன மகிழ்ச்சி, பொருள் விரயம். | மு.ப. | 10 மணி |
| **சனி**- தொழில் கேடு, செலவு மிகுதி. | பி.ப. | 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் | 12 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், பணவரவுத் தடை. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- வீண் விரயம், மனக் கசப்பு. | காலை | 8 மணி |
| **புதன்**- அந்நியர் உதவி, பயனற்ற செயல். | காலை | 6 மணி |
| **வியாழன்**- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- இனசன விரோதம், மனப் பயம். | காலை | 7 மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, அந்நியர் உதவி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## டெலி:'.போனில் பேசும்போது...!

டெலிஃபோனை உபயோகப்படுத்தும்போது கவனிக்க வேண்டியவை:



- ஒருவருக்கு டெலிஃபோன் செய்யும்போது, இலக்கங்களைச் சுழற்றும் முன்பே அந்த இலக்கங்கள் சரியா என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.
- எதிர்முனையில் தொடர்பு கிடைத்ததும், விஷயத்தைப் பேசத் தொடங்குமுன்பு, அறிமுகம் செய்து விடுங்கள். அதன் மூலம் தேவையற்ற பேச்சுக்களைக் குறைக்கலாம்.
- நீங்கள் பிஸியான ஒருவருடன் தொடர்பு கொண்டால் தேவையான விஷயத்தை மட்டும் தெளிவாகக் கூறிவிட்டு, உடனே தொடர்பைத் துண்டித்து விடுங்கள்.
- டெலிஃபோனில் பேசிய பின்னர் ரிஸீவரை சரியாக வைத்துவிடுங்கள்.
- விரல்களால் தட்டும் 'பட்டன்' ஃபோன்கள் இப்போது எல்லாவீடுகளிலும் இருக்கின்றன. குழந்தைகள் இருப்பவர்கள், அவர்களின் கைக்கெட்டாத தூரத்தில் வைப்பது நல்லது. ஏனென்றால் குழந்தைகள் ரிஸீவரை எடுத்து பட்டன்களைத் தட்டினால் யாருக்காவது தொடர்பு கிடைத்துவிடும். இதனால் தேவையில்லாமல் பில் ஏறிவிடும்.
- ஃபோன் அருகில் முக்கியமான ஃபோன் நம்பர்கள் அடங்கிய டையரியை வைத்திருங்கள். அதிலும் மருத்துவமனை, தீயணைப்புப்படை ஃபோன் நம்பர்கள் முக்கியமாக இருக்க வேண்டும்.
- ஃபோன் அருகில் எப்போதும் பேனா, குறிப்புப் புத்தகம் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.
- சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் டெலிஃபோன் கட்டணம் ஏனைய நாட்களை விடக்குறைவு. எனவே அதிகமாகப் பேச வேண்டியவர்களுடன் அந்த நாட்களில் பேசுங்கள்.

## மனதை மாற்றும் நிறங்கள்

சாதாரணமாக நம்மில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வர்ணத்தை அதிகமாக விரும்புகிறோம். ஒவ்வொருவருக்கும் உகந்த வர்ணத்தைக் கொண்டு அவரவர்களுடைய குணாதிசயங்களைக் கூறுவோரும் உள்ர்.

நிறங்கள் நம் மன நிலையிலும் பலதரப்பட்ட பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. தகுந்த தருணத்தில் உகந்த வர்ணத்தைப் பார்த்தால்- விட்டமின்கள் உடலுக்கு ஊட்டமளிப்பதுபோல் நிறங்களும்- உள்ளத்துக்கும் உடலுக்கும் உதவி புரிகின்றன என்பதனை பண்டைக் காலத்திலேயே நம் முன்னோர் கண்டு வைத்துள்ளனர்.



மென்மையான வர்ணங்கள் மன இறுக்கத்தைத் தளர்த்தவும் உற்சாகத்தை அளிக்கவும் உதவுகின்றன. மென்மையான நீல நிறம் கவலையைப் போக்கிவிடும். உடல் உபாதைகளையும் மென்மையான நீலம் போக்கடிக்க வல்லது என்பதனால்தான் மருத்துவமனைகளில் உள்ள திரைச்சீலைகள் இள நீலத்தில் போடப்படுகின்றன. மங்களகரமான நிகழ்ச்சிகளில் மஞ்சள், ரோஸ்வர்ணம் போன்றவை மகிழ்ச்சியை ஊட்ட வல்லன. மனதைப் பிரகாசமாக்கவும் இவ் வர்ணங்களால் முடியும்.

கடும் கோபமும் எரிச்சலும் ஏற்படும் கட்டங்களில் சிவப்பு நிறப் பொருட்களைப் பார்க்காமல் விட்டுவிடுங்கள். மனச் சோர்வு ஏற்படும் காலங்களில் கறுப்பு, கருநீலம் போன்ற வர்ணங்களைப் பார்க்காதீர்கள்.

உங்கள் இல்லங்களிலுள்ள சுவர்களுக்கும் கடும் வர்ணங்களைப் பூசாதீர்கள். கதவு, யன்னல் போன்றவற்றுக்கும் கடும் வர்ணத் துணிகளைத் திரைச்சீலையாகப் பாவிக்காதீர்கள்.

வேண்டாத விருந்தாளிகள் உங்கள் வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்காமல், அவர்களை விரட்டியடிக்க வேண்டுமா? முன்புற வாயிலில் கடும் சிவப்புத்திரையைத் தொங்கவிடுங்கள். தெருவாயிலைத் தாண்டி உள்ளே காலடி எடுத்து வைக்கத் துணிய மாட்டார்கள்!

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்:-
**பி. கல்யாணி**
**28, கருணைபுரம், வாழைச்சேனை.**


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EO

பெயர்:............................
முகவரி:..................................
..........................................
தொழில்:...................................
கையொப்பம்:................................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24-10-1998**
அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 57



சாள்ஸ்சின் அந்தரங்க நண்பியாக மாறி விட்ட ரிகியின் வாய்த்துடுக்கு நீளமாகிவிட்டது.

'வில்லியம்ஸ்சும், ஹரியும் என் குழந்தைகள்' என்று பத்திரிகைகளுக்கு கூறுமளவுக்கு தனக்கும், சாள்ஸ்சுக்கும் இடையே உள்ள நெருக்கத்தை பகிரங்கப்படுத்திக்கொண்டார் ரிகி.

இந்த அறிவிப்பைக் கேட்டு டயானா கொதித்ததுபோலவே சாள்ஸின் இன்னொரு காதலியான கமீலாவும் கொதித்தார்.

ஒட்டகத்துக்கு இடம்கொடுத்த கதை போலாகிவிட்டது என்று கவலைப்பட்டார் கமீலா.

கட்டிலில் ரிகியின் வேகத்தைக் கண்டு சாள்ஸ் பயந்துபோயிருந்தார். அவரது தாழ்வு மனப்பான்மை அவரைத் தோல்வியடையச் செய்திருந்தது.

அந்த அனுபவத்தை ரிகி வெளியே சொன்னால் தனக்கு அவமானமாகிவிடும் என்றும் பயப்படத் தொடங்கிவிட்டார் சாள்ஸ்.

சாள்ஸ்சின் பலவீனங்களைத் தெரிந்து கொண்டு தன் ராஜாங்கத்தை நடத்திக் கொண்டிருந்தாள் ரிகி.

இக்காலகட்டத்தில் டயானாவும் ரிகியும் எதிர்பாராமல் சந்தித்துக் கொண்டனர்.

கிறிஸ்மஸ் விருந்து ஒன்றுக்காக டயானா சென்றபோது அங்கு ரிகியும் வந்திருந்தார்.

டயானாவைப் பார்த்து புன்னகைக்க முயற்சி செய்தார் ரிகி.

டயானாவுக்கு ரிகியைக் கண்டதுமே பற்றிக்கொண்டு வந்தது. தன் பிள்ளைகளை உரிமை கொண்டாடுபவள் இவள்தான் என்ற நினைப்பு எழுந்ததும் அவர் பொறுமை இழந்து விட்டார்.

பொது நிகழ்ச்சி என்பதையும் மறந்து டயானா ரிகியை நோக்கி படுவேகமாகச் சென்றார்.

டயானா தன்னை நோக்கி வரும் வேகத்தைப் பார்த்ததும் ரிகியின் முகம் மாறி விட்டது. எல்லோர் முன்பாகவும் தன்னை அவமானப்படுத்தப் போகிறார் என்று தெரிந்து விட்டது.

மகா கோபம். முத்தம் பாதியில் தடைப்பட்ட நிலையில் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார் சாள்ஸ்.

கமீலா ரிகியிடம்: "வரும்போது கதவைத் தட்டி அனுமதிபெற்று வருவதற்கு தெரியாதா? திறந்த வீட்டுக்குள் ஏதோ நுழைவது மாதிரி வந்து நிற்கிறாயே....?" என்று சீறினார்.

கமீலா பயன்படுத்திய வார்த்தைகள் துப்பாக்கியால் சுட்டதுமாதிரி இருந்தன. ரிகி சாள்ஸ்ஸை நோக்கினார்.

சாள்ஸ்சுக்கு இருவரில் யார் பக்கம் சாய்ந்தாலும் தன் வண்டவாளம் அம்பலமாகி விடுமே என்ற குறுகுறுப்பு. இருவர் பக்கமும் பார்க்காமல் தலை குனிந்து கொண்டு அமர்த்திருந்தார்.

**புவனி**

"நீ மட்டும் என்ன, திருட்டுத்தனமாகத் தானே நடந்துகொள்கிறாய்!" என்று கத்திவிட்டு அந்த அறையைவிட்டு வெளியேறினார் ரிகி.

கமீலா அழத்தொடங்க, சாள்ஸ் ஆதரவாக அணைக்க, கவலைதீர சாள்ஸ்சை இறுக அணைத்துக்கொண்டார் கமீலா. இருவரும் முத்தத்தில் புகலிடம் தேடி, மோகத்தில் மிதந்து கொண்டிருந்தனர்.

கமீலாவுடன் பிரச்சனை ஏற்பட்ட பின்னர் ரிகி சாள்ஸ் நெருக்கம் குறைந்தது.

இதனிடையே திரையரங்கு ஒன்றில் நடந்த சம்பவம் பொதுநல சேவையையே டயானா வெறுக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.

## காதலிகள் மோதல்

சாள்ஸ்சுக்கு ஃபோன் பண்ணி தன் ஆத்திரம் தீரும்வரை ரிகியைப் பற்றி வசைபாடித் தள்ளிவிட்டார்.

கமீலாவின் வசைகளை பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த சாள்ஸ், "நான் ரிகிக்கு அறிவுறுத்தல் கொடுக்கிறேன்!" என்று கூறினார்.

ஆனால் ரிகியிடம் கிடைத்த சந்தோசத்தை இழக்க வேண்டிவருமோ என்று நினைத்து அவரைக் கண்டிக்கவில்லை.

இறுக்கமான ஜீன்ஸ் சட்டையில் கவர்ச்சிகரமாக வலம்வருவார் ரிகி. சாள்ஸ்சுக்குப் பொறுக்க முடியாமல் போகும். தனிமையான சந்தர்ப்பம் கிடைக்கும் போது குறுகுறுக்கும் கைகளுக்கு சுதந்திரம் கொடுத்துவிடுவார்.

புது நட்பு என்பதால் ரிகியை இழக்கமுடியாதளவு அவள்பால் ஈர்க்கப்பட்டிருந்தார்.

கமீலாவையும் இழக்க அவர் தயாராக இல்லை. ரிகியும் எல்லா விஷயத்திலும் வேகமான பெண் என்பதை சாள்ஸ் அனுபவபூர்வமாக அறிந்திருந்தார்.

கமீலா, நிதானமாக-பக்குவமாக தன்னை கையாள்வது சாள்ஸ்சுக்கு வித்தியாசமான அனுபவம். அத்தகைய அணுகுமுறைதான் சாள்ஸ்சுக்குப் பிடித்திருந்தது.



இடைக்கிடையே ரிகி போன்ற இளமையான, வேகமான புயல்களும் தன்மேல் வீசுவது மாறுபட்ட அனுபவமாக இருந்தது.

சாள்ஸ்சிடம் இருந்த தாழ்வுமனப்பான்மை காரணமாக, ரிகி போன்ற பெண்கள் நம்பத் தகுந்தவர்கள் அல்ல-எப்போது வேண்டுமானாலும் தன்னை நிராகரிக்கக்கூடும் என்ற அபிப்பிராயம் இருந்தது.

அதனால் ரிகிக்காக கமீலாவை இழக்கும் எண்ணம் எதுவும் சாள்ஸ்சுக்கு எழவில்லை.

ரிகியை நெருங்கிய டயானா சாள்ஸ்சுக்கும் அவருக்கும் இடையேயுள்ள தொடர்பைப் பற்றி தனக்கு அக்கறை இல்லையென்றும், தன் பிள்ளைகளை உரிமை கோரினால் "சும்மா விடமாட்டேன்!" என்று எச்சரித்தார்.

தன் ஆட்காட்டிவிரலை உயர்த்தி ரிகியின் முகம் எதிரே நீட்டியபடிதான் டயானா பேசினார்.

ரிகி வாயடைத்து நின்றார். டயானா உரத்துப் பேசியதால் அங்கு வந்திருந்த அனைவரது பார்வையும் இருவர்மீதும் திரும்பியிருந்தன.

### வழக்குத் தொடுப்பேன்

ரிகியை எச்சரித்துவிட்டு டயானா புறப்பட்டுச்சென்றுவிட்டார். அவமானத்தால் குறுகி நின்றார் ரிகி.

சாள்ஸ்சிடம் அழுதபடியே முறையிட்ட ரிகி, தன் சட்டத்தரணி மூலம் டயானாவுக்கு நோட்டிஸ் அனுப்பினார்.

டயானா பொது நிகழ்ச்சி ஒன்றில்வைத்து தன்னை அவமானப்படுத்திவிட்டார் என்றும், அதற்காக மன்னிப்புக் கேட்காவிட்டால் டயானா மீது மானநஷ்ட வழக்கு தொடரப் போவதாகவும் ரிகி கூறியிருந்தார்.

ரிகியும் டயானாவும் மோதிக்கொண்ட விடயத்தில் சாள்ஸ் ரிகியை தூண்டிவிட்டார். 'விடாதே, திமிரை அடக்கு' என்று தட்டிக் கொடுத்தார்.

அதே சாள்ஸ் சங்கடப்பட வேண்டிய நிகழ்ச்சி ஒன்றும் நடந்தது.

சாள்ஸ்சை சந்திக்க வந்திருந்தார் கமீலா. இருவரும் தனிமையில் இருந்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

அந்த அறைக்குள் திடீரென்று பிரவேசித்தார் ரிகி. சாள்ஸ்மீது தனக்கிருந்த உரிமை காரணமாக கதவைத் தட்டாமலேயே உள்ளே நுழைந்துவிட்டார்.

அப்போதுதான் சாள்ஸ்சும், கமீலாவும் மென்மையாக முத்தமிட்டுக்கொண்டு தங்கள் கைவிரல்களை கோர்த்துக்கொண்டு ,தனிமை தந்த சுதந்திரத்தை அனுபவிக்கத் தொடங்கி இருந்தனர்.

ரிகியைக் கண்டதும் கமீலாவுக்கு உலக



தனது புதல்வர்கள் இருவருடனும் திரையரங்கு ஒன்றுக்கு சென்றிருந்தார் டயானா.

அதனைக் கண்டுவிட்டார் ஒரு புகைப்படப் பிடிப்பாளர். அந்தப் புகைப்படப்பிடிப்பாளருக்கு டயானாவை படம்பிடிக்க மட்டுமல்லாமல், டயானாவை தொட்டுப் பார்க்கவும் ஆசை.

அதனால் படம் முடிந்து டயானா வெளியே வரும்வரை காத்திருந்தார்.

**(அடுத்த வாரமும் வரும்)**

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## திகன வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்
**த.வினோதா,**
**9/5, மகாபேரியதென்ன, திகன.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


**தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்** இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு – அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 23

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com





வயிற்றுக்குச் சோறிட வேண்டும்!
- இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்!
பயிற்றிப் பல கல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# சிலந்தியும் குதிரையும்

அந்த நாட்டு மன்னனின் குதிரை லாயத்தில் பல குதிரைகள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் பாய்ந்து ஓடக் கூடியவை. அவை போர்க்காலத்தில் செயலாற்றவும் இரதங்களை இழுத்துச் செல்லவும் பயிற்றப்பட்டிருந்தன.

இந்தக் குதிரைகளுக்குத் தினமும் பயிற்சி அளிக்கப்படும், பயிற்சியின்போது ஒழுங்காக நடந்து கொள்ளாத குதிரைகளுக்கு அடி உண்டு. அன்று அவைக்கு உணவும் குறைக்கப்படும்.

இவற்றையெல்லாம் நாள்தோறும், அந்த லாயத்தில் வசித்து வந்த சிலந்தி ஒன்று கவனித்து வந்தது.

ஒருநாள் மன்னரின் இரதத்தை இழுத்துச் செல்லும் குதிரைகளில் ஒன்று, பயிற்சியாளனுக்கு அடங்காமல் முரண்டு பிடித்தது. பயிற்சியாளன் அன்று அதற்கு அடி போட்டு, அன்றைய உணவைக் குறைத்துவிட்டான்.

இதனால் கோபமடைந்த அக் குதிரை ஏனைய குதிரைகளிடம்,

"இந்தப் பயிற்சியாளனின் அடக்குமுறை எனக்குப் பிடிக்கவில்லை. நாம் மன்னனின் குதிரைகள். அவன் எப்படி என்னை அடிக்கலாம். அவனை மோதிக் கொன்று விடலாம்!" என்று சொன்னது.

ஆனால் மற்றக் குதிரைகளோ, "இது சரியானதல்ல. நமது மன்னனுக்கு உதவுவது நம் கடமை. நீ சரியாக நடந்திருந்தால் அவன் ஏன் உனக்கு அடிக்கப் போகிறான்? இந்த எண்ணத்தை இப்போதே மறந்து விடு!" என்று கூறின.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சிலந்தி சந்தோஷம் கொண்டது. முன்பு ஒருநாள் தன் வலையைச் சிதைத்த பயிற்சியாளனை இந்தக் குதிரையைக் கொண்டே பழிவாங்க நினைத்தது.


கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் குதிரையுடன் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டது. பின் அந்தப் பயிற்சியாளனைத் தாக்குமாறு, குதிரைக்குச் சொல்லி வந்தது சிலந்தி.

சிலந்தியுடன் நட்புக் கொண்ட பின் குதிரையின் குணம் மாறியது. மூர்க்கத்தனம் கூடி விட்டது.

ஒருநாள் சிலந்தியின் ஆலோசனைப்படி பயிற்சியாளனைத் தாக்கியது குதிரை. இதனால் பயிற்சியாளனின் கால் முறிந்தது.

இந்தச் செய்தி மன்னனின் காதில் விழவே, அவன் பணியாட்களைக் கூப்பிட்டு அவர்களிடம்:

"பயிற்சியாளர்களுக்கு அடங்காத குதிரை தக்க தருணத்தில் எம் காலை வாரி விடும். எனவே அந்தக் குதிரையின் முக்கியத்துவத்தைக் குறைத்து அதைச் சாதாரண குதிரைகளோடு சேர்த்துவிடுங்கள்!" என்று கட்டளையிட்டான்.



கெட்ட காரியத்திற்கு உடன் போனதால் தன் அந்தஸ்தை இழந்து நின்றது அந்தக் குதிரை ■

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ருபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.10.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 267**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 265

**பரிசுக்குரியவர்:**
**எஸ். அருண் பிரியந்தன்,**
**றோயல் கல்லூரி, கொழும்பு-7.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வன் என். முஹமட் ஸியாத்,<br>அப்துல் மஜித் வித்தியாலயம், சின்னக் கிண்ணியா. | எஸ். செல்வகுமார்,<br>சென் ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். |
| சி. பாரத்,<br>தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. | ஏ.எல். அகமட் றஸ்மி,<br>ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| சி. பீற்றர் ரெக்சன்,<br>முஸ்லிம் வித்தியாலயம், வவுனியா. | சி. பாரதன்,<br>இறம்பை குளம் மகளிர் மகா. வித்தியாலயம், வவுனியா. |
| வி. துஷ்யந்தன்,<br>பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு. | நிஹ்லா பாயிஸ்,<br>நிககொள்ள மின்னார் ம.வி., யடவத்தை. |
| எம்.ஏ.எம். அன்பஸ்,<br>சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | தியாகமூர்த்தி மோகன் பிரசாந்,<br>டிரேட்டன் த.வி., கொட்டகலை. |

## அதிசயம் - ஆனால் உண்மை!



**சென்ட் பவுல் ஆலயம்:**
➔ சீனாவில் உள்ள இத்தேவாலயத்தில் உண்மையில் இதன் முன் படிக்கட்டுக்களும், முகப்பும் மட்டுமே உள்ளன. மற்றப் பகுதிகள் 131 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தீயால் அழிந்துவிட்டன. ■



**மனித மரம்:**
← இத்தாலி நாட்டில் உள்ள கார்டா ஏரி அருகே இருக்கும் மரம் ஒன்றின் அடிப்பகுதி மனிதமுகம் போன்று காட்சியளிக்கிறது. ■

**கெக்கோ:**



↑ பல்லி இனத்தைச் சேர்ந்த இதன் பெயர் கெக்கோ. இது 'கெக்கோ', 'கெக்கோ' என்று சத்தமிடுவதால்தான் இப்பெயர் வந்ததாம். ■



**ஆங்க்லர் மீன்:**
← ஆழ்கடலில் உள்ள இந்த ஆங்க்லர் பெண் மீனுடன் 3 சிறிய ஆண்மீன்கள் தொங்கியபடி செல்லும். ■

## வாரம் ஒரு நாடு

### குரோஷியா



தலைநகர்- ஸாக்ரெப்
பரப்பு- 56,538 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 45 இலட்சம்.
மொழி- செர்போ, குரோஷியன்.
எழுத்தறிவு- 90%
சமயம்- கிறிஸ்தவம்.
நாணயம்- குனா.
தனி நபர் வருமானம்- 5600 டொலர்.

**அமைவிடம்:**

இதன் வடக்கில் ஸ்லோவேனியா மற்றும் ஹங்கேரியும்; கிழக்கில் செர்பியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

முன்னாள் யூகோஸ்லாவியாவின் இரண்டாவது பெரிய குடியரசு. 1991 ஜூன் 25ல் குரோஷியா தன்னைச் சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டது. 7 மாதங்கள் தனிமைப்படுத்தப்பட்ட செர்பியர்களுடன் உள் நாட்டுச் சண்டை. 1992ல் ஐ.நா. அமைதிப்படை வருகை. செர்பியருக்கும் குரோஷியருக்குமிடையே போர் தொடர்ந்தது. செர்பியர் நிறைந்த கிராஜினா தனிக்குடியரசாக இயங்கும் ஒப்பந்தம் 1994 மார்ச் மாதம் கைச்சாத்திடப்பட்டது.

**பொருளாதாரம்:**

கோதுமை, உருளைக்கிழங்கு முக்கிய உற்பத்திப் பொருட்கள். நிலக்கரி, சிமெந்து தொழிற்சாலைகள் அதிகம் உள்ளன ●

## சைபீரியரின் பழக்கம்






வடக்கு சைபீரிய மக்கள் பாலைத் தட்டையான பலகைகளில் தான் எடுத்துச் செல்வார்கள். ஏனெனில் சைபீரியா கடுங்குளிர்ப் பிரதேசம் என்பதால், பால் கறந்தவுடன் உறை நிலைக்கு மாறி விடுகிறது.

○❖

மானின் பால், மீன் இவையே சைபீரிய மக்களின் முக்கிய உணவு.



இவை தவிர உணவுக்காக அவர்கள் கடற் சிங்கங்களையும் வேட்டையாடுகிறார்கள்.

○❖

சைபீரிய நனாய் என்ற பழங்குடி இனச் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லும் போது ஸ்கீஸ் என்னும் நாய் வண்டிகளிலேயே பயணம் செய்கிறார்கள். ■

## ஏன் தெரியுமா?



மனிதனின் கண்கள் சிவப்பு விளக்கைவிட மஞ்சள் விளக்கின் ஒளியை எளிதில் உணரும் ஆற்றல் பெற்றவை. ஆனாலும் அபாய அறிவிப்புக்களில் சிவப்பு விளக்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. இது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா?

சிவப்பு விளக்கின் ஒளி ஒருபோதும் சிதறல் அடைவதில்லை. ஏனென்றால் அதன் அலை நீளம் மிக அதிகம். எனவே எவ்வளவு தொலைவில் சிவப்பு விளக்கு இருந்தாலும் அதன் ஒளி சிதறல் அடையாது. அத்துடன் குளிர், மூடுபனியில் கூட சிவப்பு விளக்கின் ஒளியை எளிதில் புரிந்து கொள்ள முடியும். பார்ப்பவர்களின் கண்களை சிவப்பு விளக்கின் ஒளி உடனடியாக வந்தடையும். எனவேதான் அபாய அறிவிப்புகளில் சிவப்பு விளக்கு பயன்படுத்தப்படுகிறது. ■

## சிறு வயதில்.....



தோமஸ் அல்வா எடிசன் பாடசாலையில் மூன்றே மூன்று மாதங்கள்தான் படித்தார். எடிசனின் ஆசிரியர், "இவனுக்கு தலையில் மூளை இல்லை. களிமண் தான் இருக்கிறது. இவன் ஒரு காலத்திலும் பாடத்தைக் கற்றுக்கொள்ள மாட்டான்." என்று சொன்னார்.

ஆனால் ஆசிரியரின் மதிப்பீடு பொய்யாகிப் போனது. தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழ், கிராமஃபோன், சினிமா என ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாதனங்களைக் கண்டுபிடித்தார்.



❊ ❊

அல்பேர்ட் ஐன்ஸ்டீனின் ஆசிரியர் அவரைப் பற்றிக் கூறியது இப்படி: "இவன் கணித பாடத்தில் எந்தக் காலத்திலும் தேறமாட்டான்."

ஆனால், '20ம் நூற்றாண்டின் தலைசிறந்த கணிதமேதைகளில் ஒருவர்' எனக் கருதப்படுகிறார் ஐன்ஸ்டீன். ■

## உடல் வெப்பநிலை

• **மனித உடலின் நிரந்தரமான வெப்ப நிலையைக் கண்டுபிடித்தவர் யார்?**

றொபேர் பாயில் என்ற ஆங்கில இயற்பியல் அறிஞர்.

• **மனித உடலின் சராசரி வெப்ப நிலை என்ன?**

98.6°F (37°C). அதற்குமேல் வெப்ப நிலை அதிகரித்தால் காய்ச்சலின் அளவாகக் கணிக்கப்படுகிறது.

• **வெப்பமானி கொண்டு நோயாளியின் உடலைப் பரிசோதிக்கும் முறையை முதலில் அறிமுகம் செய்தவர் யார்?**

ஜெர்மனியைச் சேர்ந்த கார்ல் அகஸ் ஒண்டர்லிச் என்பவர் 1858ம் ஆண்டு அறிமுகம் செய்தார்.



• **கிளினிக்கல் வெப்பமானியைக் கண்டு பிடித்தவர் யார்?**

இங்கிலாந்தைச் சேர்ந்த டாக்டர் தோமஸ் கிளிப்பேட் அல்பேட் என்பவர் கண்டு பிடித்தார்.

• **வெப்பமானியின் குழாயினுள் இருக்கும் பாதரசம் ஏன் குறுகிக் காணப்படுகிறது?**

இவ்வாறு இல்லையென்றால் நோயாளியின் உடலை விட்டு வெப்பமானியை எடுத்தவுடன் அதனுள் இருக்கும் பாதரசம் உடனடியாகக் கீழே இறங்கிவிடும். அப்படி இறங்கி விட்டால் காய்ச்சலின் அளவைக் கண்டுபிடிக்க முடியாது. அதனால்தான் இப்படிக் காணப்படுகிறது.

## மண் வாசனை

மழை பெய்து சற்று ஓய்ந்த பின் மண்ணிலிருந்து ஒரு வாசனை தோன்றும். இது மண்ணுக்கே உரிய மணமாகும்.

மழை காரணமாக மண்ணில் உள்ள நுண்கிருமிகள், சுரக்கும் ஒருவிதப் பொருளில் இருந்துதான் இந்தவாசனை வருகிறது. ■

www.padippakam.com

இரண்டாம் பாகம்

அங்கம் 08

# மேற்கே ஒரு குற்றம்







எழுத்துலக வேந்தன் சுஜாதா

"வசந்த்!" என்றான்.

"என்ன பாஸ்?"

"ஐ காட் இட்! ஐ காட் இட்!"

"என்ன பாஸ்?"

"அந்த வளையல்களின் அர்த்தம்!"

"என்ன சொல்றீங்க?"

"வசந்த்! மேலே கேக்காதே. நான் சொல்றதைச் செய்! அந்தப் பொண்ணு லாவண்யா இருக்கா பாரு!"

"இருக்காளே! இடது பக்கத்திலே இருந்து மூணாவது."

"அவளை இன்னி ராத்திரி நம்மோட வரச் செய்ய முடியுமா?"

"ரூமுக்கா?"

"ஆமாம்."

வசந்த் கணேஷை சந்தேகத்துடன் பார்த்தான்!

"வித்தியாசமா ஒண்ணும் இல்லை. அவளை டின்னருக்குக் கூப்பிடு. டின்னர் சாப்பிடலாம். எப்படியாவது அவளை நம் ரூமுக்கு அழைச்சுக்கிட்டுப் போயிடலாம்!"

"அப்புறம்?"

"அப்புறம் பாரேன். எனக்கு ஒரு சந்தேகம் உதிச்சிருக்கு! அது தீரணும். ஒத்திகை முடியற வரைக்கும் காத்திருக்கலாம். அப்புறம் உன் சாமர்த்தியத்தைக் காட்டணும். என்ன?"

"டன் பாஸ். எதுக்குன்னு சொல்லிட்டிங்கன்னா?"

"சொல்றேன்; சமயம் வரும்போது சொல்றேன்."

ஒத்திகை முடிய, அந்த ஜெர்மன் பெண்கள் ரேணுகாவிடம் சென்றார்கள். மற்ற பெண்கள் விடுபட்ட சந்தோஷத்துடன் விலகினார்கள்.

"வசந்த்!"

வசந்த் மெல்ல லாவண்யாவை அணுகினான்.

"ஹாய் லாவண்யா."

"ஹாய்" என்றாள்.

"கிரேட்!"

"என்ன?"

"உன் டான்ஸ்."

"தாங்ஸ்."

"ம்யூனிக்கெல்லாம் பார்த்தீங்களா?"

"எங்கே? வந்ததிலிருந்து ஒத்திகை தான்! நாளைக்கு ஷோ முடிஞ்சப்புறம் தான் சுத்திப்பார்க்க கிளம்பலாம்னு ரேணுகா சொல்லியிருக்காங்க!"

"இப்ப என்ன?"

"ரூமுக்குப் போறோம். குட்பை!"

"என்ன அவ்வளவு சீக்கிரத்தில் குட்பை சொல்லிட்டிங்க? உங்களுக்காக டிக்கெட் வாங்கி வெச்சிருக்கேன்!"

"டிக்கெட்டா?"

"ஆமாம். புதுசா ஒரு ஹாலிவுட் படத்துக்கு!" இருபது நிமிஷங்களில் வசந்த் அந்தப் பெண்ணைக் கடத்திக் கொண்டு வந்து விட்டான். மூவரும் ஒரு ரெஸ்டாரண்டிற்குச் சென்றார்கள். வெறும் காப்பி ஆர்டர் தந்தார்கள். கணேஷ் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். நாட்டிய உடையிலிருந்து மாறி எளிதான ஸாரி அணிந்திருந்தாள். அதன் மேல் ஸ்வெட்டர் போட்டிருந்தது அவள் கச்சிதமான பரிமாணங்களை நிச்சயமாகக் காட்டியது.

கணேஷ், "உங்க டான்ஸ் நல்லா இருக்கு!" என்றான். வசந்த் அவனை முறைத்தான். "வசந்த், உன் கையைக் காட்டு" என்றான்.

அவன் கையைப் பிடுங்கி இழுத்துக் கொண்டு ரேகை பார்த்தான். "இருதய ரேகை குருமேட்டில் ஆரம்பிக்கிறது! புதனை நோக்கிப் போறது! எல்லாத்திலேயும் உனக்கு வெற்றிடா!" என்றாள்.

லாவண்யா, "என் கையைப் பாருங்க" என்றாள்.

"நீட்டுங்க."

அவளது கையைப்பற்றி ஆராய்ந்தான். "இருதய ரேகையில் ஒரு தீவு இருக்குது! பாருங்க!"

"என்ன அர்த்தம்?" என்றாள் ஆவலுடன்.

"ம்! கொஞ்சம் இமோஷனல் நீங்க! சூரிய மேட்டிலிருந்து ஒரு ரேகை நேரா இருதயத்தைத் தொடுது!"

"என்ன அர்த்தம்?"

"இருபத்தஞ்சு வயதுக்கப்புறம் அதிர்ஷ்டம்?"

"இன்னும் ஏழு வருஷம் காத்திருக்கணுமோ?" என்று சிரித்தாள்.

"உங்க கை ஒரு நளினமான கை!"

"தாங்க்ஸ்."

"தொட்டாலே ஸாஃப்ட்டா இருக்கு!"

வசந்த் அவனை முறைப்பதைத் தவிர்த்தான்.

"மிஸ் லாவண்யா, ஒரே ஒரு வேண்டுகோள்."

"என்ன?"

"உங்க நளினமான கையின் ஞாபகமா எனக்கு ஒரே ஒரு பரிசு!"

"என்ன?" என்று வியப்புடன் கேட்டாள்.

"ஒரே ஒரு வளையல்! இதை நான் பத்திரமா பொக்கிஷமா வெச்சிருப்பேன்!"

"இவ்வளவுதானே! வெறும் பிளாஸ்டிக் வளையல்! ஒண்ணு போதுமா?" என்று கழற்றிக் கொடுத்தாள்.

"உங்க ஞாபகத்துக்கு; உங்க கைகளும் அது செய்யற அபிநயமும் ஞாபகம் இருக்கிறதுக்கு!"

"ரெண்டு பேரும் ரொம்ப ரெமாண்டிக்" என்றாள்.

கணேஷ் அந்த வளையலைப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

லாவண்யா, "எக்ஸ்க்யூஸ் மீ, எனக்கு பாத்ரூம் போகணும்" என்றாள்.

"அந்த வெய்ட்டரைக் கேளுங்க."

அவள் சென்றதும் வசந்த், "என்ன அது வளையல்?" என்றான்.

கணேஷ் வளையலை தன் பைக்குள் இருந்து எடுத்து மேஜைமேல் வைத்தான்! சற்றுப் பட்டையான வளையல்.

கணேஷ் அதைத் துண்டுகளாக உடைத்தான். வளையலின் உள் பகுதி ஓட்டையாக இருந்தது. உதிர்த்தான். அதிலிருந்து வெள்ளையாகப் பொடி உதிர்ந்தது!

"சரக்கு; இதுதான் அவுங்க கேக்கற சரக்கு!" அதைத் தொட்டு நாக்கில் வைத்துப் பார்த்தான். சுரீல் என்று துவர்த்தது.

"மை காட்! எப்படிக் கண்டுபுடிச்சிங்க!"

"அந்தப் பெண் தீபா வட்ட வட்டமா வரைஞ்சாளே, என்னன்னு மண்டையப் போட்டு உடைச்சுக்கிட்டமே! திடீர்னு இன்னிக்கு ஒத்திகையில 'கைவளை குலுங்க'ன்னு பாடற போது ஃப்ளாஷ் ஆச்சு! வளையல்டா! வளையல்! அந்தப் பெண்கள் போட்டுண்டிருக்கிற ஒவ்வொரு வளையலுக்குள்ளேயும் மறைச்சு வெச்சிருக்காங்க! சரக்கு! லட்சக் கணக்கில விலை போற போதை சரக்கு!"

"கிரேட் பாஸ்! கை கொடுங்க!"

"என்ன செய்யலாம்?"

"உடனே ஸ்டைன் ஹாஃபுக்கு தகவல்!"

லாவண்யா திரும்பிவர அந்த உடைந்த வளையலை அப்படியே பைக்குள் திணித்துக் கொண்டான்!

"இப்ப எங்கே போகலாம்? ஒன்பதரைக்குள்ள வந்தறணும்னு ஸ்ட்ரிக்டா ரேணுகா சொல்லியிருக்காங்க!"

"சினிமா பார்க்கலாமா!"

"வசந்த், நீ சினிமாவுக்குப் போய்ட்டு வா! நான் ஹோட்டலுக்குப் போறேன்."

"நீங்க வரலையா?" என்றாள் லாவண்யா.

"எனக்கு வேலை இருக்கு! நீங்க போயிட்டு வாங்க."

"நீங்க வரலைன்னா நான் வரலை" என்றாள் லாவண்யா.

"என் ஜாதகம் அப்படி" என்றான் வசந்த்.

"மிஸ்டர் கணேஷ்" என்று ஒருவன் கணேஷை அணுகினான்.

"எஸ்!"

"உங்களுக்கு டெலிபோன் வந்திருக்கிறது...."

கணேஷ் யோசித்தான். யாராயிருக்கும்? "ஸ்டைன் ஹாஃபாகத்தான் இருக்கும். அவுங்கதான் நான் போற இடம் எல்லாம் பின்னால வந்துக்கிட்டிருக்காங்க. கொஞ்சம் இருங்க."

கணேஷ் அவன் பின் சென்றான்.

"திஸ் வே ப்ளீஸ்" என்றான். ஒரு கதவைத்திறந்தான். "டெலிபோன் அந்த அறையில் இருக்கிறது." என்ன இது சந்து!

அந்த மூலை திரும்பியதும் தன்னை என்ன தாக்கியது என்று கணேஷுக்குத் தெரியவில்லை. மண்டைமேல் சரியான அடி பட்டான். உள்ளே நட்சத்திரங்கள் வெடிக்க சடுதியில் நினைவிழந்தான்.

ஏதோ ஒரு வளையல் கடையிலே லாவண்யா கலர்கலராக வளையல்களை அணிந்து கொண்டு கணேஷிடம் காட்டிக் கொண்டிருக்க, மீசை வைத்த வெள்ளைக்காரக் கடைக்காரன் ஒரு காப்பிக் கோப்பையில் தண்ணீர் கொண்டு வந்து அவன் முகத்தில் அடிக்கிறான்.

கணேஷ் விழித்துக் கொண்டான். அந்த அறையில் மெல்லிய இருட்டு; பழகுவதற்கு நேரம் பிடித்தது. மிகத் தாழ்ந்த மேசை விளக்கு.

"எழுந்திரு, விழித்துக்கொள் கணேஷ்!"

மண்டைக்குள் வலித்தது. தொட்டுக் கொண்டான். கண்களைக் குறுக்கிக் கொண்டு பார்த்தான். மூன்று நான்கு முகங்கள் தெரிந்தன.

"என்ன நான் நான்..."

"கணேஷ்! இந்தப் பெட்டி ஞாபகம் இருக்கிறதா!" என்றான் ஒருவன். அவனை சிரமத்துடன் நிமிர்ந்து பார்க்க அவன் மிக உன்னதமான ஸூட் அணிந்து சுத்தமாக அடர்ந்த புருவங்களுடன் நிற்பது தெரிந்தது.

"யார் நீ?"

"நெவர் மைண்ட். இந்தப் பெட்டியைப் பார். இது ஞாபகம் இருக்கிறதா?"

"இருக்கிறது!" அவன் ஒலிம்பிக் சென்ட்ரமில் கோட்டை விட்ட பெட்டி.

"இதில் என்ன வைத்திருந்தாய்?" அதட்டும் குரல்.

"காகிதங்கள் காலி டப்பாக்கள்" என்றான் சிரமத்துடன்.

"அதுதான் உன் சரக்கா? எங்களை ஏமாற்றினால் என்ன ஆகும் தெரியுமா?"

"நீங்கள்.... மட்டும்... என்னை ஏமாற்றலாமா?... பணம் கொடுக்காமல்.... இலவசமாக என்னிடமிருந்து அதைப் பறிக்க முற்படலாமா? அதனால்...."

"அதனால்?"

"முன்னெச்சரிக்கையாக சரக்கை என் நண்பனிடம் கொடுத்து வைத்திருந்தேன்!"

"இப்போது அது எங்கே இருக்கிறது?"

"அதை நான் ஏன் சொல்ல வேண்டும்?"

"அடிடா!"

சற்றும் எதிர்பாராத விதமாக தேனீ கொட்டுவது போல் அந்த அறை விழுந்தது. கணேஷ் பற்களுக்குள் ரத்தப்புளிப்பை உடனே உணர்ந்தான். அடிக்கிறார்கள்! வசத் இந்தச் சமயம் என்ன செய்து கொண்டிருப்பான்? ஏன், என்னடா போனவன் திரும்பவில்லையே என்று சந்தேகிக்க ஆரம்பித்திருப்பானா அல்லது அந்த லாவண்யாவுடன்.

"என்னை அடிப்பதில் என்ன லாபம்? நான் மறுபடி மயங்கப்போகிறேன்!" என்றான்.

"இவனிடம் எதுவும் இல்லை. அவர்கள் அனுப்பவே இல்லை! அல்லது இவன் மூலம் அனுப்பவில்லை. இவன் ஏதோ உளவு ஆசாமி; பொலிஸ் ஆசாமி என நினைக்கிறேன். இங்கேயே தீர்த்து விடலாம்!" என்றான் அவர்களில் ஒருவன். இத்தாலியன் போலும். சுத்தமாக உடையணிந்த ஆசாமி. ஜெர்மன் மொழியில் பேசினான். அவன் அருகில் இருந்தவர்கள் கணேஷை நோக்கி வந்தார்கள்.

"வெய்ட் எ மினிட். என்ன செய்யப் போகிறீர்கள்? என்ன என்ன?"

"நீ பொலிஸ் ஆசாமி. நீ எங்களிடம் விளையாடுகிறாய். உன்னிடம் மியூசியத்தில் தொடர்பு கொண்ட ஆள் ஒருவன் பொலிசிடம் அகப்பட்டிருக்கிறான். அவன் பொலிசிடம் ஏதும் சொல்வதற்குள் அவனைத் தீர்த்துவிட்டோம். அது வேறு விஷயம்! நீ பொலிஸ் கட்சி என்பது ஸ்தாபிதமாகிவிட்டது. நீ அபாயகரமானவன். கமான் ரிக்கோ!"

ரிக்கோ தன் கோட் பைக்குள்ளிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்தான். சின்ன பெரெட்டர்!

"இருங்கள். இருங்கள். நான் பொலிஸ் ஆள் இல்லை. நான் தனியானவன்! நான் தனி! என்னைப் பொலிஸ் தொடர்ந்தார்கள். அதுதான் உண்மை."

ரிக்கோவின் துப்பாக்கி கணேஷின் நெற்றிப் பொட்டில் தொட்டது! மற்ற இருவர் அவன் கைகளை அழுத்திப் பிடிக்க துப்பாக்கியின் குதிரையில் விரலைப் பதித்தான்.

"சுடு" என்றான்.

(தொடர்ந்து வரும்)

# சதாம் உசேன்

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை



ராஜையா

## 11

அரேபியர்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் அலையலையாய் கிளம்பி வந்து பாலஸ்தீனத்தில் குடியேறத் தொடங்கினார்கள் யூதர்கள். பாலஸ்தீனத்தை அப்போது அடிமைப்படுத்தி வைத்திருந்த இங்கிலாந்தும் அரேபியர்களின் கதறலை காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன் அரபுப் பகுதியான பாலஸ்தீனத்தை இங்கிலாந்து துண்டாடியது. யூத மதத்தினருக்கென்று 'இஸ்ரேல்' என்ற தனி நாட்டை உருவாக்கிக் கொடுத்தது.

இருக்க இடம் கொடுத்தால் 'கிடைக்கு' இரண்டு ஆடு கேட்கும் ஓநாய் போல, பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியை தனி நாடாகப் பெற்ற இஸ்ரேல் உடனே தன் படைபலத்தாலும், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் பக்க பலத்தாலும் மொத்த பாலஸ்தீனத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டது. பாலஸ்தீனியர்கள் சொந்த நாட்டில் அடிமைகளாக்கப்பட்டார்கள். சொந்த நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு, நாடற்ற அகதிகளாகவும் ஆனார்கள்.

"அரேபியருக்கெதிரான ஏகாதிபத்திய-ஜியோனிச சதி இது" என்று கொந்தளித்த பிற அரபு நாடுகள், பாலஸ்தீனத்தை மீட்பதற்காக இஸ்ரேல் மீது போர் தொடுத்தன.

இப்போரில் அரபுப் படைகளை இங்கிலாந்தின் துணையுடன் இஸ்ரேல் தோற்கடித்தது. தோல்வியால் துவண்ட அரேபியர்கள் அவமானத்தில் தலைகுனிந்தார்கள். இந்த அவமானத்தைத் துடைத்தெறிந்து தோள் தட்டக்கூடிய ஒரு வீரத்தளபதி கூட அரபு இனத்தில் இல்லையா? என்று கேட்டு அவர்கள் குமுறிக் கொண்டிருக்கையில், அந்த கேள்விக்கு விடையாய் எகிப்தில் வெளிச்சத்துக்கு வந்தார் இராணுவத் தளபதி நாசர்.

அவர் இராணுவப் புரட்சி மூலம் எகிப்து மன்னராட்சியைத் தூக்கி நைல் நதியில் வீசிவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றினார். "அரேபியர் யாவரும் ஓரினம் அவர்கள் வசிக்கும் பகுதிகளெல்லாம் ஒரே தேசம்" என்று அராபிசத்துக்காக அவர் குரல் கொடுத்தபோது, சதாமும் மற்ற அரேபியர்களும் விழியுயர்த்தினார்கள். "அரபு இனத்தையும் அரபு தேசத்தையும் கூறுபோட்ட இங்கிலாந்துக்கும், இஸ்ரேலுக்கும் பாடம் புகட்டுவேன். பாலஸ்தீனத்தை மீட்பேன்" என்று நாசர் சூளுரைத்தபோது, "இவன் தாண்டா அரேபியன்" என்று அவர்கள் நெஞ்சு நிமிர்த்தினார்கள். நாசர் சோவியத் யூனியனிடமிருந்து நிறைய ஆயுதங்களை வாங்கிக் குவித்தபோது "ஒழிந்தது இஸ்ரேல்" என்று ஆரவாரம் செய்தார்கள்.

நாசரை மிரட்டி வழிக்குக் கொண்டுவர பணக்கார நாடுகள் முயல, மிரட்டலுக்குப் பணியாமல் நாசர் பதிலடி கொடுக்க துள்ளிக் குதித்த அரேபியர்களின் பேச்சிலெல்லாம் எகிப்தும், நாசரின் தீரமும் நிறைந்து பொங்கின.

"அமெரிக்காவுக்கு எவ்வளவு திமிரு பாரு! அஸ்வான் அணை கட்ட அது நாசருக்கு இனி நிதியுதவி செய்யாதாம். ம்...சீப்பை ஒழிச்சு வச்சுட்டா கல்யாணம் நின்னு போகும்னு அமெரிக்கா நினைப்பு!"

"அந்த பாச்சாதான் நாசர்கிட்ட பலிக்காது. பதிலடி குடுத்திருக்கார் பாத்தியா? எனக்கு அணை கட்டப் பணம் வேணும். அதுக்கு சூயஸ் கால்வாயை நாட்டுடமை ஆக்கப்போறேன்னு சொன்னார். சொன்ன மாதிரியே துணிச்சலாய் செஞ்சும் காட்டிட்டார்!"

"இனி பணக்கார நாடுகளோட கப்பல்களெல்லாம் எந்த வழி போகும்னு பாப்போம்!"

"கடுப்புல அவங்க நாசரை கொன்னுருவாங்கன்னு சொல்றாங்களே?"

"அதெல்லாம் நடக்காது. நாசர் 'தில்'லான ஆளாக்கும்! சண்டை வந்தா தெரியும் சேதி!"

–சதாமும், அவன் நண்பர்களும் பேசிக் கொண்டது போல, சண்டை வந்தபோது தெரிந்தது சேதி!

இங்கிலாந்து, :.பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய மூன்று நாடுகளின் முப்படைகளும் 1956-ல் எகிப்துமீது போர் தொடுத்தன. "நாசரின் உயிரைப் பறிக்க வேண்டும். எகிப்தைப் பிடிக்க வேண்டும். அப்போதுதான் நம் ஆதிக்கத்துக்கு ஆபத்து வராது." என்று தீர்மானித்த அந்நாடுகள் நாசரை கொல்வதற்காக தேடித்தேடி குண்டு போட்டன. எகிப்தை பிடிப்பதற்காக கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தின.

ஆனால், நாசர் மாட்டவில்லை. அத்துடன் எதிரிகளின் ஊடுருவலைத் துணிச்சலுடன் தடுத்து நிறுத்தினார். மூன்று நாட்டுப் படைகளுக்கும் தண்ணி காட்டினார். அவர் பெரிய வெற்றி எதையும் பெற்று விடவில்லைதான். ஆனால் இராட்சத படைபலம் கொண்ட எதிரிகளோடு அவர் அஞ்சாமல் சமர் புரிந்து தாக்குப்பிடித்ததே அரேபியர்களைத் துள்ளிக் குதிக்கச் செய்தது. அரேபியர்களின் ஹீரோ ஆனார் நாசர்.

அரேபியர்களின் ஏகத் தலைவனாய் நாசர் கொடிகட்டிப் பறந்ததைப் பார்த்து அப்போதெல்லாம் சதாம் புல்லரித்தான். நாசரின் புகழ் கண்டு அவனுக்கு லேசாக பொறாமை கூட எற்பட்டதுண்டு. "என்னிக்காவது ஒரு நாள் நான் நாசரின் வீரத்துக்கும் ஒருபடி மேலே போய் காட்டுவேன். இங்கிலாந்து என்ன... அணு குண்டு வச்சிருக்கிற அமெரிக்கா தலைமையிலேயே எத்தனை நாடுகள் சேர்ந்து வந்தாலும் அத்தனை நாட்டையும் எதிர்த்து நின்று தாக்குப்பிடிச்சுக் காட்டுவேன். நாசர் எட்டடி பாஞ்சார். நான் பதினாறடி பாய்வேன். இதைச் செஞ்சு காட்டினால் தான் நான் சதாம்" என்று தனக்குள் சூளுரைத்துக்கொள்வான்.

இப்போது நாசர் எடுத்த முயற்சியால் எகிப்தும், சிரியாவும் ஒரே நாடாக இணைந்ததால் நாசர் மீது சதாமுக்கு மதிப்பு அதிகரித்தது.

இத்தனை பெருமைக்குரிய ஜனாதிபதி நாசர் தன்னை நேரில் சந்தித்துப் பேச விரும்புகிறார் என்ற தகவல் கிடைத்தவுடன் ஆனந்தத்தில் திக்குமுக்காடிப் போனான் சதாம்.

நினைவலைகளில் மூழ்கி மீண்ட சதாம், நாசர் இருக்கும் கெய்ரோவுக்குப் புறப்பட்டுப் போனான்...

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

# முள் நிலவு

## நிலவு 17

**ஏர்** இண்டியா அலுவலகத்தில் இருந்து டெலிஃபோனில் தெளிவாய் சொன்னார்கள்.

"கிருஷ்ணகாந்த் துபாயில் இப்போது உயிரோடு பத்திரமாய் இருக்கிறார். அவர் விமான விபத்தில் சிக்கவில்லை."

"எப்படி....எப்படி...?"

"அவர் புறப்பட்டு வந்த விமானம் துபாயில் நின்றபோது நள்ளிரவு நேரம். அப்போதே விமானப்படை பைலட் சக்கரங்களில் சிறிய டெக்னிக்கல் எரர் இருப்பதாகச் சொல்ல விமானம் கிட்டத் தட்ட மூன்று மணிநேரம் சரிபார்க்கப் பட்டுள்ளது. அந்த மூன்று மணிநேரமும் பயணிகள் துபாய் விமான நிலையத்தில் உள்ள ஓய்வு அறைக்கு வந்து தங்கியிருந்திருக்கிறார்கள். கிருஷ்ணகாந்த் லௌன்ஞ்சுக்கு வெளியே உள்ள பத்திரிகைகள் விற்கும் ஸ்டாலுக்குச் சென்றபோதுதான் அந்த அசம்பாவிதம் நடந்திருக்கிறது..."

"என்ன அசம்பாவிதம்...?"

"ஒரு தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த இரண்டு பேர் கிருஷ்ணகாந்த்தைத் துப்பாக்கி முனையில் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள்."

**க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் எழுதியுள்ள விறு விறு காதல்கதை.... உங்கள் இதயத்தில் இந்தக் கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!**

"எதற்காக அந்தக் கடத்தல்...?"

"கிருஷ்ணகாந்துக்கே அது புரியவில்லை. ஏதோ ஒரு இடத்துக்குக் கொண்டு போய் வைத்துக்கொண்டு ஏதோ இராணுவ சீக்ரெட்ஸ் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். தான் இராணுவ சம்பந்தப்பட்ட ஆள் இல்லை என்று சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. இத்தனை நாள் கடந்துதான் அவர்களுக்கு உண்மை புரிந்திருக்கிறது. கிருஷ்ணகாந்த் சாயலில் இருக்கும் ஒரு மிலிட்டெரி ஆபீஸரைக் கடத்துவதற்குப் பதிலாக கிருஷ்ணகாந்த்தைக் கடத்தியிருக்கிறார்கள். உண்மை தெரிந்ததும் விட்டு விட்டார்கள். கிருஷ்ணகாந்த் ஃப்ளைட்டில் பயணம் செய்ததாக நினைத்துக்கொண்டு அந்த விமானம் விபத்துக்குள்ளானபோது இறந்தவர்களின் லிஸ்டில் அவரையும் சேர்த்துவிட்டார்கள்...."

"இப்போது கிருஷ்ண்காந்த் எங்கே...?"

"துபாய் விமான நிலையத்தில் இருக்கிறார்... அங்கே உள்ள பொலிஸாரிடம் பூர்வாங்க விசாரணைகளை முடித்துக் கொண்டு இன்று இரவுக்குள் சென்னை வந்து சேரலாம்..."

டெலிஃபோனில் வழிந்த அந்த விவரங்கள் என்னையும் வெங்கடேஷ்வரனையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

★★★

**அ**டுத்த முப்பதாவது நிமிடம்-

நான், வெங்கடேஷ்வரன், அவருடைய மனைவி சௌந்தரம், சிவராஜன், பாக்யம் எல்லோருமாய் ஹாஸ்பிடல் வராந்தாவில் ஒரு சின்ன ஊர்வலமாய் நடந்து டாக்டர் புன்னம் சந்தரின் அறைக்குள் நுழைந்தோம்.

எங்களுக்காக டாக்டர் மிருதுபாஷிணியும், புன்னம் சந்தரோடு சேர்ந்து காத்துக்கொண்டிருந்தார். எங்களைப் பார்த்ததும் வியப்பு பரவிய முகத்தோடு கேட்டார்.

"துபாயில் இருந்து வந்த தகவல் உண்மையானதுதானா...? நல்லா விசாரிச்சு தெரிஞ்சுக்கிட்டீங்களா...?"

"நோ டவுட் டாக்டர்... நாங்க ஹாஸ்பிடலுக்குப் புறப்பட்டு வர்ற சமயத்துல துபாயிலிருந்து கிருஷ்ணகாந்தே ஃபோன் பண்ணிப் பேசினான். துபாய் பொலிஸ் விசாரணை மத்தியானம் ரெண்டு மணி வரைக்கும் இருக்காம். ரெண்டரை மணி ஃப்ளைட்ல பம்பாய்க்குப் புறப்பட்டு வந்து அங்கிருந்து மெட்ராஸ் ஃப்ளைட்டைப் பிடிச்சு இராத்திரி ஒன்பது மணிக்கு மெட்ராஸ் வர்றதா தகவல் கொடுத்திருக்கான்!" வெங்கடேஷ்வரன் சந்தோஷம் தத்தளிக்கச் சொன்னார்."

எல்லோரும் உட்கார்ந்ததும் புன்னம் சந்தர் கேட்டார்,

"நிலா இப்போது இருக்கிற இந்த நிலையைப்பத்தி கிருஷ்ணகாந்த்துக்குத் தெரியப்படுத்தினீங்களா...?"

"இல்லை டாக்டர்..."

"ஏன்..?"

"துபாயிலிருந்து சென்னைக்கு வருகிற அந்தப் பயணநேரம் அவனுக்கு ஒரு மனச்சுமையா இருக்கக்கூடாது டாக்டர்...! அவன் இங்கே வந்ததும் நிலாவின் நிலையை மிகைப் படுத்தாமல் இதமாக எடுத்துச் சொல்ல வேண்டியது உங்கள் பொறுப்பு டாக்டர்."

"இந்தப் பொறுப்பையும் என் தலையிலேயே கட்டிவிட்டீர்களா...?" லேசாகச் சிரித்த புன்னம் சந்தர் கேட்டார்:

"நிலாவைக் கல்யாணம் செய்து கொள்ள கிருஷ்ணகாந்த் நிரம்பவும் ஆவலாய் இருக்கிறார் அல்லவா...?"

"ஆமாம் டாக்டர்..."

"அப்படியானால் நிலாவின் இந்த முடிவு கிருஷ்ணகாந்துக்கு மிகப்பெரிய அதிர்ச்சியாக இருக்கும் இல்லையா...?"

"கண்டிப்பாய் டாக்டர்... 'நிலா எப்போது எனக்காக வீட்டை விட்டு வெளியே வந்தாளோ அந்த நிமிஷமே அவள் என்னுடைய மனைவியாகிவிட்டாள். இனிமேல் அவள் மிஸ் நிலா இல்லை. மிஸஸ் நிலா கிருஷ்ணகாந்த்!' என்று ஸ்டேட்ஸிலிருந்து ஃபோன் பண்ணும்போதே என் மகன் சொல்லிவிட்டான். அப்பேர்ப்பட்ட மனநிலை கொண்டவனுக்கு நிலா இப்போ இருக்கிற நிலைமை தெரியும்போது அப்செட் ஆயிடுவான்.... இந்தப் பிரச்சனையை எப்படி ஹேண்டில் பண்றதுன்னு நீங்கதான் சொல்லணும் டாக்டர்."

"கிருஷ்ணகாந்த் மெட்ராஸுக்கு எத்தனை மணிக்கு வந்து சேர்வார்...?"

"ஒன்பது மணிக்கு..."

"ஏர்போர்ட்டிலிருந்து நேரா இங்கே கூட்டிட்டு வந்துடுங்க.. நிலா இப்போ இருக்கிற நிலைமையைப் பத்தி நான் பேசிக்கிறேன்."

"டாக்டர்..." நான் குறுக்கிட்டேன்.

"சொல்லுங்க..."

"கிருஷ்ணகாந்த் வந்து நிலாகிட்ட நேரிடையா பேசும்போது அவ மனநிலையில் ஏதாவது மாறுதல் உண்டாக வாய்ப்பு இருக்குமா டாக்டர்...?"

"வாய்ப்பு அறவே கிடையாது. காரணம் கிருஷ்ணகாந்த்தை நிலா முன்னே பின்னே பார்த்தது கிடையாது. டெலிஃபோன்ல ரெண்டு மூணு தடவை பேசியிருக்காங்க. அவ்வளவுதான். எத்தனையோ தடவை மணிக்கணக்கா பேசியிருக்கிற உங்களையே நிலா மறந்துவிட்டிருக்கும்போது கிருஷ்ணகாந்தோட குரலை ஞாபகம் வெச்சிட்டிருப்பாள்னு எனக்குத் தோணலை. பட் எதுக்கும் கிருஷ்ணகாந்த் வந்து பேசிப்பார்க்கட்டும்."

"டாக்டர்! எனக்கொரு நம்பிக்கை இருக்கு. நிலாவோட சப்கான்ஷியஸ் மைண்டில் கிருஷ்ணகாந்தோட குரல் பதிவாகியிருந்து, அவர் வந்து பேசும்போது நினைவுகள் உயிர்ப்புக்கு வர வாய்ப்பிருக்கு. அதுக்கு உதாரணமா என் நண்பரோட அப்பாவைச் சொல்லலாம். நண்பரோட அப்பா எழுபத்தைந்து வயது பெரியவர். அவர் நோய் வாய்ப்பட்டு கோமா ஸ்டேஜில் இருந்தபோது, யார்கூப்பிட்டாலும் அசைவில்லாமே கிடப்பார். ஆனா அவர்க்கு பிரியமான பேரன் அவரோட் காதுக்குப் பக்கத்துல போய் 'தாத்தா'ன்னு குரல் கொடுத்தா போதும், உடம்பு ஒரு சின்ன அசைவுக்கு உட்படும்... அவருக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்த டாக்டர் அந்தப் பேரனை அடிக்கடி பேச வெச்சே பெரியவரைக் குணப்படுத்திட்டார். அந்த அற்புதம் கிருஷ்ணகாந்த் விஷயத்திலும் ஏன் நடக்கக்கூடாது...?"

புன்னம் சந்தர் புன்னகைத்தார்.

"பார்க்கலாம்... டாக்டர்களாகிய எங்களுக்கும் மிஞ்சின ஒரு சக்தி இருக்குங்கிறதை நாங்க என்னிக்குமே மறந்ததில்லை. கிருஷ்ணகாந்த் உயிரோடு இருக்கிற விஷயமே ஒரு அற்புதம்தான். அதேமாதிரி நிலாவும் குணமாயிட்டா அதைவிட வேற பெரிய சந்தோஷம் எங்களுக்கு எதுவும் இருக்க முடியாது. இராத்திரிக்கு கிருஷ்ணகாந்த் வந்துடட்டும். லெட் அஸ் ஸ்டார்ட் த ட்ரீட்மெண்ட்."

●●●

**ஏ**ர்போர்ட்.

ஒன்பது மணிக்கு வரவேண்டிய பம்பாய் விமானம் ஒரு மணிநேரம் தாமதமாய் வந்தது.

பயணிகளோடு பயணியாய் லக்கேஜ் எதுவும் இல்லாமல் சற்றே சோர்வாய் நடந்து வந்த கிருஷ்ணகாந்த்தை சௌந்தரம் ஓடிப்போய் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதாள்.

நான் கிருஷ்ணகாந்த்தைப் பார்த்தேன்.

சிவப்பாய்-அழகாய்-உயரமாய் ஒரு வடநாட்டு ஹீரோமாதிரி இருந்தான். மோவாயில் கருமையான ரோமப் பயிர். வெங்கடேஷ்வரன் என்னையும், சிவராஜன், பாக்யத்தையும் அறிமுகப்படுத்தி வைக்க, "வணக்கம்" என்று கை குவித்தவன் மெல்லிய குரலில் கேட்டான்;

"நிலா வரலையா...?"

எல்லோரும் மௌனிக்க- நான் மட்டும் சொன்னேன். "வரலை...."

"ஏன்...?"

"நிலாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை..."

அவன் முகம் உடனே மாறியது.

"என்ன உடம்புக்கு...?"

"வாங்க! கார்ல போகும் போது பேசிட்டே போகலாம்..."

லௌன்ஞ்சை விட்டு விலகி கார்க்கு வந்தோம். காரில் எல்லோரும் இறுகிய முகங்களோடு மௌனமாய் இருக்க, நான் நிலாவுக்கு ஏற்பட்ட விபரீதத்தைச் சொன்னேன். முகம் சட்டென்று ஒரு இருட்டுப்போக பதற்றமாய்க் கேட்டான்:

"டாக்டர் இப்ப என்ன சொல்றார்...?"

"நிலா தன்னோட பழைய நினைவுகளை வேகமா இழந்துட்டு வர்றதா சொல்றார்.... ஆனா நாம சில முயற்சிகளை எடுத்துக்கிட்டா அந்த இழப்பைச் சரி செய்யலாம்..."

கிருஷ்ணகாந்த் சில விநாடிகள் வரை கண்மூடி மௌனமாய் இருந்துவிட்டு, பின் வாயைத் திறந்தான்.

"நிலாவுக்கு இப்படியொரு நிலைமை ஏற்படும்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை..."



**க்ரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஸ்குமார்**

அதற்குப் பிறகு காருக்குள் யாரும் பேசவில்லை. கார் ஹாஸ்பிடலை நோக்கி மௌனமாய் பயணித்தது.

□♦□

**ஹா**ஸ்பிடல்.

இராத்திரி பத்தரை மணி.

கிருஷ்ணகாந்த் நிலாவுக்கு முன்பாய் உட்கார்ந்திருந்தான். சுற்றிலும் டாக்டர்கள் உட்பட நாங்கள் சூழ்ந்து நின்றிருந்தோம்.

கிருஷ்ணகாந்த் நிலாவின் கையை மெல்லத் தொட்டு அசைத்தபடி கூப்பிட்டான்.

"நிலா..."

"......" அவள் ஒரே திசையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

"நிலா...."

"........"

"என்னைத் தெரியுதா...? நான் கிருஷ்ணகாந்த். உனக்கும் எனக்கும் ரத்தின விநாயகர் கோயில்ல வர்ற வெள்ளிக்கிழமையன்னிக்குக் கல்யாணம்... மறந்துட்டியா...?"

"நிலா..."

நிலாவிடமிருந்து எந்தச் சலனமும் இல்லை.

டாக்டர் புன்னம்சந்தர் கிருஷ்ணகாந்த்தின் தோளை மெல்லத் தொட்டார்.

"கிருஷ்ணகாந்த்...! நிலாவுக்குப் பிடிச்சமான ஒரு வார்த்தையைச் சொல்லிப் பாருங்க..."

கிருஷ்ணகாந்த் யோசித்துவிட்டு நிலாவின் காதுக்குப் பக்கத்தில் போய், "மிஸஸ் நிலா கிருஷ்ணகாந்த்!" என்றான்.

நிலாவிடம் எந்தச் சலனமும் இல்லை.

"மிஸஸ் நிலா கிருஷ்ணகாந்த்..."

"...."

நிலா அசைவற்ற ஒரு ஜடப்பொருள் மாதிரி உறைந்து போய் உட்கார்ந்திருக்க- கிருஷ்ணகாந்த் பேசிப்பேசிக் களைத்துப் போனான்.

மிருதுபாஷிணி சொன்னாள்:

"மிஸ்டர் கிருஷ்ணகாந்த்...! இன்னிக்கு இவ்வளவு போதும். நாளைக்குக் காலையில வாங்க. மறுபடியும் ட்ரை பண்ணலாம்."

எல்லோருமாய் வெளியே வந்தோம். கார் பார்க்கிங்கை நோக்கி வராந்தாவில் நடைபோட்டபோது, எனக்கு முன்னால் கிருஷ்ணகாந்த்தும் அவனுடைய அம்மா சௌந்தரமும் நடந்து கொண்டிருந்தார்கள்.

சௌந்தரம் கிசுகிசுப்பாய்க் கேட்டாள்.

"நிலாவோட நிலைமை இப்படியிருக்கு... இப்ப... என்னடா பண்றது...?"

"அம்மா..."

"சொல்லு..."

"இனி நிலா குணமாவான்னு எனக்குத் தோணலை... அதனால..."

"அதனால...?"

"என்னோட லீவு முடியறதுக்கு முந்தி எனக்கு வேற ஒரு பெண்ணைப் பார்த்து கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணிடு..."

"எனக்கும் அதே நினைப்புத்தாண்டா... இந்தப் பைத்தியக்காரிக்கு முன்னாடி தினமும் வந்து உட்கார்ந்துக்கிட்டு நீயும் பைத்தியம் மாதிரி பேசிட்டிருக்கிற கொடுமை வேண்டாம். நாளைமிலிருந்து உனக்கு ஒரு நல்ல பொண்ணா பார்க்க வேண்டியது என்னோட வேலை."

நான் அதிர்ந்து போய் வராந்தாவின் ஓர் ஓரத்தில் ஆணியடித்த மாதிரி நிற்க- பின்னால் வந்த சிவராஜனும் வெங்கடேஷ்வரனும் கேட்டார்கள்:

"என்ன ஆர்.கே. ஸார் நின்னுட்டீங்க...?"

"ஒ...ஒண்ணுமில்லை... நீங்க போங்க... நான் டாக்டர்ஸைப் பார்த்து ஒரு நிமிஷம் பேசிட்டு வந்துடறேன்." திரும்பி நடந்தேன்.

●●●

**டா**க்டர் இருந்த அறைக்குள் நுழைந்தேன்.

புன்னம் சந்தரும் மிருதுபாஷிணியும் என்னை வியப்பாய்ப் பார்த்தார்கள்.

நான் அவர்கள் இருந்த மேஜையில் கைகளை ஊன்றிக் கொண்டேன்.

"டாக்டர்! ஒரு ரிக்வெஸ்ட்..."

"என்ன...?"

"நிலா தன்னோட நினைவுகளை கொஞ்சம் கொஞ்சமா இழந்துட்டு வர்றதா சொன்னீங்க...?"

"ஆமா..."

"அவ தன்னோட எல்லா நினைவுகளையும் இழக்கும்படியா விட்டுர்றது நல்லது.... அவளைக் குணப்படுத்தற எந்த முயற்சியும் வேண்டாம்..."

"ஏன் அப்படிச்சொல்றீங்க...?"

"குணமாகும் நிலா கேள்விப்படுகிற ஒரு அதிர்ச்சியான செய்தியை அவளாலே தாங்கிக்கவே முடியாது."

"புரியலையே...?"

"அநேகமா நாளைக்கே உங்களுக்குப் புரியலாம்!" சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

கிருஷ்ணகாந்த் பிறந்த ஆண்குலத்தில் பிறந்ததற்காக மனம் கனக்க வெட்கப் பட்டுக் கொண்டு தலைகுனிந்து நடந்தேன்.

**முற்றும்**

---

# கவியரசுவின் சுயசரிதை

## 19

**ஒ**ன்றில் மட்டும் அவன் தெளிவாக இருந்தான்.

மனது களங்கமில்லாதிருந்தால் வாழ்க்கையில் வரும் துயரங்கள் தானாகவே விலகிவிடும் என்பதுதான் அது.

எப்போது விலகும்...? எப்படி விலகும்...? அதெல்லாம் தெரியாது.

விலகும்!

அது மட்டும் நிச்சயம்...!

சிறைச்சாலையை விட்டு வெளியே சென்றதும் தான் யார் என்பதை உலகத்திற்கு காட்டிவிட வேண்டும் என்று அவன் முடிவு கட்டிக்கொண்டான்.

பத்திரிகைதான் அதற்குச் சரியான சாதனம் என்று கருதிய அவன் வெளியே சென்றதும் முதல் வேலையாக பத்திரிகையைத் தொடங்க உறுதி கொண்டான்.

உடனே கற்பனையில் மிதக்கத் தொடங்கினான்...?

எப்படி எழுத வேண்டும்...? என்னென்ன எழுத வேண்டும்...?- என்பதையெல்லாம் அந்த இரவே சிந்தித்தான்.

**கவியரசு கண்ணதாசன் எழுதிய-அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

தன் முன்னால் மற்றவர்களைக் கை கட்டி நிற்கும்படி செய்துவிடமுடியும் என்று முழுக்க முழுக்க அவன் நம்பினான்.

அந்த நம்பிக்கையோடு அந்தக் கூண்டுக்குள்ளே இருந்த திண்ணையில் சாய்ந்தான்.

'சர்' என்று பயங்கரமான சப்தம் ஒன்று எழுந்தது.

திடுக்கிட்டு எழுந்தான்...



ஒரு மழை விட்டில்- முன்று விறகடை பருமன் இருக்கும். அவன் முகத்தில் வந்து விழுந்தது. கீழே தள்ளிக் காலால் மிதித்தான். வெளிப் பக்கமாகத் தள்ளிவிட்டு மறுபடியும் படுத்தான். அமைதியாகத் தூங்கினான்! நடுச் சாமம் இருக்கும். உடம்பெங்கும் ஏதோ ஊர்வதுபோல் தோன்றக் கண் விழித்தான்.

அவன் உடம்பு முழுக்க ஆயிரக்கணக்கான சிற்றெறும்புகள் மொய்த்துக்கொண்டிருந்தன. உடம்பு, மார்பு, கண், காது, மூக்கு அனைத்திலும் அவை ஊர்ந்து கொண்டிருந்தன.

உடம்பைத் தேய்த்தால் எல்லாம் கடிக்கும். அவனுக்கு நடுக்கமாகவே இருந்தது! ஒன்றிரண்டு எறும்புகள் கடிக்கவும் தொடங்கின.

அவனால் அடித்துப்போடப்பட்ட விட்டில் பூச்சியால் வந்த வினை அது...! அந்தப் பூச்சியை இழுத்துக் கொண்டு வந்த எறும்புகள் அவன் உடம்பின் மீது ஏறிவிட்டன.

பக்கத்தில் இருந்த பானையில் தண்ணீர் இருந்ததைக் கண்டதும் அவனுக்கு ஆறுதல் பிறந்தது. பானையை அப்படியே தூக்கித் தலையிலே தண்ணீரை ஊற்றினான்...! ஒரு வழியாக எறும்புகள் எல்லாம் தண்ணீரோடு பூமியில் விழுந்தன. அந்த நேரத்தில் அடுத்த அறையில் ஒருவன் விழித்துக் கொண்டிருந்தான்.

"என்ன சார், இந்த நேரத்தில் குளிக்கிறீர்கள்...!" என்று அவன் குரல் கொடுத்தான். நடந்த கதையைச் சொன்னான்.

அறை முழுவதும் ஈரமாகிவிட்டது.

பாக்கி நேரத்தைத் தூங்கி கழிக்க அவனால் முடியவில்லை. அப்படியே திண்ணையில் உட்கார்ந்தான்.

பொழுது விடிந்தது! சிறைவாசத்தில் அந்த ஒருநாளும் கழிந்தது.

(சரிதம் தொடரும்)



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# இவர்கள் காத்திருக்கிறார்கள்

கிழக்கு தன் இரவு உடைகளை மாற்ற ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. அதன் அடிவான் சிவப்பதைக் கண்டு பறவைகள் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டிருக்கின்றன. மலர்கள் தம் மொட்டுக்களை மெல்ல அசைத்து காற்றுடன் சம்மந்தம் செய்கின்றன.

சின்னம்மா மெல்லக்கண்களைத் திறந்தாள். பக்கத்தில் பருவங்கள் காணாத பாலகனும் பள்ளிவயதை எட்டிநிற்கும் மகளும் 'யூனிசெஃப்பின்' உதவியினால் பாயில் கிடந்தனர். எண்ணங்கள் எங்கோ போக கண்களைத்துடைத்துக்கொண்டு தான் படுத்திருந்த கிழிந்த சீலையைக்கொண்டு தன் சொந்தங்களைப் போர்த்தினாள். அவளையும் அறியாமல் பெருமூச்சு ஒன்று அவள் எண்ணங்களைச் சுமந்து வந்தது.

சின்னம்மா, கிருஷ்ணபிள்ளை ஐயாவின் ஒரே மகள். சின்னம்மாவின் சாமத்திய காலத்தில் தாயின் சாவீடும் நடந்து முடிந்தது. அன்றிலிருந்து தன் அன்பு மகளுக்காக வாழ்ந்து வந்தார் கிருஷ்ணபிள்ளை. பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத் தொழிலாளியான அவருக்கு பரந்தன் சந்தியால் பூனகரி செல்லும் பாதையில் பத்து ஏக்கர் நீர்ப்பாசன வயலும், 03 ஏக்கர் தென்னையும், அதன் நடுவே பெரிய கல்வீடும் அவரின் அசையாச் சொத்துக்களாய் இருந்தன. தன் செல்ல மகளை சொந்த ஊரிலேயே ஓர் ஆசிரியருக்கு மணம் முடித்து வைத்தார். அவரும் பரந்தன் இந்துக்கல்லூரியில் பணியாற்றி வந்தார்.

காலங்கள் சென்றன. சின்னம்மா இரண்டு செல்வங்களைப் பெற்றெடுத்தாள். உத்தியோக வருமானம் போக தோட்டத்தில், கமத்தில் என்று செல்வம் பொழிந்தது. அந்நேரம் கிருஷ்ணபிள்ளை ஐயா பாரிசவாத நோயினால் படுக்கையில் வீழ்ந்து பாடையில் தன் துணையிடம் சென்றுவிட்டார். அவரின் வைத்திய செலவுக்கே அவர் மொத்தமாக வாங்கிய ஓய்வூதியம் சரியாய்ப்போனது.



வழமைபோல் பாடசாலை புறப்பட்ட கந்தசாமி, மனைவி சின்னம்மாவை அழைத்து "போயிற்று வாறன். பிள்ளைகளைக் கவனமாய்ப் பாரும். அங்கால 'செல்' அடிக்கிறான் போல..." சொல்லிக்கொண்டு போனவரை விதி சிரித்து வரவேற்றுக்கொண்டு போனது. 'அந்தோ' எங்கிருந்தோ வந்த 'செல்' ஒன்று பத்தடி பின்னால் வீழ்ந்தது. காற்றால் உயர அள்ளப்பட்ட கந்தசாமி கீழே விழும் போது பிரேதமாகிப்போனார். செய்தி அறிந்த சின்னம்மா கொடியாகத் துவண்டு போனாள். முகம் மட்டும் மிஞ்சி முதுசெல்லாம் பிய்ந்து சதைக்கோலமான கணவனைக் கட்டியழும் பாக்கியமும் இழந்து- பொட்டிழந்து பூவிழந்து மீண்டும் இன்னொரு கண்ணகி போல் ஆவேசம் கொண்டாள்.

இங்கென்ன நெறி தவறா ஆட்சியா நடக்கிறது, தவறு நேர்ந்தால் தன்னை மாய்க்க? மீண்டும் மீண்டும் இங்கு செல்லடிகள் தொடர்ந்தன. செல்லடிகள் 'சத்ஜெய' என்றன.

ஊரோடு ஊராக இவளும் தன் குழந்தைகளுடன் குஞ்சுப்பரந்தன் பக்கம் ஓடினாள், "எங்கும் ஒரே 'செல்லடி!' அதால தான் வாறானாம்; என்ன செய்வது?" ஒரு பெரியவரின் இயலாமை "விசுவமடுப்பக்கம் போவம்!" இது சூரியகதிரில் ஓடிவந்த சின்னத் தம்பியின் யோசனை.

எப்படியோ இன்று கைவேலிக்குடியிருப்பு ஒன்றில் சிறியகுடிசை- இல்லை, இல்லை- வீடு ஒன்றில் வாழ்ந்து வருகிறாள். தன்பெரிய கல்வீடு இன்று மண்மேடாய்ப் போய்விட்டதாம். இருப்பது தானே வீடு!

யூ.என்.ஏச்.சி.ஆர் தரப்பாலால் வேயப்பட்ட இந்தவீடுகூட இல்லாது எத்தனை சனம் மரத்தின் கீழே இருக்குதுகள், தனக்குத்தானே சமாதானம் செய்தபடி நேற்றுக்காய்ச்சிய கஞ்சிப்பானையைக் கழுவிக்கவிட்டாள் சின்னம்மா.

"என்னம்மா இன்றைக்கு தேத்தண்ணி இல்லையே?" மகள் கீதாதான் கண்களைப் புறங்கையால் துடைத்துக்கொண்டே கேட்கிறாள். பால்குடிக்கும் வயதில் பாவம் அவளுக்கு என்ன தெரியும்? எழுந்து வந்த அழுகையை மறைத்தபடி "இன்றைக்கு அண்ணா கச்சான் விற்றுப்போட்டு வரேக்கை சீனி வாங்கி வரட்டும்; பின்னேரம் குடிப்பம்." தாயின் வார்த்தையில் ஏதோ பொறி தட்ட

**கார்த்திக் – வன்னி**

மூத்தவன் சிவா "என்னம்மா நீங்கள் இன்றைக்கு வரேல்லையே?" என்று கவலையுடன் கேட்கிறான். தினம் தானும் தாயும் கச்சான் விற்கச்சென்று இளவேனில் கடைக்கு முன்னுள்ள மரத்தடியில் அவள் இருந்து வியாபாரம் செய்ய அவன் வீதி வீதியாக அலைந்து "அண்ணா கச்சான் வேண்டுங்கோ அம்மா கச்சான் வேண்டுங்கோ- இப்ப வறுத்தது சுடச்சுடக் கச்சான்" என்று அலைந்து திரிவான்.

"இன்றைக்கு நான் உண்ணாவிரதம் இருக்கப்போறன்!" என்ற சின்னம்மாவை மகன் ஒன்றும் விளங்காமல் பார்க்க, அவள் தனக்குள் நொந்து கொள்கிறாள். வீட்டில் இருந்தும் உண்ணாவிரதம்தான்; அதைக் கச்சேரியில் போய் இருந்தாலும் உண்ணாவிரதம்தான்.

"இந்தா இதுல தங்கச்சிக்கு ஒரு துண்டு பாண் வாங்கிக்கொடு. நீயும் சாப்பிடு!" சீலைத் தலைப்பில் இறுக்கமாய் முடிந்திருந்த 5.50 சதம் இரண்டு சிறிய குற்றிகளை சிவாவின் கையில் கொடுத்துவிட்டு, ஒரு செம்பு தண்ணீரை குடித்து முடித்துவிட்டு "நான் வாறன் நேரம் போகுது" என்று சாக்கினால் கட்டிய கதவை வீட்டுக்கு காவலாக வைத்துவிட்டு "நீ போய் பக்கத்துவீட்டில் விளையாடு அண்ணா பாண் வாங்கி வரட்டும்! என்றாள், மகள் கீதாவைப் பார்த்து. தினம் அதுதானே கீதாவின் வேலை பக்கத்துவீட்டு சுந்தரியுடன் விளையாடுவது. செல்ல எத்தனித்தவள் "கீதா இங்கே வா" என்றாள் பக்கத்தில் வந்தவளின் சட்டை முன்பக்கமாக கிழிந்து இருந்த இடத்தில் தன் சட்டையில் இருந்த பின் கொண்டு தற்காலிகத்தையலை முடித்துக் கொண்டு அவள் வீதியில் இறங்கி புதுக்குடியிருப்பை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள்.

வீதியில் பள்ளிக்குச் செல்லும் கீதா போன்ற பிள்ளைகள், சிவா போன்ற சிறுவர்கள், அவர்களின் கைகளிலே புத்தகச்சுமை சிவாவின் தலையிலே கச்சான் சுமை நினைத்துப்பார்க்க நெஞ்சம் வெடித்துவிடும்போல் இருந்தது. தொடரும் இந்த யுத்தத்தினால், இராணுவ நடவடிக்கைகளால் இந்தப்பிள்ளைகளின் இந்த வாழ்க்கை எவ்வளவு காலத்திற்கு இனிக்கப்போகிறது? அவள் எண்ணப் பறவை சிறகை விரித்துப் பறக்கிறது.

தலைசுற்றல் போல் கண்கள் இருள, வீதியோர வேலியில் ஒருதடியைப்பிடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு கச்சேரியை அடைகிறாள் சின்னம்மா.

அங்கு தன்னைப்போல், சிவாவைப் போல் கீதாவைப்போல், பக்கத்து வீட்டு மிதிவெடியில் காலை இழந்த கார்த்திகேசு போல் நூற்றுக்கணக்கானோர் அரசின் அசமந்தப்போக்கைக் கண்டித்து, "நிவாரணம் வழங்கு! நிவாரணத்தை வெட்டாதே" போன்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகள். கோஷம் எழுப்ப அவர்கள் எவருக்கும் சக்தியில்லை. இந்த சின்னம்மாவைப்போல் ஒரு நேர உணவும் இருநேர பச்சைத் தண்ணீரும் சாப்பிடும் ஜீவன்கள் தானே அவர்களும்?

எல்லோரும் காத்திருக்கிறார்கள், நமது சின்னம்மாவைப்போல். சூரியன் மட்டும் தன் கரங்களை நீட்டி சூடேற்றிக்கொண்டே இருந்தான். ●

# குற்றம் புரிந்தவன்

பிரசவம் என்பது ஒரு மறு பிறப்பு என்பார்கள். கபிலும் தன்னுடைய மனைவியை பிரசவத்திற்காக வைத்தியசாலையில் அனுமதித்திருக்கிறான். இதனால் இரண்டு நாட்களாக அவனுக்கு நிம்மதியான தூக்கம் வர மறுத்துக் கொண்டிருந்தது.

அன்றும் அவசர அவசரமாக வேலை முடிந்து வந்து ஆஸ்பத்திரிக்கு ஓடினான். ஆறு முப்பதுக்குத்தான் பார்வையாளர் நேரம் என்றார்கள். அதனால் அரைமணித்தியாலங்கள் 'வெயிற்றிங்' அறையிலே காத்திருந்தான் கபில். அப்பொழுது அவனுக்கு முன்னுள்ள பாதையால் சில தாதியர்கள் அவனைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

அதில் ஒரு தாதியைத் திடீரெனப்



பார்த்ததும் கபில் அதிர்ச்சியாகிப் போனான்.

அவளும் சிலநிமிடங்கள் அவ்விடத்திலே தரித்து நின்று அவனைப் பார்த்தபடி நின்றாள். பின் மெதுவாக அங்கிருந்து நகர்ந்துச் சென்றாள்.

அவனது மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. அவனின் கடந்தகால நடவடிக்கையை நெஞ்சினில் கொண்டு நிலை நிறுத்தியது. அவன் சிந்தனையில் மூழ்கிப் போனான்.

அப்பொழுது கபில் ஜெர்மனிக்கு வந்து ஏழுமாதங்கள்தான் ஆகியிருக்கும். ஓர் அகதிகள் முகாமில் வைத்து 'டொச்' மொழி கற்பித்துக்கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட பதினொரு இலங்கையர்கள் அங்கே வைக்கப்பட்டிருந்தார்கள்.

அந்தமாலை கொஞ்சம் பியர் பாவித்துவிட்டு 'காட்ஸ்' விளையாடிக்கொண்டிருக்கும் போது இருகுழுக்கழுக்கிடையிலும் சிறு கைகலப்பு ஏற்பட்டுவிட்டது. அதிலிருந்து விடுபட விரும்பிய கபில் மெதுவாக எழுந்து வாசற்பக்கம் நகர்ந்தான். நகரும் பொழுதே சிறிது தடுமாறியவன் அங்கு அமைக்கப்பட்டிருந்த கீழ் இறங்கும் படிகளில் தட்டிவிட்டான்.

இதனால் யாரும் எதிர்பாராத நேரத்தில் அந்த மூன்றாம் மாடியிலிருந்து படிகளின் மூலம் உருண்டு இரண்டாம் மாடித் தளத்திலே விழுந்து கிடந்தான்.

'அம்பியூலென்ஸ்' வரவழைத்து அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். இடுப்பு எலும்பு அடிபட்டதால் மூன்று வாரத்திற்கு மேலாக வைத்தியசாலையில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது அங்கு அவனுக்குத் தாதியாக வந்தவள்தான் இப்பொழுது அவனைக் கடந்து சென்ற இந்த ஒலிவியா.

இவள் ஓவியம்போல் மிகவும் அழகாக இருந்தாள். அதுவும் அந்தத் தாதியர் உடையுடன் கபிலை அடிக்கடி நெருங்கும்போது, அவனது மனம் படபடக்க ஆரம்பிக்கும். தாதியென்ற ரீதியில் நாளொன்றுக்கு அதிக நேரம் ஒலிவியா அவனின் அறைக்கு வந்து போய்க் கொண்டிருந்தாள்.

கபிலுக்கு அவளை நிறையத்தரம் பார்க்க வேண்டும்போல் தோன்றும். அதனால் ஒரு சிறு தேவைக்கும் அழைப்பு மணியை அமுக்கி அவளை அழைப்பான் கபில். ஒலிவியாவும் எதுவித சலிப்பும் காட்டாமல் அவனின் தேவைகளை நிறைவேற்றுவாள். அதுமட்டுமல்ல அவனது நாட்டைப்பற்றி, குடும்பத்தைப்பற்றியெல்லாம் விசாரிப்பாள். "இன்று கடிதம் வந்ததா?" என்று அக்கறையாக வினவுவாள்.

கபிலை ஒரு நோயாளியாக நினைத்து அக்கறையாகவும், அரவணைப்பாகவும் பழகுவாள். இந்த அரவணைப்பும் அன்பும் இளைஞனாகவும், ஏக்கத்துடனும் வாழும் அவனின் மனதில் ஆழமாய்ப் பதிந்து போனது. அவன் ஒலிவியாமீது தீர்க்கமான அன்பு வைத்துப் பழக ஆரம்பித்தான்.

ஒரு மாலை அவள் வழமைபோல் கபிலின் அறைக்கு வந்தாள். அப்பொழுது அவன் மிகவும் வாட்டத்துடன் காணப்பட்டான். இதைக்கவனித்த ஒலிவியா "ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?" வினவினாள். "நாட்டிலிருந்து கடிதம் வரவில்லையா என்று கேட்பாயே. இன்று கடிம் வந்திருக்கிறது," என்றான் கபில்.

"அது உனக்குச் சந்தோஷந்தானே?" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் ஒலிவியா.

"எப்படிச் சந்தோஷப்படுவது? எங்கள் வீட்டின் மேல் 'ஷெல்' விழுந்து அம்மாவும், தங்கையும் இறந்துபோனார்களாம் ஒலிவியா." அடக்கி வைத்திருந்த சோகமெல்லாம் அழுகையாகப் பெருக்கெடுக்க கபில் கதறத் தொடங்கிவிட்டான். செய்தி கேட்டு கவலைப்பட்ட அவளுக்கும் எதுவும் செய்யத் தோன்றவில்லை. அழுதுகொண்டிருந்த அவனின் தலையை வருடிவிட்டாள் அவள்.

அவன் ஒலிவியாவின் கைகளிலே முகம் புதைத்து அழுதுகொண்டிருந்தான். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறிய அகதிகள் என்று அனுதாபம் மேலோங்கி, ஒலிவியாவிற்கும் கபில்மீது ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தியது.

அவன் குணமாகி வெளியேறும் பொழுது ஒலிவியாவும் அவனும் காதலர்களாக மாறியிருந்தார்கள். கபில் இருந்த அகதிகள் முகாமிற்குச் சென்று கையெழுத்திட்டு அவனை அழைத்துக்கொண்டு போனாள் ஒலிவியா.

இருவரும் கணவன்- மனைவியாக வாழ ஆரம்பித்தார்கள். ஒலிவியா அவனுக்கு 'டொச்' மொழி கற்பித்து தொழிற் கல்வி பயிற்றுவித்தாள். பின்னர் இருவரும் பதிவுத் திருமணம் செய்து கொண்டார்கள். கபில் இத்தருணம் பூரண குடியுரிமையுள்ள ஒரு ஜெர்மனி நாட்டுப் பிரஜையாகிப் போனான். இதனால் அவனுக்கொரு நல்ல இடத்தில் வேலைவாய்ப்பும் அமைந்து வந்தது.

ஒலிவியாவும் அவனும் இரண்டு வருடங்களாக மிக மகிழ்ச்சியுடன் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தார்கள். அந்த நேரம் நாட்டிலுள்ள தாய்மாமன் ஒருவர் கபிலுக்கொரு கடிதமெழுதி அனுப்பினார்.

"உறவுக்காரர்கள் என்றைக்கும் உறவுக்காரர்கள்தான், விட்டுப்போன சொந்தங்கள் ஒன்று சேருவது இயற்கையின் நிகழ்வு. ஆகவே என் ஒரே மகளை நீ திருமணம் செய்துகொள்ள வேண்டும். இருக்கும் சொத்துக்களையெல்லாம் உன் பெயருக்கே எழுதிவைக்கிறேன்," என்று உருக்கமாகவும், உரிமையாகவும் வேண்டிக்கொண்டார்.

கபிலின் பெற்றோர் வறுமைக்கோட்டுக்கும் கீழ் அகப்பட்டுக் கஷ்டப்பட்டபொழுது செல்வந்தரான இந்த மாமா ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இப்பொழுது அந்த மாமா அனுப்பிய கடிதத்தை அவன் கிழித்துப் போடவில்லை. மாறாக பெருமைப்பட்டுக் குதூகலித்தான். இந்தக் குதூகலிப்பின் விளைவாக ஒலிவியாவைத் தூக்கியெறிய முனைந்தான். அத்தனை உதவிகளும் செய்து அவனை ஒரு ஆளாக்கிய அவளைத் துச்சமென மதித்தான்.

திடீரென ஒருநாள் அவளுக்குச் சொல்லிக் கொள்ளாமல் வீட்டைவிட்டு வெளியேறி வேறு மாநிலத்திலே போய்ச் சேர்ந்து கொண்டான் கபில். அங்கிருந்து ஒலிவியாவைப் பிடிக்கவில்லையென்று விவாகரத்துப்பெற்று மாமாவின் மகளை அழைத்துத் திருமணம் செய்துகொண்டான். இப்பொழுது மனைவியை பிரசவத்திற்காக அனுமதித்த இந்த ஆஸ்பத்திரியில் அவளைப் பார்த்தபொழுது நடுநடுங்கிப் போனான்.

கபில் சிந்தனையிலிருந்து விடுபட்டு நிகழ்வுக்கு வந்தபொழுது ஆறேமுக்கால் ஆகியிருந்தது. சட்டென இருக்கையை விட்டெழுந்தவன் மனைவியை அனுமதித்திருந்த 'வாட்டுக்குள்ளே' சென்றான். அவளைப் பிரசவ அறையில் சேர்த்திருப்பதாகச் சொன்னார்கள். கணவன் என்ற ரீதியில் அவனையும் பிரசவ அறைக்கு வருமாறு அழைத்துப் போனார்கள்.

கபில் பிரசவ அறைக்குள் நுழைந்தபொழுது அங்கே டாக்டருடன் தாதியாக ஒலிவியா நின்றிருந்தாள். ஒலிவியாவைக் கண்டதும் குற்ற உணர்வு அவனைக் கொன்றது. கூனிக்குறுகி வேறு திசையைப் பார்த்தவாறு நிற்பதற்கு முற்பட்டான் அவன். மனைவியோ பிரசவ வலியால் துடி துடித்துக் கொண்டிருந்தாள்.

**களுவாஞ்சிக்குடி யோகன் – அவுஸ்திரேலியா**

அவனின் நிலமையை உணர்ந்த ஒலிவியா அவனருகில் வந்து எதுவுமே நடவாததுபோல் மிக இயல்பாக, "நீங்கள் எதைப்பற்றியும் யோசித்து மனதைக் குழப்பவேண்டாம். உங்கள் மனைவிக்குச் சுகப்பிரசவம் நிகழ நாங்கள் பாடுபடுவோம். அதற்கு உங்கள் மனைவியை நீங்கள் ஆறுதல் படுத்தினால் போதும்" என்று அவனிடம் இதமாகப் பேசி தட்டிக் கொடுத்தாள்.

அவளின் இந்த ஆறுதல் வார்த்தைகள் கபிலைச் சுட்டெரித்தன. தான் செய்த துரோகத்தை மறந்து எதுவுமே நிகழாதது போன்று நடந்து கொள்கிறாளே என்று நினைக்க ஒலிவியாவின் காலைப் பிடித்துக் கதற வேண்டும் போல் தோன்றியது.

'பாசமும், அன்பும் நிறைந்த ஒரு உண்மைத்தாதியை ஏமாற்றிய பாவம் என்னைச் சும்மாவிடாது.' என்று பெரிதாகக் கத்த வேண்டும் போலிருந்தது. மறுமுனையில் மனைவியின் பிரசவ வேதனைக் கூக்குரலைக் கேட்கும் பொழுது ஒருவித பதைபதைப்பும் நடுக்கமும் அவனைச் சூழ்ந்துகொண்டன. இப்படிப் பல உணர்ச்சிப் போராட்டங்களிலும் தத்தளித்தவனாக அந்தப் பிரசவ அறையிலே நின்று கொண்டிருந்தான் கபில். ○

தனது மேனேஜர் வந்து சொன்னதைக் கேட்டு ஆத்திரத்துடன் கத்தினான் வர்மா... "நோ!" அருகிலிருந்து டெலிஃபோனை அள்ளினான். "டாடி, ஒரு பேட் நியூஸ். அஞ்சு வருசமா நாம தேயிலை ஏற்றுமதிக்கு வாங்கிட்டு வந்த 'கோல்ட்கிங்' விருது இந்த வருஷம் நம்ம பக்கத்து எஸ்டேட் பிரபு வாங்கப்போறானாம்பா. விருதை அவன் வாங்கிட்டா நம்ம மதிப்பெல்லாம் போயிடும். அதனால என்ன செய்வீங்களோ எனக்குத் தெரியாது. அவன என் வழியிலிருந்து விலக்கணும்!" என்று சொல்லிவிட்டு பட்டென்று வைத்து விட்டான்.

யோசனையில் ஆழ்ந்த வர்மாவின் அப்பா டெலிஃபோனை எடுத்து நம்பர்களைத் தட்டினார். அடுத்த அரை மணிநேரத்தில் நவீன் என்னும் திடகாத்திரமான ஆள் உள்ளே நுழைந்து அவர் முன் பவ்யமாய் நின்றான்.

"நவீன்... உன் சைலன்ஸர் துப்பாக்கிக்கு ஒரு வேலை வந்திருக்கு. வர்ற இருபதாம் திகதி கறுப்பு மாளிகையில ஒருத்தன், 'கோல்ட்கிங்' விருது வாங்குவான். அவனை அந்த இடத்திலேயே சுட்டுவிடு, அவன் உயிருக்கு நான் தர்ற விலை.. இந்தா..." பணத்தை அள்ளிப் போட்டார். நவீன் எச்சில் ஒழுக அள்ளிக்கொண்டான்.

# அவனுக்கு விருது



**-ஹரிஹரன்-**

கறுப்பு மாளிகை!

மேடையில் நகரின் பிரபல தொழில் அதிபர்கள் விழாவின் சிறப்பு விருந்தினர்களாக அமர்ந்திருந்தனர். விருது வாங்குவதற்காக பிரபுவும், அவன் அருகில் வாடிய முகத்துடன் வர்மாவும் அமர்ந்திருந்தனர்.

மேடையின் அருகில் கமிட்டி அதிகாரிகள் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டனர். பின் வர்மாவையும், பிரபுவையும் அழைத்தனர்.

"சொறி மிஸ்டர் பிரபு... ஒரு மிஸ்டேக் நடந்து போச்சு. இந்த வருஷமும் விருது வர்மாவுக்குத்தான். கம்ப்யூட்டர்ல வர்மாவுக்கு பதிலா உங்க பேர்ல முத்திரை விழுந்திருச்சு..."

திடீர் மகிழ்ச்சியில் அதிர்ந்தான் வர்மா.

பிரபு அமைதியாகச் சொன்னான்: "எனக்கு இதனால அப்ஜெக்ஷன் இல்ல. போட்டியிருந்தாத்தான் நல்ல தரமான பொருளைத் தரமுடியும். இந்த வருடம் வர்மா வாங்கட்டும். அடுத்த வருடம் நான் வாங்கிக் கொள்கிறேன்!" என்று பெருமையுடன் கூறிவிட்டு மேடையைவிட்டு கீழிறங்கினான்.

வர்மா பரிசு வாங்கத் தயாரானான். அதே நேரம் சைலன்ஸர் துப்பாக்கியோடு நின்றிருந்த நவீன் துப்பாக்கியை உயர்த்தினான்.

பலத்த கைத்தட்டல்களுக்கு நடுவில் வர்மா விருது வாங்க அதிகாரியை நெருங்க...

நவீன் சரியாய் சுட்டான்- வர்மாவின் மார்பு நோக்கி!


படிப்பகம்

# மயக்கமா தயக்கமா?



சிங்கம் ஒன்று
நடைபோட்டது போலிருந்தது
அவன் நடந்தபோது!

இடையில் தொங்கிய
வாள்
எதிரிகளை எச்சரிக்கும்!

மறுபுறம் தொங்கிய
கைத்துப்பாக்கி
தீனிக்கு காத்திருக்கும்!

மாவீரன் நெப்போலியன்
பிரபஞ்சம் அறிந்த வீரன்!

களம் கண்டால்
வெற்றிக்கனி
கரம் தேடி வரும்!

"முடியாது என்பது
என் அகராதியிலே கிடையாது!"
என்று முழங்கியவனுக்கே
சவால் காத்திருந்தது!

மோதல் களம் என்றால்
வாளைச் சுழற்றலாம்!
ஆயுதம் ஏந்தி
ஆளைச் சரிக்கலாம்!

அவன் சிக்கியது
காதல் களம்!

நெப்போலியனை
பிரபஞ்சம் அறியவைத்தது
அவனது வீரம்!

நெப்போலியனை
எதிரிகள் அஞ்ச வைத்தது
அவனது விவேகம்!

நெப்போலியன்
தன்னைத்தானே
அறியவைத்தது
காதல்!

நெப்போலியன்
கண்டு அஞ்சியது
அவளது விழிகள்!

பட்டை தீட்டிய
வைரம் போல
இருந்தாள் அவள்!

முதல் பார்வையிலேயே
வலை ஒன்று விரிந்து
அவனை வாங்கிக்கொண்டது!

காதல் என்பது
பைத்தியக்காரத்தனம்
என்று நினைத்தவனை
பைத்தியக்காரனாக்கிவிட்டாள்

நாடு பிடிக்கும்
திட்டம் தீட்டி
பழக்கப்பட்டவன்
அவளை வளைக்கும்
வியூகம் அமைக்க
தடுமாறிக் கொண்டிருந்தான்!

புல்லின்மேல் தூங்கும்
பனித்துளிபோல
அவள் இதழின்மேல்
எப்போதும் ஈரம்!

அந்த ஈர இதழ்கள்
அவன் இதயத்துடிப்பை
அதிகப்படுத்தின!

"எப்போது அவள்
எனக்கே
எனக்காகப் போகிறாள்?"
வினாவோடு பல இரவுகள்
விழித்துக்கிடந்தான்!

வெற்றிக்கனவுகளோடு
கைகோர்த்து திரிந்தவன்
காதல் கனவில்
கவிழ்ந்து கிடந்தான்!

'ஜோஸபைன்'
அதுதான் அவளது
மதுப்பெயர்!

'உச்சரிக்கும் போதெல்லாம்
ஊற்சாகம் ஊறுகிறதே!'
நெப்போலியனுக்குள்
ஆச்சரியம் ராச்சியம்
நடத்தியது!

ஜோஸபைன்
மங்கையின் பெயர்
மந்திரச் சொல்லானது!

கனவுகளோடு
எத்தனைநாள் காலம் கடத்துவது?

ஒரு நாள் அவளோடு
தத்தித் தத்தி
உரையாட ஆரம்பித்து
பொத்தி வைத்த
காதலை பிரகடனப்படுத்தினான்!

"மாவீரன் நெப்போலியனுக்கு
எதிரிகளின்
இரத்தம்தான் பிடிக்கும்
என்று கேள்விப்பட்டிருக்கிறேன்,
ஒரு பெண்ணின்
இதயமும் பிடிக்கும்
என்று இப்போதுதான்
அறிந்து கொள்கிறேன்!"

சொல்ல நினைத்ததை
கூறாமல்
உள்ளேயே நினைத்தாள்!

ஓரக் கண்ணால்
அவனை உண்டாள்!

"சம்மதமா?"
நெப்போலியனுக்கு அவசரம்.

"எதற்கு?"
அவளுக்கு விஷமம்!

"இதயத்தை
இடம் மாற்றிக் கொள்வதற்கு!"

"அது முடியாது!"
என்றாள் உறுதியாக!

வானம் இடிந்தது
போலிருந்தது
நெப்போலியனுக்கு.

"ஏன்... ஏன்
முடியாது?"
உதடு துடிக்க கேட்டான்!

"இதயங்கள் தாமாகவே
இடம்மாறிவிட்டனவே"
என்றாள் கண்களை
சரித்து பார்த்தபடி!

எதிரியின் கோட்டை
அகப்பட்டபோதுகூட
கிடைத்திராத சந்தோசம்
நெப்போலியனுக்கு!

கையோடு கை
சேர்த்தான்!

உள்ளே சட்டென்று
உஷ்ணம் பரவியது!

இதமாக தழுவிக்கொண்டான்
இதழ்கள் அருகிலிருந்தன!

'இத்தனை மெல்லிய
இதழ்கள்
என் உதடுகள் பட்டு
நொந்துபோகாதா?'

நெப்போலியன்
சந்தேகித்தான்!

தலைகள்
உருளும்போதே
கலங்காத வீரன்
காதலியின்
இதழ்கள் நோகுமோ
என்று கலங்கினான்!

தன் விரல் ஒன்றால்
பட்டும் படாமல்
பூ இதழ்களை
மேலும் கீழுமாய்
வருடிப் பார்த்தான்!

அவளுக்கோ
உஷ்ணம் உச்சியில் சுட்டது.
"ஆயத்தப்படுத்திவிட்டு
பாதியில் நிறுத்திக்கொண்டு
என்ன யோசனை?"

எடுத்துக் கொள்
என்றன இதழ்கள்!

என்னைப்பார்
என்றன எழில்கள்!

இறுக்கிக்கொள்
என்றது மேனி!

தொடு போரை
என்றது மனம்!

கொடு உன்னை
என்றது ஆசை!

இது ஏதும் அறியாமல்
நெப்போலியன்
பூவிலிலும் மெல்லிய
பூங்கனியை
கையாள்வது எப்படி
என்று கவலைப்பட்டு
காலம் தாழ்த்தினான்!

"ஆரம்பியுங்கள்
பாடத்தை" என்று
அவளாகக் கூறவோ முடியும்?

"என்ன யோசனை?"
என்றாள்.

"நீ சிறகுகள் இல்லாத
வான தேவதையோ?
நீ இறக்கைகள் இல்லாத
கானமயிலோ?

அல்லது மனிதப்
பெண்தானோ?
மயங்குது நெஞ்சம்
அதனால் உன்னைக்கூட
தயங்குது நெஞ்சம்!"

மயங்கி நிற்கிறான்
மாபெரும் வீரன்!
அவளுக்கு பெருமை
தாங்கவில்லை!

அவன் தயக்கம்போக்க
அவளே அணைத்தாள்!
மயக்கம் கலைத்தாள்

நெப்போலியன் போன்ற
காதலர் மயக்கம்
சகஜம் என்கிறார்
திருவள்ளுவர்:

"அணங்குசொல் ஆய்மயில் கொல்லோ
-கனங்குழை
மாதர்சொல் மாலும் என் நெஞ்சு"

அதிகாரம்: 109-குறள்-1081

இலக்கிய நயம்

தருவது
ரசிகன்

## சிந்தியா பதில்கள்

போடுகிறார்கள் வேஷம்! இது பழக்க தோஷம்!

* உலகில் மிகக் கஷ்டமான காரியம் எது?

பி.தர்மரத்தினம், மட்டக்களப்பு.

அது அவரவர் சூழலைப் பொறுத்து அமையும். உதாரணத்திற்கு ஒரு குட்டிக் கதை

பாதி வழுக்கையாக இருந்த ஒருத்தர் சலூனுக்குப் போனார்.

"எனக்கு முடி வெட்ட எவ்வளவு?" என்று கேட்டார்.

"மற்றவர்களுக்கு 50 ரூபாய். உங்களுக்கு 75 ரூபாய்" என்றார் சலூன்காரர்.

"என்ன இது அநியாயமாக இருக்கிறது. என் தலையில் முடி குறைவாக இருப்பதால் மற்றவர்களைவிட குறைவாக அல்லவா வசூலிக்க வேண்டும்?" என்றார் அவர்.

அதற்கு சலூன்காரர்:

"மற்றவர்களுக்கு சுலபமாக முடி வெட்டி விடுவேன். ஆனால் உங்கள் தலையில் முடிகளைத் தேடி வெட்ட அதிக நேரம் எடுக்கும். அதற்காகத்தான் 25 ரூபாய் அதிகம்!" என்றார்.

* சுயாதீன தொலைக்காட்சியில் 'மை இந்தியா' என்றொரு படம் போட்டார்களே. அப்படி அதில் என்ன இருக்கிறது?

செல்வி எம்.பதுறுனிஸா, மருதானை.

அதில் என்ன இருக்கிறதோ இல்லையோ, அதனை சிபாரிசு செய்தவர்களுக்கு மூளையில் மசாலாவே இல்லை என்பது உறுதி.



'சிம்மராசி' படத்தில் சரத்குமார்-குஷ்பு

* பெண்களைக் கிண்டல் செய்யும் ஜோக்குகள் இப்போதும் சில பத்திரிகைகளில் வருகிறதே?

எம். ஆமிஷா, கொழும்பு-10.

பத்திரிகைகளில் மட்டுமல்ல, வானொலிகளில் கூட அவ்வாறான ஜோக்குகள் கேட்கின்றன.

நாட்டின் ஒரு பகுதியில் கள நிலவரத்தையே தீர்மானிக்கும் திறனை பெண்கள் நிரூபித்து வருகின்றனர். இன்னமும் பெண் என்றால் பேதை என்றும், நகை, உடை மோகி என்றும் தங்கள் அறிவிலித்தனத்தை ஆரவாரமாக சிலர் பிரகடனப்படுத்தி வருகின்றனர். இவ்வாறான ஜோக்குகளுக்கு பெண்களே சிரிப்பதுதான் அநியாயம்!

தமிழர்களை அசடுகளாகச் சித்தரிக்கும் சிங்கள நாடகங்களைக் கண்டு கொதிக்கிறோம் அல்லவா? அதுபோலவே பெண்களை அசடுகளாக சித்தரிக்கும் நாடகங்களையும் கண்டிக்க வேண்டும். இரண்டுமே மேலாதிக்க வக்கிர சிந்தனைதான்!

* தமிழில் புதிய வானொலிகள் பல வந்து கொண்டிருக்கின்றனவே?

செல்வி இ.ராஜேஸ்வரி, கொழும்பு-13.

வரட்டுமேன்! அலைவரிசை எங்கும் தேமதுரத் தமிழோசை தரட்டுமேன்!

* திருட்டுக்கள் யாழ்ப்பாணத்தில் அதிகமாகி வருகிறதாமே?

சி.கனேஸ், வவுனியா.

இரவு நேரத்தில் ஒருவர் வழிப் பயணம் சென்று கொண்டிருந்தார். அப்போது திடீர் என்று பத்துப்பேர் வழிமறித்து அவரிடம் இருந்த பொருட்கள் எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டனர்.

பறிகொடுத்தவர் நேராக மன்னரிடம் சென்றார்.

"மகாராஜா! பகலில் நீங்களும், இரவில் திருடர்களும் இந்த நாட்டை ஆள்கிறீர்கள் போலிருக்கிறது!" என்று கூறினார்.

மக்களை மன்னன் பிழிந்தெடுப்பதையும் சந்தடி சாக்கில் சொல்லிக்காட்டிவிட்டார்.

யாழில் பகலில் சுற்றி வளைப்புகள்-சோதனைகள்! இரவில் திருடர் பயம்! தொல்லைகள்!

* சிந்தியா! சில பெரியவர்கள் குழந்தைகள் போல நடந்து கொள்கிறார்களே?

திருமதி கா.தனச்செல்வி, வவுனியா.

சமீபத்தில் படித்த சிந்தனை முத்து இதா

"முதிய மனிதர்கள் உண்மையில் மறுபடியும் பிறந்துள்ள குழந்தைகள். அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அவர்களது குழந்தைகளின் கடமையாகும்!"

* சமீபத்தில் அரசால் கூறப்பட்ட ஸ்கோர்கள் பற்றி உமது கருத்து என்ன?

எம்.திரவியநாதன், மட்டக்களப்பு.

உடல்களை வாங்கி அவற்றை உயிர்த்தெழச் செய்யும் வித்தையை எங்கே கற்றார்கள் என்ற வியப்பே இன்னமும் போகவில்லை. கருத்து சொல்லக் கேட்கிறீரே!

* இந்தியாவில் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்று பூமிக்குள் இறங்கிவிட்டதாமே?

செல்வி கே.இராதா, பதுளை.

கீழ்த்தளம் இறங்கிவிட்டது. தரையமைப்பைப் பார்க்காமல் கட்டியதால் வந்த வினை!

அடுக்குமாடிக் கட்டட விலைகள் இறங்காதா என்று மக்கள் ஏங்குகிறார்கள்; விலை ஏறுகிறது., கட்டடம் இறங்குகிறது!

* முரசுக்கு அனுப்பும் கதைகளைத் திருப்பி அனுப்ப மாட்டீர்களா?

பி.ஜெயா, கொழும்பு-08.

நண்பர்: உங்கள் கதை திரும்பி வந்ததுக்காகவா இத்தனை கவலைப்படுகிறீர்கள்?

அவர்: இல்லை, என் கதையை 'பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்' என்று ஆசிரியர் கவலைப்படுவதை நினைக்கும் போது ரொம்ப வருத்தமாக இருக்கு.

(இப்படி நீங்கள் வருத்தப்படக்கூடாதே என்பதற்காகத்தான்)



விஜய்

* நடிகர் விஜய் தொடர்ந்து வெற்றிபெறும் மர்மம் என்ன?

பி.ரெஜினா, அவிசாவளை.

மிகக்கவனமான பாத்திரத் தேர்வு. அகலக்கால் வைக்காமல் நிதானமாக படங்களை ஒப்புக்கொள்ளும் நேர்த்தி! (உங்களுக்காக குட்டி விஜய்யின் கெட்டிக்கார தோற்றத்தைத் தருகிறோம்)

* சிந்தியா! தீபாவளிக்கு கலக்கப்போகும் படங்கள் எவையோ?

கு.ரங்கநாதன், திருமலை.

பிரபுவின் 'என் உயிர் நீதானே', சத்யராஜின் 'பொண்ணு வீட்டுக்காரன்', கார்த்திக்கின் 'சின்னராஜா', முரளியின் 'தேசிய கீதம்', சரத்குமாரின் 'சிம்மராசி', பார்த்திபனின் 'புதுமைப்பித்தன்'. எது முதலிடம் என்பது பந்தயம் ஆரம்பமாகி சூடு பிடித்த பின்னர்தான் தெரியும்!

* தீர்வுப் பொதி செல்லாக்காசு என்று அமைச்சர் அஷ்ரப் கூறியுள்ளாரே?

வி.சர்வானந்தன், மன்னார்.

தாமதமான கண்டுபிடிப்பு. ஆனால் இதைக் கூறக்கூட தமிழ்க் கட்சிகள் தயாராக இல்லையென்பதால் அமைச்சரைப் பாராட்டலாம்!

* சிந்தியா! வெண் தாமரை இயக்கம் என்ன செய்கிறது?

பா.சோதி, கொழும்பு-09.

அரசுக்கும், படைகளுக்கும் நற்பணி செய்வதே அதன் கடன்! செம்மணி பற்றி மூச்! யாழில் காணாமல்போனோர் கதி பற்றி கதையே இல்லை!

* செம்மணி புதைகுழி விவகாரத்தில் அரசின் மெத்தனப் போக்கை கூட்டணி கண்டித்துள்ளதே?

ஜெ.ராசரத்தினம், திருமலை.

காணாமல் போனோருக்கு கமிஷன் போடுவதாக கடந்த ஆண்டு இறுதியில் கூட்டணியிடமும், ஈ.பி.டி.பி.யிடமும் கூறியவர் ஜனாதிபதி. செம்மணி குழிகளை உடன் தோண்டுவதாக மூன்று மாதங்களுக்கு முன்னர் இதே கட்சிகளிடம் கூறியவர் ஜனாதிபதி. அப்படியிருக்க பொதுவாக அரசுமீது கண்டனம் தொடுத்திருப்பதில் இருந்து என்ன தெரிகிறது! அம்மையாருடன் நேசம். ஆனால்

## ஸ்போர்ட்ஸ்

### மோசமான தோல்வி

ஸிம்பாப்வே அணியுடனான டெஸ்டில் இந்தியா 61 ஓட்டங்களால் மோசமான தோல்வியைத் தழுவியது. இந்த டெஸ்ட் போட்டியின்போது, இந்திய சுழற்பந்து வீச்சாளர் 200 விக்கெட்டுக்களை வீழ்த்திய 4வது இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். உலக அளவில் இவருக்கு முன் 34 வீரர்கள் டெஸ்ட் போட்டிகளில் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளனர்.

இந்த 34 பேரில் 9 அவுஸ்திரேலிய வீரர்களும், 8 மேற்கிந்தியத் தீவு வீரர்களும், 7 இங்கிலாந்து வீரர்களும், பாகிஸ்தான் இந்திய வீரர்கள் தலா 4 பேரும், நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து தலா ஒருவரும் அடங்குவர்.

200க்கும் மேற்பட்ட டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழத்தியுள்ள 34 பேரில் கும்ப்ளே உட்பட 11 சுழற்பந்து வீச்சாளர்கள். இந்தச் சுற்றுப் பயணத்தில் ஸிம்பாப்வேயுடன் நடைபெற்ற ஒரு நாள் போட்டிகளின்போது கும்ப்ளே 200 விக்கெட்டுக்களை வீழ்த்தி அண்மையில் சாதனை படைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய அளவில் 200க்கும் மேற்பட்ட டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழத்தியவர்களின் விபரம் இதோ:

கபில்தேவ்
(134 போட்டிகளில் 434 விக்கெட்டுக்கள்),
பிஷன் சிங் பேடி
(67 போட்டிகளில் 266 விக்கெட்டுக்கள்),
பி.சந்திரசேகர்
(58 போட்டிகளில் 242 விக்கெட்டுக்கள்),
அனில் கும்ப்ளே
(47 போட்டிகளில் 204 விக்கெட்டுக்கள்)

### பந்து வீச பயிற்சி

உலகில் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவரான, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் ஆட்டக்காரர் சேர்.கேரி ஃபீல்ட் சோபர்ஸ் இந்தியாவில் சுழற்பந்து வீச்சாளர்களுக்குப் பயிற்சியளிக்கிறார்.

சென்னையில் உள்ள மேக் ஸ்போர்ட்ஸ் பவுண்டேஷன் என்ற சுழற்பந்து வீச்சாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிறுவனத்தில் பயிற்சியளிக்கவே சோபர்ஸ் வந்திருக்கிறார். 13 வயதில் இருந்து 19 வயதிற்குட்பட்ட வீரர்களுக்கே இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

சோபர்ஸின் அனுபவமும் கைதேர்ந்த அணுகுமுறையும் சுழற்பந்து வீச்சில் பயிற்சி பெறும் இளம் வீரர்களின் திறமையை வெகுவாகக் கூட்டும் என கிரிக்கெட் வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

### மினி உலகக் கோப்பை

இம்மாதம் 24ம் திகதி டாக்காவில் நடைபெறவுள்ள வில்ஸ் மினி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் 9 நாடுகள் கலந்துகொள்கின்றன. இப்போட்டிகளின் போது வழங்கப்படும் மொத்தப் பரிசுத் தொகை 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஆகும்.

கோப்பையை வெல்லும் அணிக்கு 69 இலட்சம் ரூபா பரிசாகக் கிடைக்கும். இரண்டாமிடம் பெறும் அணிக்கு 41 இலட்சம் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

அரையிறுதியில் தோல்வியுறும் இரு அணிகளுக்கும் தலா 20 இலட்சம் ரூபாய் பரிசாகக் கிடைக்கும். மேலும் போட்டியில் பங்கேற்கும் ஒவ்வொரு அணிகளுக்கும் தலா 10 இலட்சம் ரூபாய் பரிசாக வழங்கப்படும்.

இந்த மினி உலகக் கோப்பை போட்டிகள் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் நிதி வளர்ச்சிக்காக நடத்தப்படுகிறது.

### இலஞ்சம் வாங்கினாரா?

நான்கு வருடங்களுக்கு முன் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்தபோது- அப்போது பாகிஸ்தான் அணித்தலைவராக இருந்த சலீம் மாலிக், அவுஸ்திரேலிய அணியினருக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றதாக ஒரு குற்றச்சாட்டு இருந்தது.

இதைப் பற்றி விசாரிக்க நீதிபதி மாலிக் முகம்மது கையூம் பாகிஸ்தான் அரசால் நியமிக்கப்பட்டார். தற்போது பாகிஸ்தானில் விளையாடி வரும் அவுஸ்திரேலிய அணியின் கேப்டன் மார்க்டெய்லர், மார்க்வோவ் ஆகியோர் இந்த நீதிபதியிடம் சாட்சியம் அளித்துள்ளனர்.

"4 ஆண்டுகளுக்கு முன், பாகிஸ்தான் அணியின் கேப்டனாக இருந்த சலீம் மாலிக் டெஸ்ட் போட்டி ஒன்றின்போது, அவுஸ்திரேலிய அணியினருக்கு, மோசமாக விளையாடும்படி வற்புறுத்தி இலஞ்சம் கொடுக்க முயன்றார். இது குறித்து நான் அப்போதே சொல்லியிருக்கிறேன். இந்தக் குற்றச்சாட்டை இப்போது மீண்டும் வலியுறுத்துகிறேன்!" என்று கூறினார் மார்க் டெய்லர்.

இதையே மார்க் வோவும் உறுதிப்படுத்தினார். குற்றச்சாட்டுக்குள்ளான சலீம் மாலிக்கும் இந்த விசாரணையின்போது உடனிருந்தார்.



www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 31

ஆண்டவருடைய திருப்பெயரைப் போற்றி வாழ்பவர்களுக்கு என்றுமே ஆபத்துகள் அணுகுவதில்லை. அவர்களை எத்தகைய துன்பமும் தீண்டுவதில்லை. அவ்வப்போது சிறியளவில் சோதனைகள் தோன்றவே செய்யும். அவையெல்லாம் ஆண்டவரின் அருளினாலேயே அகன்று போய்விடும்.

நகோமியும் அவருடைய மருமகளான ரூத்தும் ஆண்டவரை நம்பியே பெத்லகேம் வந்து சேர்ந்தனர். இளமையும்அழகும் நிரம்பிய தன் மருமகள் ரூத்துக்கு ஒரு நல்ல வாழ்க்கையைத் தேடி, அவளைக் குடியும் குடித்தனமுமாகப் பார்க்க வேண்டுமே என்று நகோமி ஏங்கினார். இறைவனிடமும் கோரிக்கை விடுத்தார். இதன்பயனாக நகோமியின் கணவர் எலிமலேக்குவின் உறவினரான போவாசுவின் தயவு ரூத்துக்கும் அவள் மூலம் நகோமிக்கும் கிடைத்தது. போவாசுவையே தன் மருமகளின் கணவனாக்கினால் நன்றாக இருக்கும் என்று நகோமி கருதினார். அதற்கானதோர் உபாயத்தையும் தன் மருமகளிடம் கூறினார். தன் மாமியின் சொற்படி ரூத் நடந்தாள்.

போவாசு தனவந்தராயினும் மிக நல்ல சுபாவமுடையவர். தான் சார்ந்த குடும்பப் பண்புகளுக்கு எத்தகைய இழுக்கும் நேராதபடி நடந்து வருபவர். எலிமலேக்கின் வம்சம் சிதைந்துவிடாமல் வாரிசுகள் தோன்றுவதற்கு மன உறுதிகொண்ட



## இஸ்ரயேலரின் இறுதி வழிகாட்டி

ரூத்தின் கருத்தை மெச்சினார். தானே ரூத்தைத் தன் மனைவியாக ஏற்க அவர் ஆரம்பத்தில் முற்படவில்லை. எலிமலேக்கு குடும்பத்தின் வம்ச விருத்திக்கு உதவுவதற்கு தன்னைவிட நெருங்கிய ஒருத்தரை போவாசு தன்னிடம் அழைத்தார். பெத்லகேமில் எலிமலேக்குக்குச் சொந்தமான நிலம் இருப்பதாகவும் அந்நிலத்தை நகோமி விற்கவிருப்பதாகவும் அதனை வாங்கும்படியும் அந்நபரிடம் போவாசு கேட்டார். அந்த நபர் காணியைப் பெறுவதற்கு முன்வந்த போதிலும், அதற்காக போவாசு விதித்த நிபந்தனையை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

காணியைக் கொள்முதல் செய்வதானால், எலிமலேக்குவின் காலஞ்சென்ற மகனான மக்லோனின் கைம்பெண் ரூத்தையும் மனைவியாக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை. இதற்கு அந்நபர் உடன்படாமையினால், ஊர்ப்பெரியவர்களின் சம்மதத்துடன் ரூத்தை போவாசு தன் மனைவியாக ஏற்றுக் கொண்டார்.

போவாசு-ரூத் இருவரும் மனமொத்த தம்பதியினராக வாழ்ந்தனர். சில காலத்தில் இருவருக்கும் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. ஓபேது என்று பெயரிட்டழைத்தனர். தமது வம்சம் வாழையடிவாழையாக வாழ்வதற்கு ஒரு வாரிசு கிடைத்த மகிழ்ச்சியில் நகோமி பூரித்துப் போனார். தன் பேரனை எப்போதும் அணைத்தபடி ஆனந்தக் கூத்தாடினாள்.

### சாமுவேல் தோற்றம்

இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து மோசேயால் கானான் தேசத்துக்கு அழைத்து வரப்பட்டதிலிருந்து, அம்மக்கள் நீதித்தலைவர்களாலேயே வழி நடத்தப்பட்டு வந்தனர். எகிப்தில் பார்வோன் என்ற பெயரில் மன்னராட்சி தொடர்ந்து வந்தது. ஆனால் இஸ்ரயேல் மக்களிடம் அம்முறை இருக்கவில்லை. ஆண்டவரின் பூரணமான அநுக்கிரகம் பெற்றவர்கள் வழிகாட்டிகளாக விளங்கிவந்தனர். இருந்தபோதும் இம்மக்களில் பலர் அடிக்கடி வழி தவறி ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கட்டுப்படாமல் அவரின் கோபத்துக்குள்ளாகி, பிற இனத்தவர்களின் அடிமைகளாகியவண்ணமிருந்தனர். அவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து மனம் திரும்பும்போது, ஆண்டவரின் ஆவியால் நிரப்பப்பெற்ற வழிகாட்டிகளால் விடுதலை அடைந்து மகிழ்ச்சியாக இருப்பர்.

இஸ்ரயேல் மக்களின் உண்மையான வழிகாட்டியாக ஆண்டவரே இருந்தபோதும், தம்மத்தியில் எப்போதும் இருந்து ஆட்சி செய்யக்கூடிய அரசர் இருக்க வேண்டும் என்ற எண்ணம் அம்மக்களிடம் தோன்றியது. இத்தகைய எண்ணம் தோன்றிய காலகட்டத்தில்தான் இஸ்ரயேலின் இறுதி நீதித்தலைவரான சாமுவேல் இருந்தார். இவர் எல்கானா என்பவரின் இருமனைவியரின் ஒரு மனைவியான அன்னாவுக்குப் பிறந்தவர்.

எல்கானாவின் ஒரு மனைவி பெனின்னாவுக்குப் பலகுழந்தைகள் இருந்தன. ஆனால் அன்னாவுக்கு நீண்ட காலமாகக் குழந்தைகள் பிறக்கவில்லை. இதனால் அன்னாவை மலடி என்று பலரும் இழிவாகப் பேசினார்கள். பெனின்னாவும் அன்னாவை மதிப்பதில்லை. குழந்தைப் பேறற்றமையினால் பல வகையான இம்சைகளுக்கு ஆளாக்கப்பட்டார். கணவன் எல்கானாவால் பெரிதும் விரும்பப்பட்டவர் அன்னா. அத்துடன் சகல விதத்திலும் தூய்மையாகவே வாழ்ந்தவர்.

ஆண்டவரின் ஆலயத்தின் குருவாகவிருந்த ஏலி என்பவரிடம் சென்று அன்னா தன் குறைகளைக் கூறினார். ஆண்டவரைத் துதித்து, தனக்கு ஓர் ஆண் மகவைத் தரும்படி மன்றாடினாள். தனக்கு ஓர் ஆண் மகன் பிறந்தால், அவன் பால் குடி மறந்ததும் ஆண்டவரின் தொண்டுக்காக அவனை வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்பதாக வேண்டிக்கொண்டார்.

அன்னா கருவுற்றார்; அவளுடைய வேண்டுதலின்படி ஆண் குழந்தையே பிறந்தது. அக்குழந்தை பால் குடிமறந்ததும் நேர்த்தியின்படி அவனை குரு ஏலியிடம் கொண்டு வந்து சேர்த்தார்கள். அப்பையனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டனர். சாமுவேல் ஆண்டவரின் பணியிலேயே தன் காலத்தைச் செலவிட்டார். ஆனால் குரு ஏலியின் பிள்ளைகள் ஆண்டவருக்கு அடுக்காத செயல்களிலீடுபட்டு அடாத்தான காரியங்களைச் செய்து, ஆண்டவரின் சாபத்துக்குள்ளாயினர். அவர்கள் செய்த பாபச் செயல்களால் குரு ஏலியும் இஸ்ரயேல் மக்களும் பெரும் தண்டனைக்குள்ளானார்கள்.

ஆண்டவரின் அடியாளான குரு ஏலி, சிறுவன் சாமுவேலுக்கு இறைபணிக்கான சகல போதனைகளையும் செய்தார். ஆண்டவரின் அநுக்கிரகத்தால் உதித்தவன் என்பதனால் சிறந்த மதி நுட்பம் மிக்கவராக வளரலானார். குரு ஏலியால் தமது இரு புதல்வர்களான ஒப்னி மற்றும் பினகாசு ஆகிய இருவரையும் நல்லபடி வளர்க்க முடியவில்லை. அவர்கள் கடவுளின் திருமுன் நிலையிலேயே பல கொடிய செயல்களைச் செய்தனர். அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்துவதற்கும் ஏலி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் ஆண்டவர் குரு ஏலிமீதும் அவருடைய குடும்பத் தவர்மீதும் கடும் கோபமுற்றிருந்தார்.

### ஆண்டவரின் அழைப்பு

ஆண்டவரின் பேழை வைக்கப்பட்டிருந்த இடத்தில் சிறுவன் சாமுவேல் படுப்பது வழக்கம். ஓரிரவு வழக்கம் போல் சாமுவேல் படுத்திருந்தார். விளக்கும் எரிந்து கொண்டிருந்தது. அப்போது ஆண்டவர் "சாமுவேல்... சாமுவேல்...!" என்று அழைத்தார். தன் குருவான ஏலிதான் தன்னை அழைப்பதாக சாமுவேல் கருதினார். இறுதியில் அது ஆண்டவரின் குரல்தான் என்று அறிந்து, எழுந்து பயபக்தியுடன் இறை ஒலியைக் கேட்டார். குரு ஏலியின் புதல்வர்கள் தமக்கு விரோதமான செயல்களிலீடுபட்டிருப்பதனால், அவர்களைத் தான் தண்டிக்கப் போவதாகக் கூறினார். வேறு பல தகவல்களையும் ஆண்டவர் சாமுவேலிடம் தெரிவித்தார்.

இஸ்ரயேலர் மீது பெலிஸ்தியர் போர் தொடுத்து இஸ்ரயேலரை வெற்றி கொண்டனர். பல்லாயிரக்கணக்கில் மக்கள் மாண்டனர். இக்காலகட்டத்தில் ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழை இஸ்ரயேல் மக்களிடம் இருக்கவில்லை. சீலோ என்ற இடத்தில் இருந்தது. பெலிஸ்தியர் வசம் அப்பேழை இருந்தமையினால் அம்மக்கள் தொடர்ந்து பெரும் துன்பங்களையே எதிர்கொண்டனர்.

### கைமாறிய கடவுளின் பேழை

பெலிஸ்தியர் வசம் பேழை சென்றுவிட்டதை அறிந்து குரு ஏலியும் இறந்தார். அவர் இறக்கும்போது அவருடைய வயது தொண்ணூற்றெட்டு. அவருடைய புத்திரர்களும் இறந்தனர்.

உடன்படிக்கைப் பேழையை இஸ்ரயேல் மக்களிடம் அனுப்பி வைத்தால் பெலிஸ்தியரின் துயரங்கள் நீங்கிவிடும் என்று அவர்களுடைய அர்ச்சகர்கள் தெரிவித்தனர். இதற்கமைய இரு கறவை மாடுகள் பூட்டப்பட்ட ஒரு வண்டியில் கடவுளின் பேழையை வைத்து, பல்வேறு காணிக்கைப் பொருட்களையும் வைத்து அனுப்பிவைத்தனர். அப்பேழையைத் தாங்கிய வண்டியை மாடுகள் இரண்டும் தாமாகவே இழுத்துச் சென்று யோசுவாவின் சந்ததியினர் வாழ்ந்த பெத்சமேசு என்ற இடத்தை அடைந்தது. பின்னர் கிரியத்து எயரிம் ஆட்கள் பேழையை மீட்டுச் சென்று ஒரு குன்றின் மீதிருந்த ஒரு வீட்டில் வைத்து எல்யாசர் என்பவரைப் பாதுகாவலராக அமர்த்தினர்.

மீண்டும் படையெடுத்து வந்த பெலிஸ்தியரைத் தோற்கடித்து இஸ்ரயேல் மக்கள் வெற்றி பெற்றனர். சிறுவனாக இருந்த போதே ஆண்டவரின் அருள் வாக்கினைக் கேட்கும் அரும்பாக்கியம் பெற்றவரான சாமுவேல், மிஸ்பா என்ற இடத்தில் தங்கியிருந்து இஸ்ரயேல் மக்களை வழி நடத்தினார். அவருடைய வழிகாட்டலின்படி நடந்தமையினால் பெலிஸ்தியர் கைப்பற்றியிருந்த சகல பிரதேசங்களும் இஸ்ரயேலரிடம் வந்து சேர்ந்தன.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 29 விடை** ☛ தேனினும் இனியது எது? சிங்கத்திலும் வலியது எது?

**பரிசு பெறுவோர்:**

1. **சஜானா உதயபாலன்,** 14/25,பாரதி ஒழுங்கை, மட்டக்களப்பு.
2. **எஸ். ருசாந்தன்,** பது/பசறை த.ம.வி., பசறை.
3. **ஜீ. பிரவீணா,** வன்னியார் வீதி, கல்முனை-2.
4. **ஐ.எஃப். ஷாமிலா,** 303/1, தம்பிலவா, கல்-எலியா.
5. **ஆர். சரதீஸ்,** க/ கலாபொக்க த.வி., மடுல்கெல.

**திருமறை 31** வினா:- சாமுவேலின் தாய்-தந்தையர் பெயர்களைத் தருக?

ஒக்.24க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 31—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : இலங்கை கிரிக்கெட் அணி. |
| தொழில் | : கிண்ணங்களைக் கைப்பற்றுவது |
| உபதொழில் | : வரவேற்புகளில் பங்குகொள்வது |
| பொழுதுபோக்கு | : பயிற்சியாளர்களை மாற்றுவது. |
| சாதனை | : போர்வலியால் திணறும் நாட்டுக்கு தற்காலிக சந்தோசங்கள் தருவது! |
| வேதனை | : முன்னணி வீரர்களுக்கு வயதாகிக்கொண்டிருப்பது. |
| இலட்சியம் | : இன்னொரு உலகக் கிண்ணம். |



## கந்தசாமியும் முத்துத்தம்பியும்

**க.சா: செம்மணியில் குழி தோண்டத்தான் மறுத்தவை, பிளேன் விழுந்த இடத்தில் போய் சுழியோட அனுமதி கொடுக்க ஏன் இழுத்தடித்தவை?**

*மு.த: சுழி என்றது குழி என்று காதில் விழுந்திருக்கும். அதுதான் பொமிசன் கொடுக்க 'திங்' பண்ணியிருப்பினம்.*

**க.சா: விமானப் போக்குவரத்தை நிறுத்தும் விஷயத்திலை தமிழ்க்கட்சிக்காரர் சிலர் கடும் கொதிப்பில் இருக்கினம். ஏன் தெரியுமோ?**

*மு.த: அடுத்த தேர்தல் பிரசாரத்திற்கு பறந்து பத்திரமாக போய் இறங்கி வாக்கு கலெக்ட் பண்ணுறதுக்கும் ஏலாமல் போயிடுமல்லோ. அந்த யோசனைதானாக்கும்.*

**க.சா: அதேதான்! கப்பலில் போனால் நடுவழியில் வந்து நிற்பினம் என்று நினைக்கினமாம்.**

*மு.த: அரசு யாழ்ப்பாணத்தை பிடிச்சுப் போட்டு ஒழுங்கான போக்குவரத்துக்கு என்ன வசதி செய்தது? குறைந்த செலவில் கப்பல் ஓடவைக்கக்கூட முன்வரவில்லை. சண்டைக்காக போர்க் கப்பல்கள் வாங்கும் அரசாங்கம், பயணிகளுக்காக ஒரு கப்பல் வாங்கிவிட்டால் என்ன குறைந்தோ போகும்? அதைத் தட்டிக் கேட்காத கட்சிகள், விமானப் போக்குவரத்தில் பிரச்சனை எண்டதும், தங்களுக்கும் போய்வர முடியாமல் போகும் என்று புறுபுறுக்கத் தொடங்கியிருக்கினம்.*

**க.சா: விமானம் விட்டது தனியார். அதிலும் பல பக்கங்களால் பலர் பொசிப்பு கண்டவையாம்! அதுதான் கப்பல் விடாத இரகசியம் எண்டு கேள்வி. அரசாங்கம் குறைந்த செலவில் கப்பல் விட்டால், பிளேனில் போக ஆட்கள் இருக்காது. பிறகு கமிஷன்கள் கைமாறுவது எப்படி? ஹி.ஹி.ஹி.**

*மு.த: பொயிண்டான விஷயமே அதுதானே! பாராளுமன்றத்தில் படைவீரருக்கு அஞ்சலி நடத்தியிருக்கினமாம். எதிர்க் கட்சியின் தேசபக்தியைப் பார்த்தீரோ?*

**க.சா: எல்லாமே அரசியலாகுதே என்று சபாநாயகர் கவலைப்பட்டாராம்.**

*மு.த: யுத்தமே அரசியல் லாபத்துக்காகத்தான் அவிழ்த்துவிடப்பட்டிருக்குது என்பதை மறந்துபோய் கவலைப்பட்டிருக்கிறார். யுத்தம் ஆரம்பமானதும் அரசியல் இலாபத்தாலே, அஞ்சலி செய்ததும் அரசியல் இலாபத்தாலே. ஆராய்ந்துபார் மனக் கண்ணுக்குள்ளே!*

**க.சா: இந்த யுத்தத்தில் வெல்ல முடியாது. புலிகளுடன் பேசவேண்டும் என்றும் எதிர்க்கட்சி கூறுகிறது. பின்னர் ஏன் படையினருக்கு மட்டும் அஞ்சலி. தேவையற்ற யுத்தத்தில் பலியான சகல இன இளைஞர்கள், யுவதிகளுக்காகவும் என்று பொதுவாக செய்திருக்கலாமல்லோ?**

*மு.த: பிறகு தென்னிலங்கையில் யானைக் கட்சிக்கு புள்ளடி விழாது. பொல்லடிதான் விழும்.*

**க.சா: அப்படியானால் யுத்தத்தில் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் சாகிறதைப் பற்றி எதிர்க்கட்சிக்கும் 'நோ' அக்கறை?**

*மு.த: முட்டாள்! செந்தமிழ் மக்கள் சாவதை எண்ணி தென்னிலங்கை கட்சிகள் எப்போதடா அக்கறைப்பட்டிருக்கின்றன?*

**க.சா: பிறகு ஏன் எதிர்க்கட்சி பேச்சு**



**நடத்தச் சொல்லுகிறது?**

*மு.த: ஆனால் போர் வேண்டாம் என்று சொல்லவில்லைப் பார்த்தீரோ?*

**க.சா: ஏன் சொல்லவில்லை?**

*மு.த: அடுத்த முறை அவை ஆட்சிக்கு வந்தும் இதைத்தானே செய்யப்போகினம். இப்ப கூடாது எண்டு சொல்லிப் போட்டு பிறகு என்ன சொல்லுறது?!*

**க.ச: என்னதான் இருந்தாலும் எதிர்க்கட்சி தானே சில விஷயங்களை வெளியே கொண்டுவருகுது?**

*மு.த: அது எங்களில் உள்ள பாசத்தில் என்று நினைக்கவேண்டாம். இரண்டு பெரும்பான்மை இனக் கட்சிகளுக்குள் நடக்கும் அதிகாரப் போட்டியின் முரண்பாட்டாலும், மோதலாலும் பொட்டுக் கேடுகள் வெளியாகுது!*

**க.ச: அப்படி வெளியாகிறது நல்லதுதானே?**

*மு.த: மெத்த நல்லது! ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒன்றுபட்டால் எங்களுக்குத்தான் கேடு.*

**க.சா: ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்றுதானே படிச்சிருக்கிறம்?**

*மு.த: யார் ஒன்றுபட்டால்? என்பதுதான் கேள்வி.*

**க.சா: புரியுது! இப்ப கிளியர்! உந்தத் தமிழ்க்கட்சிகளுக்கு உது தெரியாதோ?**

*மு.த: ஏன் புரியாது? புரிந்தும் புரியாதது போல நடிக்கினம்! உவையை திருத்தவே முடியாது!*

**க.சா: அப்ப என்ன செய்யிறது?**

*மு.த: ஒரே ஒரு வேண்டுகோள் விடுக்கலாம்.*

**க.சா: என்ன வேண்டுகோள்?**

*மு.த: உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருங்கள்!*

**க.சா: அதெப்படி இருக்கிறது? அறிக்கை விட்டுக் கொண்டிருந்தால்தானே சனத்திற்கு பெயர் நினைவில் இருக்கும். பெயர் நினைவில் இருந்தால்தானே வாக்குக் கேட்டுப்போகும்போது எங்கேயோ கேட்ட பெயர்தான் என்று சனமும் நினைக்கும்.**

*மு.த: அப்ப, அறிக்கைகள் தொடரும் என்கிறீரோ?*

**க.சா: யா! கடைசிச் சொட்டு மை உள்ள வரை ஓயப்போவதில்லை! அறிக்கைகள் தொடரும்!**

## பேச்சாளர் பேரம்பலம்

செல்லாக்காக என்று அமைச்சர் ஒருவர் பொதியை விமர்சித்த, பின்னரும், பொல்லாப்பு ஏன் என்று பொதியை நாங்கள் மட்டும் போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பதாக நம்மீது தம்பிமார், தங்கைமார் கோபப்படாமல் இருக்குமாறும், அடுத்த தேர்தலின் பின்னர் நாம் வேறு முடிவு எடுத்து இன்று நடத்துவரும் சம்பவங்களை அப்போது கண்டிக்கத் தயங்கப் போவதில்லை, பொதியையும் அப்போது நிராகரிக்க அஞ்சப்போவதில்லை என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறோம்.



காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)





அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் [illegible] இரகசியம்! அதை எங்களது [illegible] நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331




# சாந்தம்

சாதாரண மக்களின் தோற்றத்திலேயே ஓவியங்களையும் சிற்பங்களையும் அமைக்கும் மறுமலர்ச்சிப்பாணி இத்தாலியில் 1300ம் ஆண்டுகளில் தோன்றியது. ஐரோப்பாவின் பல நாடுகளுக்கும் பரவியது. கி.பி 1300 முதல் 1600 வரையிலான 400 ஆண்டுகளை கலாசார மறுமலர்ச்சிக்காலம் என்று வரலாற்று வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

மறுமலர்ச்சி காலத்தில் (1505ம் ஆண்டு) ஓவியர் ரம்பியேலாலினால் பலகையில் எண்ணை வண்ணமாகத் தீட்டப்பட்ட மடோனா-இயேசுபாலன் ஓவியம் இது. இயற்கையான சூழலில், உயிரோட்டமுள்ள பாத்திரங்களாகக் காட்சி தருகின்றன.

அமெரிக்கத் தலை நகரான வாஷிங்டனிலுள்ள தேசிய காட்சிச்சாலையில் இந்த ஓவியம் வைக்கப்பட்டுள்ளது.





SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


காலத்துக்குக்காலம் இடம் விட்டு இடம் பெயர்ந்து வாழும் பறவைகளுள் நாரைக் கொக்குகளும் அடங்கும். இவை பெரும்பாலும் வடஆபிரிக்கா, ஐரோப்பா, ஆசியா போன்ற நாடுகளின் வடக்கேதான் வாழ்கின்றன. அந்நாடுகளில் பனிகாலம் தொடங்குவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியதும்- செப்டம்பர் மாத முடிவில் தென் மண்டல நாடுகளை நோக்கி இடம்பெயர்ந்து வந்து சேர்கின்றன.

பெரும்பாலான நாரைகள் தூய வெள்ளை நிறமுடையவையாகவே காணப்படுகின்றன. வடக்கு ஆசியாவில் சைபீரியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவைதான் தூய வெள்ளை நிறமுடையவை.

படத்தில் காணப்படும் நாரை வித்தியாசமானது. ஐரோப்பா, வட ஆபிரிக்கா நாடுகளில் காணப்படுபவை. இவற்றின் இறக்கைகளில் கறுப்பு இறகுகளும் காணப்படும்.

# மெத்து மெத்து

வண்ண வண்ணப் பூக்கள் போன்று கோலம் காட்டும் இவை பூக்களே அல்ல; உயிருள்ள பிராணிகள் என்றால் நம்பமாட்டீர்கள்! கடற் பஞ்சு (கிளிஞ்சில்) அல்லது கடற்பாசி என்ற உயிரினம்தான் இவை; கடலின் அடியிலும் வேறு நீர் நிலைகளின் அடியிலும் வாழ்பவை. நீரில் மிதந்து திரியும் சிறு பூச்சிகள் சிறு தூசிகள் மற்றும் நுண் தாவரங்களை உண்டு வாழும் இப்பிராணிகள் பெரும்பாலும் அங்குமிங்கும் நடமாடாமல் நீரின் அடிமட்டத்திலுள்ள கற்பாறைகளில் ஒட்டியவண்ணம் சீவிக்கின்றன.

கடற் பாசியில் நூற்றுக்கணக்கான வகைகள் காணப்படுகின்றன. சில நன்நீரிலும் வாழ்கின்றன.

கடற்பாசிகளின் இனப் பெருக்கம் விசித்திரமானது. பெரும்பாலான இப்பாசி இனங்களில் ஒரே உயிரியில் ஆண் - பெண் இரு பாலுக்கான பாகங்கள் இருக்கும். ஒரு பக்கத்தில் ஆண் ஜீவ அணு உற்பத்தியாகி மறுபக்கத்தில் உற்பத்தியாகும் பெண் முட்டையுடன்- நீரோட்டத்தின் மூலம் இணையும்.

வேறோரினத்தின் ஆண் பஞ்சு வேறாகவும் பெண் பஞ்சு வேறாகவும் இருக்கும். இவற்றிலிருந்து பிறப்பிக்கப்படும் ஜீவ அணுவும் முட்டையும் நீரோட்டத்தினால் தான் ஒன்று சேர்கின்றன. பின்னர் முட்டை நிலையில் இவை மிதந்து ஓரிரு நாட்களில் புழுவாக வெளிவரும்.

நீரிலேயே ஓடித்திரியும் இப்புழு உரிய நேரம் வந்ததும் நீரின் அடியில், வசதியான பாறை ஒன்றில் போய் ஒட்டிக் கொண்டு வளர ஆரம்பிக்கும்.










படம் ஒன்று: நாவல் வர்ண குவளை வடிவப் பஞ்சு.
படம் இரண்டு: கொல்ஃப் பந்து போன்ற பாசி.
படம் மூன்று: சிவப்பு தாடி வடிவப் பஞ்சு.
படம் நான்கு: நாவல் நிற பூச்சாடி வடிவப் பஞ்சு.

# தனிரகம்



ஏனைய தோற்றங்கள் நம் நாடுகளுக்கு வந்து சேரும் நாரைகளின் தன்மையினையே ஒத்திருக்கும். நீளமான ரோஸ் நிறக்கால்கள், நீலமான சிவப்புச் சொண்டுகள் நாரை இனங்கள் அனைத்துக்கும் பொதுவான அம்சங்களாகும்.

நாரைகளில் 17 வகையானவை இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவையெல்லாமே மீன்களைப் பெரிதும் விரும்பி உணவாகக் கொள்ளும். தவளை, ஊரும் சிறிய பிராணிகள், எலிகள் போன்றவற்றையும் தின்றுவிடும்.

ஒரு மீட்டர் உயரம்வரை வளரும் நாரை சிறகுகளை விரித்தால் அவை ஒரு தொங்கலிலிருந்து மறு நுனிவரை 2 மீட்டர்வரை இருக்கும்.

# மலரும் மலரும்

மலர்களை விரும்பாத மனிதரே இல்லை எனலாம். பார்ப்போர் மனதைப் பறித்தெடுக்கும் பாணியில் இயற்கை மலர்களுக்கு அழகைப் பொழிந்துள்ளது.

மரஞ்செடி கொடிகள் தங்களுடைய இனத்தை விருத்தி செய்வதற்காகவே மலர்களை உருவாக்குகின்றன. உள்ளே இனிய தேனை வைத்து, வெளியே அழகிய வண்ணத் தோற்றத்தைக் காட்டி பூச்சிகளைக் கவர்ந்திழுக்கின்றன. வண்ணத்தாலும் சுகமான மணத்தினாலும் கவரப்பட்ட தேனீ போன்ற பூச்சிகள் தேனைக் குடிக்க மலர்களைமொய்க்கும்போது பூக்களிலுள்ள மகரந்தம் இடம்மாறி கனி உருவாக்கிறது. கனியின் உள்ளே இருக்கும் விதை குறிப்பிட்ட மரத்தின் வம்ச விருத்திக்கு வித்திடுகிறது.

அழகிய பூக்கள் ஆண்டவனின் ஆராதனைக்கு உதவுகின்றன. அழகிகளின் கூந்தலுக்கும் எழிலூட்டுகின்றன.

பசுபிக் பெருங்கடலிலுள்ள ஹவாய்த் தீவின் கன்னி ஒருத்தியின் கழுத்திலும் கைகளிலும் தவழும் இப்பூக்கள் எம் நாட்டிலும் பெருவாரியாகக் காணப்படும் அலரிப்பூக்கள். மலரின் கையில் மலர்கள்.



# மிதக்கும் சந்தை

உலகெங்கும் சந்தைகள் இருக்கின்றன. ஆனால் இது வித்தியாசமான சந்தை. மிதக்கும் சந்தை என்று பெயர். தாய்லாந்தில் தான் இச் சந்தை இருக்கிறது.

தாய்லாந்தின் தலைநகரான பாங்ஹொக்கின் பெரும்பாலான பகுதி நீர்பரப்புதான். அந்த நீர் மட்டத்தின் மேல் மரத்தால் அமைக்கப்பட்ட வீடுகளில் மக்கள் வசிக்கின்றனர். வாகனப் போக்குவரத்துக்கள் தோணிகள் மூலமே நடைபெறும்.

சந்தையும் நீரின் மடியிலேயே கூடிவிடும். மிதந்து கொண்டிருக்கும் தோணிகளில் ஏறியும் பொருட்களை வாங்கலாம். தங்கள் வீடுகளில் நின்றபடியும் வாங்கலாம்.

இந்த 'மிதக்கும் சந்தை' நேரில் காணும்போது படு ஜோராக இருக்கும். இதனைக் காண்பதற்காக உல்லாசப் பயணிகள் முண்டியடிப்பார்களாம்.



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி கீர்த்திகா ஸ்ரீதரன் 17.09.1998

மானிப்பாய் சங்குவேலியைச் சேர்ந்த ஸ்ரீதரன்-வாசுகி தம்பதியினரின் செல்வப் புதல்வி செல்வி கீர்த்திகா தனது முதலாவது பிறந்த நாளை ஜேர்மனியின் ஹம்பேக் நகரில் உள்ள தமது இல்லத்தில் தனது அண்ணா சந்தீப் உடன் வெகு விமரிசையாக 17.09.1998 அன்று கொண்டாடினார். செல்வி கீர்த்திகாவை அன்பு அப்பா-அம்மா, அண்ணா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, போலின் மதி சித்தப்பா, வதனி சித்தி, பிரான்ஸ் சுபாஸ் சித்தப்பா, கனடா முரளி சித்தப்பா, கொழும்பு சுபாஷினி அன்ரா, பிரான்ஸ் சந்துரு மாமா, மீரா அத்தை, சுவேதா மச்சாள் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் யாவரும் எல்லாம் வல்ல மானிப்பாய் மருதடி விநாயகர் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

தகவல்- ராஜதுரை (அப்பப்பா), கொழும்பு.



# அம்மா

இது ஒரு வித்தியாசமான பறவை..

'அரக்கிறகுப்பறவை' என்று காரணப்பெயரைக் கொண்ட இப்பறவை புறாவைப் பார்க்கிலும் சற்றுப் பருமனானது. இவற்றின் இறக்கைகளில் அரக்கு (மெழுகு) போன்ற புள்ளிகள் காணப்படுவதால் இப்பெயர் (WAXWING) ('வாக்ஸ்விங்') வழங்கப்பட்டுள்ளது.

இப்பறவைகள் வட அமெரிக்கா, கனடா போன்ற பிரதேசங்களில்தான் காணப்படுகின்றன. ஆனால் கடும் குளிர் காலங்களில் தெற்கு நோக்கி இடம் பெயர்ந்து வாழும். இளவேனிற் காலம் வரை தென் பிராந்தியங்களில் வாழ்ந்து இணை தேடிக்கொள்ளும். கருவுற்ற நிலையில் பழைய இடங்களுக்கு மீண்டும் சென்று முட்டையிட்டுக் குஞ்சுகளைப் பொரிக்கும். ஒரே தடவையில் மூன்று முதல் ஐந்து முட்டைகளை இடும்.

சிறு பூச்சிகள், பழங்கள் ஆகியவற்றை உணவாகக் கொள்ளும் இப்பறவை தன் கூடுகளை மிக அடர்த்தியாகவே அமைக்கும். ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளிலும் அரக்கிறகுப் பறவை இனங்களுண்டு. ஜப்பானில் காணப்படும் இப்பறவைகளின் பூர்வீகம் மங்கோலியா என்று ஆய்வாளர்கள் கூறுகின்றன.

பெரும்பாலான பறவைகள் இனிமையாகப் 'பாடும்' ஆனால் இப்பறவைகளின் கீச்சிட்ட- ஒரே பாணி ஓசை சற்றுக் கர்ண கடூரமாக இருக்கும். உடல் அழகு. குரல் மட்டும் சற்று முரடு. அதற்கென்ன!



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை கவிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பார, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஒக்டோபர் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்